# புதிய மழை

## தூறல் - 03

## பிரதேச இலக்கிய விழா – 2019
## சிறப்பு மலர்



வெளியீடு :
பிரதேச செயலகம்
பிரதேச கலாசார அதிகார சபை
மண்முனைப்பற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய மழை

## தூறல் - III

**பிரதேச இலக்கிய விழா - 2019**
**சிறப்பு மலர்**

வெளியீடு
பிரதேச செயலக கலாசார அதிகார சபை
மண்முனைப்பற்று
ஆரையம்பதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்



| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | புதிய மழை |
| **தொகுதி** | : | தூறல் - **III** |
| **மொழி** | : | தமிழ் |
| **நூல் அளவு** | : | B5 |
| **பக்கங்கள்** | : | 71 |
| **தொகுப்பு** | : | **மௌலவி A.L.முசாதிக்** |
| | | கலாசார அபிவிருத்தி உதவியாளர் |
| | | **திருமதி சங்ஹீத்தா கஜமுகன்** |
| | | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| **கணணி வடிவமைப்பு** | : | **திருமதி.கயல்விழி கருணாவசந்த** |
| | | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| அட்டைப்படம் | : | ஜெஸ்லியா அச்சகம் |
| பதிப்பு | : | 2019 |
| **வெளியீடு** | : | பிரதேச கலாசார அதிகார சபை மண்முனைப்பற்று. |
| **மலருக்கான அனுசரனை** | : | கலாசார அலுவல்கள் திணைக்களம், அஷ்ஷூப்பான் நலன்புரிச்சங்கம் |
| **அச்சிட்டோர்** | : | ஜெஸ்லியா அச்சகம், ஆரையம்பதி |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



உணர்ச்சி பூர்வமான உள்ளம் படைத்த மானிட சமூகத்தை உருவாக்குவதற்கான சூழலை ஏற்படுத்துவதே கலையின் நோக்கம் ஆகும். அந்த வகையில் மனக்கிளர்ச்சியினை கட்டுப்படுத்திய மென்மையான உணர்வுமிக்கதோர் சமூகத்தை உருவாக்குவதில் கலையின் பங்களிப்பு அளப்பெரியதாகும்.

புராதன பண்டிதர்கள் உலகை ஒரே கலைக்கூடமாக நோக்கினர் அவர்கள் அவற்றை உலகளாவிய கலை, சிற்பம், நன்நெறிகளையும் விஞ்ஞானமும் என வகைப்படுத்தினர். அவ் அழகியற்கலை கவின்கலை என்பன கலை இலக்கிய நூல் வடிவங்களாக தொழிநுட்ப பின்னணியில் மண்முனைப்பற்று பிரதேச செயலகமும், கலாசார அதிகார சபையும் இணைந்து ஏற்பாடு செய்கின்ற பிரதேச இலக்கிய விழாவில் புதிய மழை எனும் நூலை வெளியிடுவதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கை கலைத்துறையில் கலைஞர்களை உற்சாகப்படுத்துதல் தேசிய அளவிலான வளர்ச்சியில் பரந்த விளம்பரம் மற்றும் பொது மக்களின் மனப்பான்மை என்பனவற்றை நனவாக்கும் பிரதேச இலக்கிய விழாக்கள் சிறந்ததொரு தெளிவான அனுபவமாகும். கலைஞர்களை ஊக்குவித்தல் மற்றும் இலக்கியம் படைத்தல் ஆகியவற்றை மூத்த கலைஞர்களிடையே மெருகேற்றுவதில் கலாசார அதிகார சபைகள் பாரிய பங்களிப்பு செய்கின்றன என்றால் அது மிகையாகாது. பிரதேச கலாசார விழாக்களை ஏற்பாடு செய்கின்ற கலாசார உத்தியோகத்தர்கள், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அந்த வகையில் மண்முனைப்பற்று பிரதேச கலைஞர்களை கௌரவிக்கும் முகமாக சிறப்பு மலர் ஒன்றை வெளியிட மண்முனைப்பற்று பிரதேச செயலக கலாசார அதிகார சபை எடுத்த முயற்சியானது வரவேற்கத்தக்கது. இதன் மூலம் கலை ஆக்கத்தினை வெளிப்படுத்துகின்ற அனைத்துப் படைப்புக்கள் மற்றும் கலைஞர்களின் கலை வாழ்க்கை வழிகளை மேலும் பிரகாசப்படுத்துவதால் தேசிய தரத்தின் கலைஞர்கள் உருவமெடுக்க இறைவன் அருள் அவர்கட்கு கிடைக்க மேண்டுமென பிராத்திக்கின்றேன்.

**அனுஷா கோகுல பர்ணாந்து**
**கலாசார அலுவல்கள் திணைக்களம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



மண்முனைப்பற்று பிரதேச செயலகமும் பிரதேச கலாசார அதிகாரசபையும் இணைந்து நடாத்தும் கலாசார விழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் "புதியமழை தூறல்III" மலருக்கும் இம் மலர் தாங்கிவருகின்ற "சமூகவாழ்வியல் நாட்டாரியல்"எனும் சிறப்பு மலருக்கும் வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். பாமர மக்களினால் மெட்டமைத்து செவிக்கும், மனதிற்கும் இதமாக பாடப்பட்டு வந்த நாட்டுப்பாடல்கள் இன்று எம்மத்தியில் அருகி விட்டன என்றே கூறலாம். எம்மவர்களின் தனித்துவம், கலையம்சம், பாரம்பரியம், மிடுக்கு என்பன மேலோங்கியிருப்பது இத்தகைய பாரம்பரிய வாழ்வியல் கலைகளில் என்றால் மிகையாகாது. தாலாட்டுப்பாடல், ஏர்ப்பாடல், அருவி வெட்டும் பாடல், மீனவப்பாடல், ஒப்பாரிப்பாடல், கும்மிப்பாடல், காவடிப்பாடல், கோலாட்டப்பாடல், அறுவைப்பாடல், விளையாட்டுப்பாடல், தொழிற்பாடல், மழைப்பாடல், குரவைப்பாடல் என கூறிக்கொண்டே போகலாம். இத்தகைய இனிமையான கலையம்சங்களைத் தொலைத்தவர்களாகவும், மனநிம்மதியை இழந்தவர்களாகவும் இன்றைய நவீன பொழுது போக்கு அம்சங்களுள் மூழ்கிப் போனவர்களாகவே நாம் வாழ்ந்து வருகின்றோம்.

இப் பிரதேச மக்களின் கலை இலக்கியப் பண்பாடுகள் சார்ந்த உணர்வுகளின் வெளிப்பாடாக இம் மலர் அமையும் என்பது தெளிவு. எமது மூதாதையர் எம்முடன் வாழும் போது நமக்காகவும், நமது தலைமுறையினருக்காகவும் விட்டுச் செல்கின்ற இத்தகைய கலையம்சங்களை ஊக்குவிப்பதும், அழிந்து விடாமல் பாதுகாப்பதும் அனைவரினதும் பாரம்பரியமான கடமையாகும்.

ஒரு பிரதேசத்தின் கலை இலக்கிய கலாசார விழுமியங்களை பரிணமிக்கும் ஆவணங்களை பொதிந்து வருங்கால சந்ததியினரின் கைகளில் தவளும் ஒரு சான்றாகவும் இவ்வருட பிரதேச இலக்கியவிழா போட்டியில் பங்குபற்றி முதலாம் இடத்தினை பெற்ற ஆக்கங்களையும் தாங்கி இம் மலர் வெளியிடப்படவிருப்பது சிறப்பு. இந்நூலை முயற்சிக்க முன்னின்று உழைத்த பிரதேச செயலாளர், கலாசார அதிகாரசபை உறுப்பினர்கள் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.மா.உதயகுமார்**
அரசாங்க அதிபரும் / மாவட்ட செயலாளரும்
மட்டக்களப்பு மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



சமூகத்தில் தனிமனித சிந்தனைகளை வளர்ப்பதற்கும் எம்மை சமூகத்தில் பயனுள்ளவர்களாக மாற்றி சமூக ரீதியில் ஒரு நற்பிரஜையாக நம்மை அடையாளப்படுத்தி கொள்வதற்கும் இலக்கியங்களின் பங்களிப்பு தலையாயது. இவ்வகையில் சமூக மேம்பாட்டை வளர்க்க உதவுகின்ற இலக்கியங்கள் மென்மேலும் படைக்கப்படுவது அவசியமான ஒன்றாகும். இதற்கிணங்க பிரதேச மட்டத்தில் நடாத்தப்படுகின்ற இலக்கிய விழாவானது சிறந்த சமூக சிந்தனையுள்ள ஆக்கங்களை வெளியிடுவதுடன் இலக்கிய ஆர்வலர்களதும் குறிப்பாக சிறுவர்களதும் இலக்கிய திறன்களை வளர்ப்பதற்கும் பங்களிப்பு செய்வதாக அமைகின்றது.

இதற்கமைவாக மண்முனைப்பற்று பிரதேச மட்டத்தில் நடாத்தப்படுகின்ற இலக்கிய விழா போட்டியானது வருடா வருடம் சிறப்பாக இடம்பெறுவதுடன், பிரதேச மட்டத்தில் அதில் பங்குபற்றி வெற்றி பெறுகின்ற இலக்கிய ஆர்வலர்களுக்கு பரிசில்கள் வழங்குகின்றமை இலக்கியத்துறை வளர்ச்சிக்கு பெருமை சேர்க்கும் ஒரு விடயமாக அமைந்துள்ளது. இப்போட்டியினைப் பொறுத்தவரையில் முதலிடம் பெறுகின்ற ஆக்கங்கள் மாவட்ட மட்ட தெரிவுக்காக அனுப்பி வைப்பதுடன் மாவட்ட ரீதியில் முதலிடம் பெறுகின்ற ஆக்கங்கள் தேசிய மட்டத் தெரிவுக்காக அனுப்பி வைக்கப்படு கின்றமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

கடந்த 2017 ஆம் ஆண்டில் விஷேடமாக கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சிறந்த சிந்தனை வழிகாட்டல்களுக்கு அமைவாக இலக்கிய ஆர்வமுடையோர் மற்றும் இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் "புதிய மழை" எனும் நூல் வெளியிடப்பட்டிருந்தது. தொடர்ச்சியாக 2018 இல் "புதிய மழை தூறல் II" எனும் நூல் வெளியிடப்பட்டு இவ்வருடம் 2019 இல் இதன் தொடர்ச்சியாக "புதிய மழை தூறல் III" எனும் நூல் வெளியிடப்படவிருக்கின்றமை குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாக அமைந்துள்ளது. இந்நூலில், இலக்கிய விழாவில் முதலிடம் பெற்ற ஆக்கங்களும் சமூகவியல் மற்றும் நாட்டாரியல் ஆக்கங்களும் பிரசுரிக்கப்படவுள்ளமை மிகுந்த பாராட்டுக்குரிய விடயமாகும்.

இவ்வாறாக இவ்வருடம் இடம்பெறவிருக்கின்ற இலக்கிய விழா நிகழ்விற்கும் அந்நிகழ்வில் வெளியிடவுள்ள "புதிய மழை தூறல் III" எனும் நூல் வெளியீட்டிற்கும் ஆசிகளையும், வாழ்த்துக்களையும் வழங்குவதுடன் தொடர்ந்து இவ்வாறான இலக்கியம் தொடர்பான செயற்பாடுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதற்கு ஊக்குவிப்பதுடன் இறைவனை பிராத்திக்கின்றேன்.

**திருமதி.ந.சத்தியானந்தி**
பிரதேச செயலாளரும்,கலாசார அதிகார சபைத்தலைவரும்
பிரதேச செயலகம், மண்முனைப்பற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச கலாசார அதிகார சபை விபரம்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திருமதி.சத்தியானந்தி நமசிவாயம்<br>(பிரதேச செயலாளர்) |
| பதில் தலைவர் | : | திருமதி.சிவராஜரட்ணம் லோகினி<br>(உதவி பிரதேச செயலாளர்) |
| உபதலைவர் | : | திரு.த இன்பராசா |
| செயலாளர் | : | (அமரர்) திரு.சி.க.செல்லத்தம்பி |
| உபசெயலாளர் | : | திரு.ஜீ.எழில்வண்ணன் |
| பொருளாளர் | : | திரு.செ.ஏகாம்பரம் |
| ஒருங்கிணைப்பாளர்கள் | : | ஜனாப்.ஆ.லெ.முசாதிக்<br>(கலாசார அபிவிருத்தி உதவியாளர்)<br>திருமதி.சங்ஹீத்தா கஜமுகன்<br>(அபிவிருத்தி உத்தியோகத்தர்)<br>திருமதி.வளர்மதி ராஜ்<br>(கலாசார உத்தியோகத்தர்)<br>திருமதி.கயல்விழி கருணாவசந்த<br>(இந்துகலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்)<br>திருமதி. சசிகலா சிவபாதம்<br>(இந்துகலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்) |
| ஆலோசகர்கள் | : | சிவஸ்ரீ.கோ. கிரிதரக்குருக்கள்<br>மௌலவி.A.C.M.றிபாய் |
| உத்தியோகபூர்வ அங்கத்துவம் | : | ஜனாப்.M.M. முஹமட்.ஜரூப்<br>(நிர்வாக உத்தியோகத்தர், கிராமசேவை) |
| உறுப்பினர்கள் | : | திரு.மூ. அருளம்பலம்<br>திரு.ந. கந்தசாமி<br>ஜனாப்.M.I.A. முஸ்தபா<br>திரு.ச. பிரதீபநாதன்<br>திரு.ஐ.மகேசானந்தம்<br>திரு.த.மலர்ச்செல்வன்<br>திரு.உ.உதயகாந்<br>திருமதி வி. அணுரேகா<br>திருமதி.வ.பாலச்சந்திரன்<br>திரு.ச.மணிசேகரன்<br>திரு.பா.கிஸ்கந்தமுதலி<br>திரு.பெ.சிவசுந்தரம்<br>திரு.ந.பிறேமகுமார்<br>ஜனாப்.A.C.ஆ.பாஹிம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## தேசிய இலக்கியப் போட்டி - 2019


1.அமைதியான ஒழுக்கமான மனிதர்கள்........ 10

2. சிறந்த தேசத்தின் அவலம்........ 14

3. சமூகவாழ்வியலில் நாட்டார் தொழில் முறைசார்ந்த........ 15

4. சிறந்த தேசத்தை கட்டியெழுப்புவதில் ........ 18

5. தொழில்முறை சார்ந்த நாட்டார்பாடல்........ 23

6. ஈழநாட்டுக்குறம்........ 26

7. பெண்மை போற்றும் தாய்மை........ 31

8. ஒன்றுபடுவோம்........ 34

9. மண்முனைப்பற்று பிரதேசத்தில் ஆரையம்பதி........ 35

10. அண்ணாதாசன் ........ 42

11. காதல் ரஸ உணர்ச்சியில்........ 54

12. சிறுவர் இலக்கியம்........ 57

13. நாட்டார் பாடல்கள்........ 61

14. மனிதம் மரணிக்கவில்லை........ 64

15. தாலாட்டுப் பாடல்கள்........ 68

16. தன்வினை தன்னைச் சுடும்........ 70




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய இலக்கியப் போட்டி - 2019

## பிரதேச மட்ட பெறுபேறுகள்

| தொ இல | போட்டியின் பெயர் | பிரிவு | 1ம், 2ம், 3ம், இடங்களைப் பெற்ற போட்டியாளர்கள் | பாடசாலையின் பெயர் |
|---|---|---|---|---|
| 01 | கையெழுத்துப் போட்டி | பாலர் பிரிவு | 1.ரு.ஸதுர்நாத் | மட்/நவரத்தினராசா வித்தியாலயம் |
| | | | 2.பி.கே.இதுாஷா ஆஞ்சலி | மட்/நவரத்தினராசா வித்தியாலயம் |
| | | | 3.சு.லத்திக்கா | மட்/சிவமணி வித்தியாலயம் |
| 02 | கையெழுத்துப் போட்டி | சிறுவர் பிரிவு | 1.வி.அஸ்வினி | மட்/நவரத்தினராசா வித்தியாலயம் |
| | | | 2.பி.ரித்தனா | மட்/நவரத்தினராசா வித்தியாலயம் |
| | | | 3.சி.சுதேஷ்கா | மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம் |
| 03 | கவிதைபாடல் | | 1.ஜி.அபிஷ்னயா | மட்/ஆரையம்பதி இ.கி.மி.மகா வித்தியாலயம் |
| | | | 2.யோ.டிக்ஷன் | மட்/மாவிலங்கந்துறை விக்னேஸ்வரா வித்தியாலயம் |
| | | | 3.ம.கோபிகா | மட்/மாவிலங்கந்துறை விக்னேஸ்வரா வித்தியாலயம் |
| | | | 3.க.நமீதா | மட்/மாவிலங்கந்துறை விக்னேஸ்வரா வித்தியாலயம் |
| 01 | கட்டுரைப் போட்டி | கனிஸ்டபிரிவு | 1.க. சாரு | மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம் |
| | | | | |
| | | | | |
| 05 | கவிதை எழுதுதல் போட்டி | | 1.கி.யுதர்சன் | மட்/ஆரையம்பதி மகா வித்தியாலயம |
| | | | 2.மோ.தர்சிகா | மட்/ஆரையம்பதி இ.கி.மி.மகா வித்தியாலயம் |
| | | | 3.ந.மோனிஷா | மட்/மாவிலங்கன்துறை விக்னேஸ்வரா வித்தியாலயம் |
| 06 | கவிதை பாடல் போட்டி | | 1.லோ.டனிஷா | மட்/ஆரையம்பதி இ.கி.மி.மகா வித்தியாலயம் |
| | | | 2.இ.இந்துஜா | மட்/மாவிலங்கந்துறை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | விக்னேஸ்வரா வித்தியாலயம் |
| | | | | |
| 07 | கட்டுரைப் போட்டி | சிரேஷ்ட பிரிவு | 1.லி.குவேஜிதா | மட்/புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம் |
| | | | 2.ஜீ.றிவிசா | மட்/ஆரையம்பதி இ.கி.மி.மகா வித்தியாலயம் |
| | | | 3.ம.அனுருஷா | மட்/புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம் |
| 08 | பாடல் நயத்தல் போட்டி | | 3.மு.ல.பாத்திமா சுர்ஜா | மட்/ம/ம/பாலமுனை அலிகார் மகா வித்தியாலயம் |
| | | | 1.ரி.குவேனுகா | மட்/ஆரையம்பதி இ.கி.மி.மகா வித்தியாலயம் |
| | | | 2.ஜீ.றிவிசா | மட்/ஆரையம்பதி இ.கி.மி.மகா வித்தியாலயம் |
| 09 | நாடகப் பிரதி எழுதுதல் போட்டி | | 1.ரி.குவேனுகா | மட்/ஆரையம்பதி இ.கி.மி.மகா வித்தியாலயம் |
| | | | 2.தே.உ_ஷாந்தினி | மட்/தாழங்குடா ஸ்ரீ விநாயகர் வித்தியாலயம் |
| | | | 3.தெ.ஹர்ச்சிக்கா | மட்/தாழங்குடா ஸ்ரீ விநாயகர் வித்தியாலயம் |
| 10 | பாடல் ஆக்கப் போட்டி | திறந்த மட்டம் | 1.திரு.த.இன்பராசா | புதுக்குடியிருப்பு |
| | | | 2.திரு.மூ.அருளம்பலம் | ஆரையம்பதி |
| | | | 3.திரு.ஐ.மகேசானந்தம் | ஆரையம்பதி |
| 11 | நாட்டார் கலை போட்டி | | 1.திரு.மூ.அருளம்பலம் | ஆரையம்பதி |
| | | | 2.திரு.த.இன்பராசா | புதுக்குடியிருப்பு |
| | | | | |
| 12 | இலக்கிய விவரணப்போட்டி | | 1.திரு.மூ.அருளம்பலம் | ஆரையம்பதி |
| | | | | |
| | | | | |
| 13 | சிறுகதை போட்டி | | 1.மு.இ.சல்மாநாச்சி | காங்கேயனோடை |
| | | | 2.திரு.த.இன்பராசா | புதுக்குடியிருப்பு |
| | | | 3.திரு.மூ.அருளம்பலம் | ஆரையம்பதி |
| 14 | சிறுவர் கதையாக்கம் | | 1.திரு.த.இன்பராசா | புதுக்குடியிருப்பு |
| | | | 2.திரு.மூ.அருளம்பலம் | ஆரையம்பதி |
| | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியான ஒழுக்கமான மனிதர்களைக் கொண்ட தேசத்தை கட்டியெழுப்பும் கலை மற்றும் இலக்கியம்

ஆரம்பகால மனிதர்கள் அமைதியான ஒரு சிறந்த மனிதர்களாக வாழ அவர்களுக்கு வழி வகுத்து கொடுத்தது அக்கால இலக்கிய மரபுவழி முறைகளும் அக்கால பண்பாட்டு அம்சங்களும் அத்தோடு எம்மிடையே கலந்து ஒருமித்து சேர்ந்து இருக்கின்ற கலையம்சங்களுமே ஆகும். ஆகவே அக்கால வாழ்க்கை முறையினை எடுத்து நோக்கும் போது எம் மக்கள் பெரும்பாலும் தொன்று தொட்டு வந்த பாரம்பரிய முறையினையே கடைப்பிடித்தனர். அவற்றை கொண்டே வாழ்க்கை முறையினையும் அமைத்தனர். அவற்றை எடுத்து நோக்கும் போது நாம் பிறந்ததில் இருந்து இறப்பு வரைக்கும் நடக்கும் சம்பிரதாய நடைமுறைகள் அதே போல் கோயில் நடைமுறைகள் என்பனவும் இவற்றில் முக்கியம் பெறுகின்றது. இவை மக்களிடையே சிறந்த ஒழுக்கத்தை கடைப்பிடிக்க உதவுகின்றது.

இதே போல் நாம் இலக்கிய நூல்களின் தொகுப்புக்களில் நாலடியாரை எடுத்து நோக்கும் போது அங்கே ஒவ்வொரு மனிதனின் நன் நடத்தை பற்றியும் அவற்றினால் பெறும் நன்மை பற்றியும் கூறப்படுகிறது. அத்தோடு ஒரு மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் எனவும் சிறந்த ஒரு மனிதனாக வாழ ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் பற்றியும் எடுத்துக் கூறப்படுகிறது. அது மட்டுமில்லாமல் இந்த நாலடியாரின் கருத்துக்கள் எமது சமுதாயத்தில் நல்ல அமைதியான சிறந்த சமூகத்தை உருவாக்க வழிவகுக்கிறது என்றால் மிகையாகாது. எமது வாழ்வில் பெரும்பாலான விடயங்கள் இலக்கிய நூல்களின் வழிமுறையிலே நடக்கிறது. இலக்கியங்கள் சொல்லும் பண்பாட்டு அம்சங்கள் வாழ்க்கைத் தத்துவங்கள், கலை அம்சங்கள், அக்கால நாகரீக முறைகள் அதுமட்டும் இல்லாமல் மனிதர்களாகிய நாங்கள் எவ்வாறு வாழ வேண்டும் ஏனைய சமுதாயத்தினரை எவ்வாறு வழிநடத்திச் செல்ல வேண்டும் என்றும் கூறுகிறது. இவ்வாறு மட்டும் இல்லாமல் நாம் வாழும் போது செய்ய வேண்டிய நற்கருமங்கள் பற்றி எவ்வளவோ சொல்கிறது. அக் கருமங்கள் எவ்வாறு நிகழ்த்த வேண்டும் என்றும் சொல்கிறது. அவற்றை ஒழுங்காக கடைப்பிடிக்காவிட்டால் ஏற்படும் தீமைகள் பற்றியும் சொல்கிறது.

இவற்றை எல்லாம் பற்றி இந்த இலக்கிய நூல்கள் சொல்கிறது. இந்த இலக்கிய நூல்களை கற்கும் இடத்து ஒவ்வொரு மனிதனும் சிறந்த சமுதாய உறுப்பினராக மாறமுடியும். அவ்வாறு மாறும் மனிதர்கள் ஏனைய கல்வி அறிவு இல்லாத மனிதர்களை மாற்ற முடியும், இதனால் எமது சமுதாயத்தில் ஒரு சிறந்த மனித இனத்தை பெற வாய்ப்பு கிடைக்கும் ஒரு அமைதியான சமுதாயம் உருவாகும். பெரும்பாலும் சமுதாயங்கள் கெட்ட நிலைக்கு இட்டுச் செல்வதற்கு எம் மக்களிடையே காணப்படும் ஏற்றத் தாழ்வுகளே காரணமாகும். எமது சமுதாயம் எமது இலக்கிய மரபுகளை விட்டு விட்டு ஏனைய கலை அம்சங்களே இலக்கிய முறைகளோடு சேருவதுதான் காரணமாகும். இதற்கு காரணம் எமது மேலைத்தேய கலாசார முறையும் கலை அம்சங்களுமே காரணமாகும். இவற்றை மிகவும் இலகுவான முறையில் கடைப்பிடிக்கவும் வாழவும் முடியும் என்பதே இக்கால மக்களின் கொள்கையாகும். இவர்கள் எந்த விடயம் மிகவும் எளிதாக உள்ளதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை நடைமுறைப்படுத்திக் கொண்டு தமது வாழ்க்கை நடவடிக்கைகளை வாழ்வதே தமது வாழ்க்கையாக கருதுகிறார்கள்.

இவர்களுக்கு ஒரு நிம்மதியான சமுதாயமோ நல்ல ஒரு தேசமோ தேவை இல்லை. தமது கருமம் இலகுவாக முடிந்தால் போதும் என்பதே எண்ணமும் வாழ்க்கையுமாகும். ஆனால் இந்த முறை மாற வேண்டும் அதாவது பழைய கால நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். எமது வருங்கால சமுதாயத்திற்காக எமது வாழ்க்கையை அர்ப்பணித்தாகத்தான் வேண்டும். அதாவது எமது முன்னோர் கடைப்பிடித்த பழைய கலை அம்சங்களையும் இலக்கிய முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். அப்படியானால் மாத்திரமே நாம் நல்ல சமுதாயத்தையும் எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளையும் உருவாக்க முடியும் இல்லாவிட்டால் இச் சமுதாயம் சீர்கேடான முறைக்கு தள்ளப்பட்டு எமது வருங்கால சந்ததிகள் இல்லாமல் இழந்து ஏதோ ஒரு கொடூரமான முறைக்கு தள்ளப்படுவோம் என்பதை காணமுடியும். நிம்மதியான பிள்ளைகளையோ வாழ்க்கை முறைகளையோ காணமுடியாது.

நாம் அக்காலத்தை எடுத்து நோக்கும் போது சொன்னது சொன்னபடியே எல்லாமே நடக்கும். உதாரணத்திற்கு எமது மகாபாரத போர், அதே போன்று இராமாயணம் போன்ற சிறந்த இலக்கிய காப்பியங்கள் இதற்கு சிறந்த ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அக்காலத்தில் அநீதியான செயற்பாடுகளுக்கு இடமில்லை. அத்தோடு அது குறைவாகவே காணப்பட்டது. அக்கால மக்கள் பிறர் பற்றியும் அவர்கள் நலம் பற்றியும் கருத்தில் கொண்டமை அவர்கள் ஒழுக்கமாக நேர்மையாக வாழ்வதற்குக் காரணமாகும். அத்தோடு பாவ, புண்ணியம் போன்ற நல்ல விடயங்களையும் சிறந்த பண்பாட்டையும் கொண்டிருந்தனர். ஆனால் தற்காலத்தில் அவ்வாறான செயலுக்கு இடமே இல்லை. தமது காரியம் முடிந்தால் சரி என்றே வாழ்க்கை வாழுகின்றனர். அமைதியான ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டும் என்றால் நாம் மீண்டும் எமது பொது இடங்களிலேயே வருகின்ற நிகழ்வுகளிலே எமது மருவிப் போய்க் கொண்டு இருக்கும் எமது மக்களிடையே மீண்டும் மீண்டும் பிரபல்யப்படுத்த வேண்டும். அவற்றை உருவாக்க வழிவகுக்க வேண்டும் இதற்கு எல்லா துறைசார்ந்தவர்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

அவ்வாறே ஆனால் ஒரு சிறந்த சமூகத்தை உருவாக்க முடியும். எமது சமய நிகழ்வுகளே இதற்கு முக்கிய இடம் பெறுகிறது. அது எந்த சமயமாக இருந்தாலும் சமயம் சார்ந்த விடயத்திற்கே முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இவ்வாறு சமயத்தின் வழியே நாம் சென்று அமைதியான நல்ல விடயங்களை உருவாக்க முடியும் என்பதே உண்மை . இவற்றில் சிறந்த ஒழுக்கமுறை கடைப்பிடிக்கப்படுகிறது. அத்தோடு சிறந்த வழிமுறையும் எடுத்துக் கூறப்படுகிறது. நன்மை தீமைகள் உணர்த்தப்படுகிறது. இவ் நடைமுறைகளை ஒழுங்கான முறையில் எவன் கடைப்பிடிக்கிறானோ அவன் சமுதாயத்தில் ஒரு சிறந்த ஒழுக்கமான மாமனிதனாக கருதப்படுவான் என்பதில் ஐயம் இல்லை. இவற்றிற்கெல்லாம் காரணம் எமது சமயம் சார்ந்த கலை அம்சங்களேயாகும். அமைதியான ஒழுக்கமான ஒரு சமுதாயம் உருவாக வேண்டும் என்றால் எல்லோரும் ஒன்றாக செயற்படவேண்டும். அவற்றை எவ்வாறான வழி முறையில் கொண்டு செல்லலாம் என்பதை உணர வேண்டும் .அதனை விடுத்து முரண்பாடான முறையில் சென்றால் வெற்றி அழிக்காது அந்த நோக்கம். அதாவது எமது சமுதாயம் தற்காலம் எதை விரும்புகிறதோ அதன் வழியில் எவ்வாறு இலகுவாக இவ்விடயங்களை புகுத்தலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றில் இருந்தது எவ்வாறு எமது மக்களை வெளிக்கொண்டு வரலாம் என்ற விடயத்தை நாம் முதலில் முன் வைக்க வேண்டும் அது பற்றியும் சிந்திக்க வேண்டும். இவ்வாறான நடைமுறைகள் எமது இலக்கிய, இலக்கண முறையிலும் அவ்வாறே கலை நிகழ்வுகளிலும் காணலாம். இவற்றை தற்காலத்தில் காணப்படும் நவீன தொழில் நுட்ப முறையிலும் நடைமுறைப்படுத்தலாம். அதுமட்டுமன்றி சிறந்த கல்விமான்களின் வழிகாட்டலின் மூலமும் நடைமுறைப்படுத்தலாம். இவை மக்களின் வாழ்க்கையில் எவ்வளவு இடம் பிடிக்கிறது என்பதை உணர வேண்டும். அவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டும். அப்போதே இவற்றை நடைமுறைக்கு கொண்டு வரலாம். இல்லாமல் வீணான வழியில் சென்று மக்களிடையே தன்நிறைவு பெறாவிட்டால் அது சாத்தியமாகாது என்பதை அறிய முடியும்.

ஒரு சிறந்த சமுதாயமொன்று உருவாகும் என்றால் அங்கு சிறந்த கல்விமுறையும் கலை பண்பாட்டு அம்சமும் சிறந்து விளங்குகிறது என்பது தெட்டத் தெளிவாகும். எனவே ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்குவதும் ஒரு நல்ல மனிதனை உருவாக்குவதும் கல்வியே ஆகும். அது கலை வடிவிலேயே இருந்திருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்பது கருத்தாகும். மக்களாகிய நாம் ஒரு வழிமுறையிலேயே செல்வோமானால் அங்கு மன வேதனையோ பயங்கரமோ அடையத்தேவையில்லை. வேதனை இல்லை அங்கு சந்தோசமான வாழ்க்கையே இடம்பெறும். இதனையே எமது முன்னைய மக்கள் வாழ்ந்தனர். கலை நிகழ்வுகளாக கூத்து, நடனம், நாடகம் போன்ற களியாட்டங்களில் ஈடுபட்டு இருந்தனர். அதனால் மக்கள் நிம்மதியாக அமைதியாக வாழ்ந்தனர். ஆனால் இப்போது அப்படி இல்லாமல் இக்கலை நிகழ்ச்சிகள் குறைவடைந்து மக்களிடையே குரோத மனப்பான்மை உருவாகி பல்வேறு வகையான வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டு, மன வேதனையான சம்பவங்களை உருவாக்கி சமுதாயத்தை சீர்குலைக்கின்றனர். இவ்வாறான சம்பவங்களை உருவாக்க தூண்டு கோலாக அமையும் காரணிகளை நிறுத்திவிட்டு எமது பழைய முறைகளையே எடுத்துக்காட்டி எமது மக்களை நன்முறைப்படுத்த வேண்டும்.

இவ்வாறு எல்லா விதமான சமயங்களுக்கும் வழிமுறைகள் உண்டு. நாம் அச் சமயங்கள் மூலம் போதிக்கப்படும் சிறந்த வழிமுறைகளை பின்பற்றி நடத்தல் வேண்டும். அவ்வாறு பின்பற்றுவதன் மூலம் ஒரு சிறந்த நல்ல மனிதர்களை உருவாக்கமுடியும். அதன் மூலம் ஒரு சிறந்த அநீதிகள் அற்ற வன்முறையில்லாத சமூகத்தையும் அமைதியான ஒரு நாட்டையும் உருவாக்க முடியும். அதாவது ஒரு அமைதியான நாட்டை உருவாக்குவதில் சமய போதனைகளும் முக்கிய இடம் வகிக்கிறது.

கலை அம்சம் என்பதன் மூலம் மக்களை நல்வழிப்படுத்தலாம். அவர்களை சிறந்த மனிதர்களாக மாற்றலாம் என்பதை அவர்களின் நடைமுறைக்கு சாத்தியமாக அமையும் என்பதை தெளிவு பெற வேண்டும். இதை எம் மக்களிடையே வளர்க்க வேண்டும். இது எமது சிறியவர்களிடையே முதலில் பேணப்பட வேண்டும். அவ்வாறு பேணப்பட்டு வந்ததால் மாத்திரமே அது நடைமுறைக்கு சரிவரும் என்பது எடுத்துக்காட்டாகும். அவர்கள் பெரியவர்களாக வரும்போதும் அவற்றை கடைப்பிடிப்பார்கள். இல்லாவிட்டால் இந்த கலை நிகழ்வுகளில் பங்கு பெற மாட்டார்கள். அவை இடை நடுவே நின்றுவிடும் முற்றுமுழுதாக பயனளிக்காது. இதே போன்று இலக்கிய முறைப்படி போனால் அதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுமையான முறையும் இருக்கும் மிக இலகுவான முறையும் இருக்கும் அதில் மக்களால் கடைப்பிடிக்க முடியுமான வரையிலேயே நடைமுறைபடுத்த வேண்டும் மக்களை கட்டாயப்படுத்தக்கூடாது.

நாம் மக்களை கட்டாயப்படுத்தினால், அவர்கள் தற்காலத்தைப் போன்றே மேலைத்தேய கலாச்சார நடைமுறைக்கு அடிபணிந்து சமுதாய சீர்கேடுக்கு வழிவகுத்து நாட்டின் நிம்மதியை மட்டுமல்ல ஏனைய சமுதாயத்தினரையும் அவலத்திற்கு இட்டுச் செல்வார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

எனவே நல்லதொரு சமுதாய மனிதனைக் கொண்ட தேசமாக மாற வேண்டுமானால் அமைதியான நல்ல பண்பான முறையிலேயே எந்த விடயத்தையும் கொண்டு செல்ல வேண்டும். அவர்களுக்கு ஆசையைத் தூண்டும் விதத்தில் எந்த வித தவறான காரியத்திலும் இறங்கக் கூடாது. அது தீமையில் முடியும் என்பது கருத்தாகும். எனவே இலக்கியமும் கலை அம்சமும் நல்ல மனிதரை உருவாக்கக் கூடிய அனைத்து விடயங்களையும் கொண்டு காணப்படுகிறது. அவற்றை ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத்தினால் மாத்திரமே முடியும். அத்தோடு மத ரீதியான போட்டி இருந்தால் நாம் சிறந்த சமுதாயத்தையோ அல்லது ஒரு நல்ல அமைதியான சந்ததியினரையோ உருவாக்க முடியாது அதை அனைவரும் உணர்தல் அவசியமாகும். எந்த வித ஏற்பாடும் இல்லாமல் சிறந்த சமுதாயத்தை உருவாக்குதல் என்றால் முடியாத ஒரு காரியமாகும். இதற்கு ஒரு முன் மாதிரி வேண்டும் அவற்றை நடை முறைப்படுத்த ஒரு அமைப்பு வேண்டும். அது ஏனைய சமுதாயத்தையோ மதத்தினையோ எதிர்ப்பதாகவோ அல்லது சீர்குலைப்பதாகவோ இருக்கக் கூடாது. நாம் எடுக்கும் ஒவ்வொரு கருத்துகளும் பாதகமான முறையில் இருக்கக் கூடாது. அவை எவ்வளவுக்கு மக்களுக்கு நன்மை பயக்கிறதோ அவ்வளவுக்கு நல்லது. இதனை சமுதாயமே மதிக்கும் அவற்றை ஏற்று நடக்கும் என்பதை கருத்தில் கொண்டே ஆரம்பிக்க வேண்டும்.

எனவே நல்லதொரு சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கும் அமைதியான சூழலை உருவாக்குவதற்கும் நாம் சமய போதனைகளை ஏற்று நடத்தல் வேண்டும். இப் போதனைகள் சிறந்த மனிதனை உருவாக்குவதற்கு உதவுகின்றன. அத்தோடு எமது பண்டைய கால மக்களின் பாரம்பரிய பண்பாட்டு கலை அம்சங்களை பின்பற்றி பேணிப்பாதுகாப்பதன் மூலமும் ஒழுக்கமான சமுதாயத்தை உருவாக்க முடியும் எனவே இந்த இலக்கியங்களும் கலைகளும் பல்வேறுபட்ட வழி முறைகளில் ஒழுக்கமான அமைதியான சிறந்த மனிதர்களையும் சிறந்த ஒரு நாட்டையும் உருவாக்க உதவுகிறது. ஆதலால் இவற்றை ஒழுங்கான முறையில் கடைப்பிடிப்பதன் மூலம் சிறந்த தேசத்தை உருவாக்க முடியும்.

கட்டுரை
கனிஷ்டபிரிவு
முதலாமிடம்

**செல்வன். கருநாநிதி சாரு**
மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த தேசத்தின் அவலம்

சினம் இன்றி வாழ்வதன் காலம் - அதுவே
சிறந்த தேசத்தின் அடையாளம்
தீவிரவாதத்தால் தேசம் வெடிக்கிறதே - அதனால்
தீண்டப்பட்ட உறவுகள் வலியால் துடிக்கிறதே

நாட்டில் விளையுதே நச்சுப்பயிர் - அதனால்
நாளும் தவிக்குதே நல்ல உயிர்
தேசத்துரோகிகள் வாழ்வதற்கான காலம் - அதுவே
தேனான மனிதர்கள் வீழ்வதன் அவலம்

ஆட்சியில் சிலர் போடுவது வேசமே - அதனால்
அழியப்போவது நம் அழகான தேசமே
பயங்கரவாதங்கள் நித்தம் உதிக்கிறதே - அதனால்
பறிபோன உள்ளங்களின் இரத்தம் கொதிக்கிறதே

நல்லவற்றில் நாசம் பகைக்கிறதே - அதில்
நகரத் தெரியாமல் தேசம் திகைக்கிறதே
பயங்கரவாதிகள் அருந்தும் தண்ணீர் - அது
பசியால் வருந்தும் அப்பாவிகளின் கண்ணீர்

காகங்கள் கண்ணீரில் கரையுதே - அதற்கு
காலங்கள் கடல்நீரில் புதையுதே
அழகான விலங்குகள் மண்ணிற்குப் பாரமாம் - அதை
அடித்து வெல்வது ஆணிற்கு வீரமாம்

அன்பிற்குள் இனத்துவம் குதிக்கிறதே - அதனால்
அனாதைகளாய் மனித இனம் தவிக்கிறதே
தேசம் என்பது ஒரே இனமே - அதைத்
தேடி அழிப்பது சில மனிதக் குணமே.

**கவிதை எழுதுதல்**
**கனிஷ்டபிரிவு**
**முதலாமிடம்**

**செல்வன். கிருஷ்ணதாசன் யுதர்சன்**
**மட்/ஆரையம்பதி ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக வாழ்வியலில் நாட்டாரியல் தொழில் முறைசார்ந்த நாட்டார் பாடல்கள்

**'எழுதப்படுபவை எல்லாம் கவியுமல்ல,**
**எழுதப்படாதவை எல்லாம் கழிவுமல்ல**

அதற்கமைவாக எழுத்துரு பெறாமல் படிப்பறிவற்ற பாமரமக்களின் படைப்பாக உருவெடுத்து பழங்கால பொக்கிஷமாக போற்றப்படும் ஒரு பண்பாட்டுக் கவியே நாட்டார் இலக்கியம் என்று அறியப்படும் நாட்டாரியலாகும். அந்தவகையில் நாட்டார் இலக்கியம் என்பது பெருமரம் போன்றது அது சாதாரண மனிதரின் பிறப்பு முதல் இறப்பு வரை இரண்டறக் கலந்தது அது தாலாட்டுப் பாடல், விளையாட்டுப்பாடல், தொழிற்பாடல் நலங்குப்பாடல், விழாப்பாடல், இறுதியில் ஒப்பாரிப்பாடல் என பல கிளைகளாக விரிந்து அன்பு, ஒற்றுமை, பாசம் கவலை என உண்மையான மனித உணர்வுகளை சுவையான கனிகளை விளைவாகத் தருகிறது.

அதனடிப்படையில் முண்டாசுக் கவிஞரான பாரதியார் இவ் நாட்டாரியலை வியந்து பாடுகையில் அது சமூக வாழ்வியலின் கண்ணாடியாகத் தொழிற்படுகிறது என்பதனை கண்கூடாகக் காணலாம். அதற்குதாரணமாக,

**மானுடப் பெண்கள் வளருமொருகாதலினால்**
**ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந்தேன்**

எனும் காதற் பாட்டின் சிறப்பின் வாயிலைக் குறிப்பிடலாம் அதற்கமைய தேனூரான் ஐயாவின் நாட்டார் அறிவியல் எனும் நூல் மூலம் நாட்டாரியலின் முக்கியத்துவத்தை அறியலாம் அந்த வகையில் நாட்டாரியல் எனும் பெருவிருட்சத்தில் ஒர் அற்புதக் கிளையான தொழிற்பாடலை எடுத்து நோக்கும் போது பாமரப் புலவனான பாரதி

**"நாட்டினிலும் காட்டினிலும்**
**நாளெல்லாம் நன்றொலிக்கும்**
**பாட்டினிலும் நெஞ்சைப்**
**பறிகொடுத்தேன் பாவியேன்**

எனக் கூறுவதைக் காணலாம். இத் தொழிற்பாடல்கள் பிரதேசத்திற்கு பிரதேசம் சமூகத்திற்கு சமூகம் மாறுபடுவதனைக் காண்பதே இதன் சிறப்பியல்பாகும் அதற்கமைய இலக்கியத் தீவான கிழக்கிலங்கை சமூகத்தினரால் மீனவப்பாடல், விவசாயப் பாடல் போன்றவையும் மலையக சமூகத்தினரால் கொழுந்துப்பாடல் போன்றவையும் இசைக்கபடுவதை அறிய முடிகிறது. இதனை மேலும் ஆழமாக வேரூன்றி விடும் போது இப்பாடல்கள் சமூகமொன்றின் வாழ்வியலை அர்ச்சுனன் அம்பாக எடுத்தியம்புவதைக் காணலாம். இங்கு மீனவப் பாடலொன்றை எடுத்து நோக்கும் போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே**
**கட்டுவலை எடுத்துகிட்டு புறப்படுவோமே**
**கடவுள் தந்த கைகளே முழுப்பட உண்டு**
**மச்சான் முழுப்பட உண்டு."**

எனநீண்டு செல்வதை இரசனை உள்ளோரால் அறிய முடிகின்றது இங்கு மச்சான் மச்சான் என மூச்சிற்கு முந்நூறு தடவை உறவு முறை பிசகடையாமல் அழைக்கும் இம் மீனவன் கரையோர மக்களின் சமூக உறவின் வாழ்வியலை சுட்டிக்காட்டும் சுட்டியாக காணப்படுவதனைக் காணலாம் அதேபோல் இம் மீனவனின் கடவுள் நம்பிக்கையும் தொழில் பக்தியும் மீனவ சமூகத்தின் கலாசார கண்ணாடியாக காணப்படுவதை அறியலாம். இவ்வாறு சமூகவாழ்வியலின் நிதர்சனமான நாட்டாரியலில் அடுத்த பக்கம் தான் விவசாயம். இந்த விவசாயப்பாடலில் கதிரறுக்கும் பாடல், சூடடிக்கும் பாடல், களத்து மேட்டுப்பாடல் என பல வகையான பிரிவுகள் உள்ளதைக் காணமுடியும்.

இங்கு ஒரு அரிவி வெட்டுப் பாடலை நோக்குகையில் அங்கு வெளிப்படும் வாழ்வியல் உணர்ச்சிகளையும் அம்சங்களையும் தெளிவாக எடுத்து நோக்க முடியும்

**"அரிவிவெட்டப் போறேன் பெண்ணே**
**அரிவாளைக் கொண்டா நானும்**
**அறியாமல் சொல்லிப் போட்டன்**
**பழஞ் சோற்றைக் கொண்டா"**

என தன் காதல் மனையாளை நோக்கிதான் அரிவிவெட்டப் போவதாக அறிக்கை விடுவதையும் காணலாம். இங்கு வாழ்வியலும் நாட்டாரியலும் கவுண்டமணி செந்தில் போன்று பிரிக்க முடியாதவை என்பதும் இரசனை மிகுந்ததொன்று என்பதையும் அறிய முடியும். இது போல் காதல், அன்பு, பிரிவு போன்ற நவரச உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஆற்றலும் நாட்டாரியல் எனும் மனித மனவியலிற்கேயுரியது என்பதும் பெருமைக்குரியதாகும்

இதற்கு மேலும் வலுச்சேர்க்கும் உதாரணங்களாக

**"சேத்துல நான் கெழங்கெடுக்க**
**சேவக்கொடி நீ சிரிச்சிருக்க**
**அதுபோதும் டீ எனக்கு**
**களத்துல நான் சூடடிக்க**
**காளமாடு என மிதிக்க**
**அம்புயமே என நான்**
**கத்துனனே"**

போன்ற காதலுடனான பிரிவுணர்ச்சி மிக்க பாடல்களும் யதார்த்த வாழ்வியலின் அற்புதக் கனிகளான உணர்வுகளை எளிமையாக எடுத்தியம்புவது சிறப்பானதொன்றாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சாதாரண பாமரர்களின் வாழ்வியலின் அரிதாரமான நாட்டாரியல் இன்று எம்மிடையே பெயரளவில் மாத்திரம் பேசப்படுவதுதான் வருந்தத்தக்கதாகும்.

மனிதன் வாழ்ந்த முறைகளையும் யதார்த்த வாழ்வியலையும் உள்ளங்கை நெல்லிக் கனியாய் தந்த இவ்வியலிற்கு ஒப்பாக வேறு எந்த இயலையும் வைக்க முடியாத நிலையிலும் கூட இன்று படித்த மானிடரான நாம் யதார்த்த வாழ்வியலை மறந்தது ஏன்? இதற்கே நிஷ்குலானந்தர்
**"பழமை என்பது புதியதில் மறைவதல்ல**
**அது புதுமையோடு இணைவது"** எனக் கூறிச்சவுக்கடி விடுக்கிறார்.

எனவே சமூக வாழ்வியலின் கண்ணாடியான நாட்டாரியலை மீண்டும் மீண்டும் எம் மனங்களுள் விதைத்து எம் முன்னோர் போல் போற்றத்தக்க வாழ்வையும் வாழ்வியலையும் பெற்று அதன் சுவைமிகு கனிகளான ஒற்றுமை பாசம் என்பவற்றை நாமும் சுவைக்க சங்கற்பம் பூணுவோமாக.

**செல்வி. காஞ்சனா நிலுக்சி**
மட்/ஆரையம்பதி.இ.கி.மி.ம.வி

## சிறுவர் பிரிவு கையெழுத்துப் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம்

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | - | **செல்வி.வி.அஷ்வினி**<br>மட்/நவரத்தினராசா வித்தியாலயம் |
| 2ம் இடம் | - | **செல்வி.பி.ரித்தனா**<br>மட்/நவரத்தினராசா வித்தியாலயம் |
| 3ம் இடம் | - | **செல்வி.சி.சுதேஷ்கா**<br>மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த தேசத்தை கட்டியெழுப்புவதில் இலக்கியம் மற்றும் கலையின் பங்கு

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்று பாடிச் சென்றுள்ளார் ஔவையார் எனினும் எந்தவொரு படைப்பும் முழுமையடையா விடின் அப்படைப்பு தோன்றினும் பிரயோசனமில்லை என்பதே உண்மை ஆகும். அக்கருத்திற்கு மனிதனும் விதிவிலக்கல்ல. "அது எப்படி மனிதன் பூரணமடைவான்?" என்று நீங்கள் சிந்திக்கலாம். அதற்கு பதிலாகவே இக் கூற்று இங்கு தரப்பட்டுள்ளது. "ஒரு மனிதன் தன்னுடைய தசை போர்த்திய உடலாலோ இவ்வுலக செல்வங்கலோ பூரணமடைவதில்லை மாறாக தன்னுடைய உள்ளத்தாலும் நேரிய சிந்தனைகளாலுமே பூரணமடைகின்றான்" என்பது உளவியல் விதி. இவ்விதி வழியே எம்முடைய வழி பற்றிச் சிந்திப்போமேயானால் இன்றைய நவீன யுகத்தில் பூரணத்துவம் அடைந்த மனிதர்களைப் காண்பதே அரிதாகவுள்ளது. இதற்கான மூல காரணம் யாதெனில் எம்முடைய அறிவில் இலக்கியமும் கலையும் வளர்ச்சி பெறாமையே ஆகும்.

"இலக்கியம் என்றால் என்ன?" என்று கேட்கும் பலரும் இன்று எம் சமூகத்தில் வாழாமலில்லை. இவற்றிற்கு எல்லாம் தீர்வாகவே அறிஞர் விசாரியன் பெனிஸ்கி இலக்கியம் பற்றி பின்வருமாறு கூறுகின்றார். "இலக்கியம் ஒரு வாழ்க்கை ஒழுங்கு அதில் ஒவ்வொரு எழுத்தாளரும் தமது பக்கங்களைச் சேர்க்கின்றனர்" இது வெறும் கருத்தல்ல.

ஒரு யதார்த்தமான உண்மை இலக்கியம் என்பது எப்போதும் எம் வாழ்க்கையுடன் தொடர்புபட்டதாகவே காணப்படுகின்றமை சிறப்பிற்குரியதே. இவற்றிற்கு உதாரணமாக புராதன இலக்கியக் கதைகளை நோக்குவோமேயானால் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ள கதை இராமாயணம் ஆகும். இது பல நூற்றாண்டுகளுக்கு முன் நடந்த சம்பவமேயானாலும் இன்று வரை பேசப்படுவதற்கு காரணம் அக் கதையின் ஊடாக வெளிப்படுத்தப்படும் உணர்ச்சி பூர்வமான விழுமியக் கருத்துக்களும், குணச்சித்திர பாத்திர வார்ப்புக்களுமே ஆகும்.

இங்கு கிருஷ்ணரின் அவதாரமான இராமன் தன்னுடைய வாழ்வியல் அம்சங்களை சிறப்பாக மேற்கொண்டாலும் இறுதியில் தாம் விடும் "சந்தேகம்" எனும் சிறுபிழையால் தன்னுடைய மனைவியான கற்புக்கரசி சீதையை பிரிகின்றார். அப்போது தன் கணவனின் மேல் கொண்டிருந்த தீராத பற்றுதலினாலும் நம்பிக்கையாலும், பாசத்தாலும் எதுவும் பேசாது பிரிய மனமின்றிப் பிரிந்து செல்கின்றனர். இவ்வாறு கதை தொடரும் போது கல் நெஞ்சம் கரையும். இது எவ்வாறு எம் வாழ்க்கையுடன் தொடர்புறுகின்றது என்றால் இன்று எம்முடைய வாழ்விலும் சந்தேகம் எனும் கொடூர உணர்ச்சி அனைத்து உறவுகளுக்குள்ளும் புகுந்து கிடைத்தற்கரிய உறவுகளையும் பிரிக்கிறது. அதுமட்டுமா? இன்று யாரிடமுள்ளது? சீதையைப் போன்ற கற்பும் அமைதியும் பணிவும். "பெண்டீர்க்கெல்லாம் இலக்கணமான கோதையை, சீதை"எனலாம். இராமனும் அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சளைத்தவரல்லர். ஊரிற்கு அஞ்சி உடையவளை விலக்கினாலும் மனமெல்லாம் மணவாட்டியைத் தேடியே சுற்றுகிறது என்றால் மிகைகொள்ளாது.

சீதை பெண்டீர்க்கெல்லாம் இலக்கணமென்றால் இராமன் ஆடவர்க்கெல்லாம் இலக்கணம் எனலாம். ஆண்களிடம் என்னென்ன பண்புகள் இருக்க வேண்டும் என்பதை அவர் உணர்த்துகின்றார். அவற்றிற்கு உதாரணமாக சீதையைக் கவர்ந்த வீரமும். அழகும், தம்பி இலக்குவணனிடம் கொண்டிருந்த தீராதபாசம், தந்தை தாயை களங்கப்படுத்தாத குணம் படைத்த மனம் எனப் பட்டியல் நீள்கிறது.

அடுத்து காலத்தால் அழியாத காவியமாக கொள்ளப்படுவது மகாபாரதம் ஆகும். இங்கு குறிப்பிடத்தக்க கதாநாயகன் இல்லாவிடினும் அனைவரும் கதாநாயகர்களே என்று கதை நகர்ந்து செல்வதைக் காணலாம். அண்ணன் தம்பியுணர்வும் தாயின் மீது கொண்ட பணிவும் இன்றைய சந்ததியினருக்கு சிறந்த பாடமாக உள்ளது. இவ்வாறு பல தரப்பட்ட காப்பியங்களும், புராதனக் கதைகளும் காவியங்களும் நற்கருத்துக்களைத் தருகின்றன. **உதாரணமாக :- நளதமையந்தி கதைகள், மணிமேகலைக் சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி** காப்பியங்கள் என்று தொடர்ந்து கொள்ளலாம்.

எனினும் இதை மட்டும் இலக்கியத்தினுள் அடங்கும். இலக்கியம் என்பது கடலைப் போன்றது. அங்கு சென்றால் கரையோரத்தில் நிற்பவன் பெறுவது சிற்பியோடையே. ஆனால் தடைகளை தாண்டி ஆழ்கடலில் சென்று தேடுதலை மேற்கொள்பவனே விலை மதிப்பற்ற முத்தை கண்டடைகின்றான். இவ்வாறெல்லாம் சிந்திக்கையில் இலக்கியம் என்றால் என்ன? இலக்கியம் என்பது எதற்காக? என்பதை பற்றியெல்லாம் நாம் அறிய வேண்டியது அவசியமாகும். இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி அது வாழ்க்கையை எவ்வாறு பிரதி பலிக்கின்றது என்பதல்ல, மாறாக காலத்தின் மத்தியில் வாழ்க்கையின் மேன்மையை எவ்வாறு சித்தரிக்கிறது என்பதேயாகும்.

காலத்தின் முன்னோடியாக உள்ள சிறப்புத் தன்மைகளை எப்படி நாடுகிறது என்பதிலும் அது வருங்காலத்தின் கண்ணாடியாகின்றது. அதுமட்டுமன்றி இலக்கியத்தை நாடும் தேவையை அதிகரிக்க இலக்கியம் நவீன தன்மையையே நாடுகிறது. இவ்வுலகு ஆயினும் இலக்கியம் இலக்கியம் தான் அதில் நவீனமானது பழசானது என்பதெல்லாம் அதனை எதிர்கொள்ளும் விதம் தான் வாழ்க்கை. அவ்வப்போது தன்னை மாற்றிக் கொள்ள புதுப்பிக்கப்படும் போது மனிதர்கள் பெறும் புதிய உணர்வுகள், புதிய தேவைகள், புதிய விருப்பங்களும் தன்னுடைய அனைத்து தேவைகளையும் மாற்றம் செய்கிறது. இதற்கு இலக்கியமொன்றும் விதிவிலக்கல்ல.

அனைத்து மொழிகளிற்கும் தனித்தனி மரபுகளும் இலக்கியங்களும் காணப்படும் போதும் தமிழ் இலக்கியங்கள் மட்டுமே அழியும் ஆபத்தில் உள்ளது. இலக்கிய மேகலையோ தனிமனித சொத்தல்ல. அது பொதுவுடமை அனுபவிக்கும் போது மாத்திரமே முழுப்பயனையும் பெறலாம் என்பது மாத்திரம் உறுதி.
**"கலை செய்திப் பரிமாற்றத்தின் சாதனமல்ல
அது செய்திப் பரிமாற்றத்தின் ஒரு வழியாகும்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற யூரிபொரேவின் வாக்கிற்கிணங்க கலை செய்திப் பரிமாற்ற வழியாக பயன்படுத்த வேண்டியதொன்றாகும். இலக்கியமும் கலையும் ஒட்டிப் பிறந்த இரட்டையர்களாகும். இது இலக்கியக் கலைகளிருக்கும் இலக்கிய அம்சங்களில் இருந்து தோற்றம் பெற்ற அம்சங்களே ஆகும். கலைகள் என்பது வளர்ச்சியை நோக்கி செல்ல வேண்டியதொன்றே தவிர தொலைக்கப்பட வேண்டியதொன்றல்ல. கலைகளும் பூரணத்துவமான மனிதர்களை உருவாக்குவதில் முழுப் பங்களிப்பு செய்கின்றது எனலாம். எவ்வாறு என்று ஆராய்வோமானால் சங்கீதக் கலையை முதன்மையாகக் கொள்ளலாம். சங்கீத கலையின் அறிமுகக் குறிப்பே அதன் (சங்கீதகலையின்) பயன்களைப் பற்றியதாகும். அதனுள் ஒரு சில பண்புகள் :- அன்பு, அமைதி, மகிழ்ச்சி, ஒழுக்கம் என்பனவாகும். எனினும் முழுமையான மனிதன் வளர இவை மாத்திரம் போதாது. எனவே தான் படிப்பினைகளை நோக்கி செல்லத் தொடங்கிய மனிதன் அதன் விளைவாக பல புதிய கலைகளை கண்டு பிடிக்கின்றான். ஆதி மனிதனின் வாழ்வில் படிப்படியாக கூத்துக்கள், கதகளி, மணிப்பூரி, குச்சுப்புடி, மோகினியாட்டம், கும்மிகள், கோலட்டங்கள் போன்றன உருவாகின.

“கலையின் தலை விதி மனித குலத்தின் தலை விதியுடன் பிணைக்கப்பட்டிருக்கின்றது” என்ற பாவெல்கொரினின் வாக்கு பண்டையகால முன்னோர்க்கு பொருந்தும். அதற்கு மாறாக இன்று எமது சந்ததிக்கும் பொருந்தும் கருத்து “விஞ்ஞானத்தின் தலைவிதி இன்றைய மனித குலத்தின் தலைவிதியுடன் பிணைக்கப்பட்டிருக்கின்றது.” என்பதே ஆகும். அதற்கேற்றாற் போல் இன்றைய சமூகசீர்கேடுகளும் பதியப்பட்டுள்ளன. இவ்வண்ணம் கலையின் வளர்ச்சி பற்றி சிந்திப்போமேயானால் கலை சமூகத்தின் மீது தாக்கம் பதிப்பது போலவே சமூகத்தின் தாக்கமும் அதன் மீது உண்டு எனலாம். அதன் காரணமாவே கலையின் வளர்ச்சியும் நடைபெறுகிறது. சமூக உள்ளடக்கத்தின் வளர்ச்சியும் தொடர்ச்சியுமே கலையின் ஊற்றுக் கண்ணாக இருப்பதனால் அது சமூகப் பொதுநிலையில் ஆதர்சம் தருகிறது.

ஆய கலைகள் அறுபத்து நான்கு காணப்பட்ட போதிலும் அவற்றில் சில கலைகள் மாத்திரம் எமக்கும் தெரிந்திருப்பது வெட்கமே. கலைகள் என்பது உணர்ச்சிகளுக்கு ஊற்றாகவும் வாழ்வின் பிரதிபலிப்பாகவும் வளர்ச்சிக்கு சந்திரகலையாகவும் திகழ வேண்டும் என்பதே கலைஞர்கள் பலரது விருப்பாகும். ஒரு மனிதன் தன்னுடைய வாழ்வில் எந்த நிலையில் இருந்தாலும் சரி அது ஏழையானாலும் சரி பணக்காரரானாலும் சரி அவன் மேன்மை அடைவது அவனது தராதரத்தினால் அல்ல, மாறாக தன்னுடைய குணப்பண்புகளினாலேயே. இதற்கு சிறந்த உதாரணம் ஆபிரஹாம் லிங்கன் தன்னுடைய ஒழுக்கத்தாலும் அமைதியாலும் இடைவிடாத கல்வியாலும் சாதித்தார். இது நாமும் எம் வாழ்வில் ஒழுக்கத்தையும் அமைதியையும் இடைவிடாத கைப் பொருளாகக் கொண்டு சாதிக்க வேண்டும்.

ஒருவன் தனது வாழ்வில் இலக்கியத்தில் ஆர்வமுள்ளவனகவும் கலைத்துறையில் ஆர்வம் உள்ளவனாகவும் காணப்பட்டால் அவனே முழுமையடைந்த மனிதன் ஆவான். ஏனெனில் எமது முன்னோர்களிடம் காணப்பட்டது இந்த இரண்டுமே. அவர்கள் இயற்கையே விஞ்ஞானமாகக் கருதி கலைகளை தெய்வமாக மதித்துப் போற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இன்றைய கலியுகத்தில் வாழும் நாம் விஞ்ஞானத்தை (Science) தெய்வங்களாகக் கருதி அவற்றுள் ஆழ்ந்து கிடக்கின்றமை கவலைக்குரியதே. இற்றைக்கு 80 வருடங்களுக்கு முன்னோக்கி செல்வோமேயானால் அன்று கோயில்களிலும், தெருக்களிலும், ஓலை அரங்குகளிலும் மக்கள் ஒன்றாக ஒற்றுமையாகக் கூடி நின்று கூத்துப் பார்ப்பர். ஆனால் இன்றோ நாம் விஞ்ஞானக் குழந்தைகளின் கூத்தை வியந்து பார்க்கின்றோம்.

இவற்றின் விளைவுகளாலோ என்னவோ இன்று மனிதர்கள் மிருகங்களாவும் மனச்சாட்சி அற்றவர்களாகவும், காமவெறி, கொலைவெறி பிடித்தவர்களாகவும் அலைகின்றனர். இலக்கியம், கலை, கல்வி, விஞ்ஞானம் போன்ற அனைத்தும் அளவுடன் காணப்பட்டாலே சுகம். ஆனால் இவையின்றியும் மனிதனால் வாழமுடியாத நிலையொன்று தோன்று மேயானால் இவ்வுலகமே சீராய் இயங்கும்.

அமைதியே அறிவின் அடிப்படை, அமைதி பொன்னைவிட மேலானது என பல பழமொழிகளைக் கேட்டிருப்போம். ஆயினும் மானசீகரீதியாக செயற்படுத்த இலக்கிய நூல்களையும் கலையறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அமைதியாய் இருந்த பலரே இன்று சாதனையாளர்களாகத் திகழ்கிறார்கள். அதே போன்று மனிதனுக்கு சுய ஒழுக்கமும் இன்றியமையாதாகும்.
சுய ஒழுக்கமும் சீரான சிந்தனையுமே சீரான மனித வாழ்விற்கு மூல வித்தாகும். அதனை பேணும் உரிமை அனைவருக்கும் உண்டு. ஆயினும் பேணுவோரின் தொகை இன்றைய வசதிப் பெருக்கத்தினாலும் வாழ்க்கை ஓட்டத்தினாலும் மிகக் குறைவாகவே உள்ளமை வருத்தத்திற்கு உரியது. அதனால் இவற்றை எல்லாம் கருத்திற் கொண்டு நாம் எம்மால் இயன்றளவு கலை நிகழ்ச்சிகளிலும் இலக்கியப் போட்டிகளிலும் வேறு சில போட்டிகளிலும் பங்குபற்றுவதோடு நாமும் பாடசாலைகளிலும் வேலைத்தளங்களிலும் இலக்கியக் கலை வளர்ச்சிக்கு இயன்றளவு பங்கு பற்றலையும் பங்களிப்பையும் வழங்க முன்வர வேண்டும். "தனிமரம் தோப்பாகாது" எனும் கூற்றிற்கிணங்க அனைவரையும் இலக்கியத்திற்குள்ளும் கலைக்குள்ளும் கொண்டு வர முழு மூச்சுடன் முயற்சிக்க வேண்டும். அழிவுறும் ஆபத்தில் உள்ள கிராமப் புறங்களுக்கு மாத்திரமே உரியதாகக் கருதப்படும் கலைகளை புதையலிலிருந்து மீட்க இளஞ்சந்ததிகளாகிய நாம் பொறுப்புடன் முன் வர வேண்டும்.

இலங்கையில் தற்போது கவனிப்பாரற்று ஊக்குவிப்புக்களற்று ஊக்கமற்றவர்களால் உதாசினம் செய்யப்படும் விடயங்களில் இலக்கிய வளர்ச்சியும் கலை வளர்ச்சியும் பிரதானமானவையாகத் திகழ்கின்றது. பாட நூல்களிலும் பாடத்திட்டங்களிலும் இவை தொடர்பான பாடங்களும் விழிப்புணர்வுகளும் கொண்டு வரப்படும் வரையில் மாணவர்களுக்கும் இப் பிரச்சனையின் அவசியம் புரியாது. எமது பாட்டிமார் அமைதியும் ஒழுக்கமும் எவ்வளவு முக்கியம் என்பதனை கூத்துக்கதைகள் வாயிலாகவும் கூறும் போது அதில் உள்ள சுவையே சுவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதைய இளஞ்சந்ததியினராகிய நாங்கள் எவ்வளவு விடயங்களை இழந்துள்ளோம் என்பது இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது தான் தெரிகிறது. இதற்கு காரணமும் நாங்கள் கவனக் குறையாக இருப்பது தான் என்பதை நினைக்கும் போதும் வருத்தமாகத்தான் இருக்கிறது.

ஓவியம் பேசாத கவிதை, கவிதை பேசுகிற ஓவியம் என்பது பிரான்சு நாட்டு ஓவியர் சார்ல்ஸ் பிரஸ்நொய் என்பவர் கூறுகிறார். கவிதைக்கும் ஓவியத்துக்கும் எவ்வளவு நெருக்கம் உள்ளது என்பதை உணர்த்துகிறது. பேராசிரியர் எனும் தொல்காப்பிய உரையாசிரியர் இதனையே வேறொரு வகையில் சொல்லுகிறார். மெய்ப்பாடு பற்றி பேசுகிற போது மெய்ப்பாடு எனும் உணர்ச்சி வடிவம் கவிதையில் காட்சி வடிவமாக இதனை இலக்கியமும் ஓவியமும் என இரு பிரிவாக்கப்பட்டது இக் கலை.

இசைக்கலையாக பண்டைத் தமிழர் நம் மொழியை இயல், இசை, நாடகம் என மூவகைப்படுத்தி வளர்த்தனர். எனவே தமிழ் முத்தமிழ் ஆயிற்று இசைத்தமிழ் ஒன்று. இசைத்தமிழ் ஒரு கலையாய், நுண்கலையாய், இசைக்கலையாய் வளர்ந்தது. இசைக்கலை ஒலியின் அடிப்படையில் அமையும். கலை செவிவழி துய்க்கும் கலை. குழல் இசை, பாடல் இசை போன்றவை இனியவை என்றும் பூனை கத்துதல் , காகம் கரைதல் போன்றவை சாதாரணமானவை என்றும் புலியின் உறுமல், இடியின் ஓசை போன்றவை கடுமையானவை என்றும் ஒலியை மூவகைப்படுத்துவர்.

அறிவு வளர்ச்சியும் நாகரீகமும் முதிர்ச்சி பெறுவதற்குப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனிதன் ஆடலிலும் பாடலிலும் ஈடுபட்டு வந்தான். நாகரீகமும் வளர்ச்சி அடைய அடைய இசை, ஆடல் முதலியவை முன்னேற்றம் கண்டு கலை வடிவங்களாக முகிழ்ந்தன. இந்தியாவில் மிகத்தொன்மையான கூத்து நூல் எனக் கருதப்படும் நாட்டிய சாஸ்திரத்தை பரத முனிவர் (கி.பி 2ஆம் நூற்றாண்டு) நாட்டியம் எனும் சொல்லுக்குப் பாடல் , ஆடல் ,அபிநயம், உரையாடல், ஒப்பனை, காட்சித்திரைகள் ஆகியவை ஒழுங்கமைந்த நாடகம் என்றே பொருள் கூறினார்.

எனவே சிறுதுளி பெருவெள்ளம் எனும் அமுத வாக்கிற்கிணங்க ஒருவர் இருவராகி, இருவர் நால்வராகி இக் கலைகளையும் பாதுகாப்போம் என திறந்த மனதுடனும் நிறைந்த உள்ளத்துடனும் கடமையை உணர்ந்தவர்களாக கலையையும் கலாசார பாரம்பரியத்தையும் நாங்கள் முழுமையான மனிதர்களாக மாறவும் இவையனைத்தையும் காக்கவும் சங்கற்பம் பூணுவோம்.

**கட்டுரை**
**சிரேஷ்டபிரிவு**
**முதலாமிடம்**

**செல்வி. லிங்கராசா குவேஜிதா**
மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் முறை சார்ந்த நாட்டார் பாடல்கள்

உலகில் முதலில் தோன்றிய இலக்கியங்கள் நாட்டார் இலக்கியங்கள் என வரலாறு சொல்கிறது. இப்படியான நாட்டார் இலக்கியங்களில் நாட்டார் பாடல்கள் எனும் பகுதி மிக முக்கியமானது ஆகும். நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் அம்சங்களை குறிப்பாக பிறப்பு முதல் இறப்பு வரையான நிகழ்வுகளைப் பாடல் வடிவில் எடுத்தியம்புவதாக நாட்டார் பாடல்கள் அமைந்திருக்கும். நாட்டுப் புறப்பாடல்கள் முன்னைப் பழமைக்கும் பழமை வாய்ந்தவை, பின்னைப் புதுமைக்கும் புதுமை வாய்ந்தவை ஆகும் என்ற சிறப்பிற்குரியது. இப்பாடல்கள் இனியவை, எளியவை, எழுதப்பாடாதவை, வாயால் பிறந்து செவிகளில் நிறைந்து உள்ளத்தில் பதிவு பெறுபவை. இவை பெரும்பாலும் அந்தந்தக் காலத்தில் ஏற்படும் நிகழ்ச்சிகளின் மீதான நாட்டார் கருத்தை எதிரொலிக்கும். நாட்டார் பாடலை வாய்மொழிப்பாடல்கள், மரபு வழிப்பாடல்கள், பாமரர் பாடல்கள் என்றெல்லாம் அழைப்பர்.

நாட்டார் பாடல்களை தாலாட்டுப்பாடல், விளையாட்டுப்பாடல், தொழிற்பாடல், காதற்பாடல், ஆலய வழிபாட்டுப் பாடல், ஒப்பாரிப் பாடல் என வகைப்படுத்தலாம். இவற்றுள் தொழிற்பாடல் எனும் பிரிவை விரித்து நோக்கலாம். நாட்டுப்புறங்களிலே வாழும் தொழில் செய்கின்ற மக்கள் தாம் அன்றாடம் தொழிற்தளங்களில் வேலை செய்யும் போது தமது வேலைக் களைப்பை குறைத்து உற்சாகத்தை ஊட்டுவதற்காகவும் மன மகிழ்ச்சியை உண்டு பண்ணுவதற்காகவும் பாடப்படுகின்றவையாக உள்ளன. தொழிற்பாடல் வகையினுள் விவசாயப் பாடல்கள் மற்றும் மீனவர் பாடல்கள் அடங்குகின்றன.

அடுத்ததாக விவசாயப் பாடல்கள் பற்றி நோக்குவோமானால் இவை வேளாண்மைப் பாடல்கள் என்றும் அழைக்கப்படுகிறது. வேளாண்மைத் தொழிற் பாடல்கள் விதை விதைத்து, நீர் பாய்ச்சி, களையெடுத்து, கதிர் அறுத்து, போரடித்து ,வண்டியில் ஏற்றிச் செல்லும் வரை பல வளர்ச்சிப் படிகளில் உள்ளன. அவ் வளர்ச்சிப் படிகள் ஒவ்வொன்றிற்கும் அவ்வேலையைச் செய்யும் நிலையில் பாடல்கள் பாடப்படுகின்றன. அவற்றை ஏற்றப்பாட்டு, ஏர்ப்பாட்டு, நடவுப்பாட்டு, களையெடுப்பாட்டு, கதிர் அறுவுப்பாட்டு, நெல் தூற்றுவோர் பாட்டு, வண்டிக்காரன் பாட்டு என பல நிலைகளாக வகைப்படுத்தலாம்.

ஏற்றப்பாட்டு பற்றி நோக்குவோமானால், பழங்காலத்தில் வாய்க்கால் பாசனம் இல்லாத இடங்களில் கிணற்றிலிருந்து தண்ணீரை ஏற்றத்தின் மூலமே இறைத்து நீர்ப் பாய்ச்சினர். இவ்வாறு ஏற்றம் மூலம் நீர் இறைக்கும் போது களைப்பை அகற்றுவதற்காக பாடப்படுகின்றவையாக இப்பாடல்கள் உள்ளன. இப்பாடல்கள் ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப்பாட்டில்லை என்ற சிறப்பை பெற்றவை. ஏற்றப் பாட்டின் முதலில் கடவுள் வாழ்த்து இருக்கும் இடையில் எண்ணிக்கையும், வாழ்வியல் சார்ந்த கருத்தமைந்த பாடல்களுமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. இவ்வகையான ஏற்றப்பாடல்களுக்கு உதாரணமாக "பிள்ளையாரே வாரும் பெருமானே வாரும்".... என்ற கடவுள் வாழ்த்துப் பகுதிக்குரிய பாடலை குறிப்பிடலாம்.

ஏர்ப்பாட்டு பற்றி பார்க்கும் போது ஏரை மாடுகளில் கட்டு அடித்து இழுக்கும் போது தனக்கும் தனது மாடுகளுக்கும் வலிமற்றும் சோர்வு மறந்து செயற்படுவதற்கு பாடப்படுகின்றனவாக உள்ளன. வயல் உழும்போது (ஏர் கொண்டு உழவும் போது) பாடப்படும் பாடலுக்கு உதாரணமாக "பட்டிபெருகவேணும் தம்பிரானே பாற்பானை பொங்க வேண்டும் தம்பிரானே...." எனும் பாடலை குறிப்பிடலாம். இப்பாடலில் மாடுகளுக்கும் தனக்கும் உள்ள நெருக்கத்தை விவசாயி ஆனவன் வெளிப்படுத்திப் பாடுவதாகவும் காணப்படுகின்றது.

அடுத்ததாக நடவுப் பாட்டு பற்றி நோக்குவோமானால், நடவின் போது நாட்டுப் புறப் பெண்களால் காலங்காலமாக இப்பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன. நாற்று நடுபவர்கள் பெரும்பாலும் பெண்களாகவே காணப்படுகின்றனர். நாற்று நடும் பெண்களில் ஒரு பெண் பாட மற்றவர் சேர்ந்து குழுவாகப் பாடுவதும், ஒரு பெண் மட்டுமே தனியாகப் பாடுவதாகவும், அல்லது பெண்கள் எல்லோரும் சேர்ந்து கூட்டமாகப் படுவதாகவும் இப்பாடல்கள் அமைந்துள்ளன. நாட்டுப்புறப் பாடல்களுக்கே உரித்தான வாய்மொழியாகப் பரவல், ஒரு வடிவ அமைப்பிற்கு உட்படுதல், மரபுவழிபடுதல், திரிவடைந்து வழங்குவது போன்ற தன்மைகள் நடவுப் பாடல்களுக்கு பொருந்தும். நடவு செய்வோர் உழைப்பின் களைப்பைப் போக்கிக் கொள்ளவும் மனமகிழ்ச்சிக்காகவும் இப்பாடல்களைப் பாடுகின்றார்கள்.

நடவு வேலையைச் செய்பவர்கள் பெண்கள் என்பதால் அவர்கள் பாடும் பாடல்களில் அவர்களின் வாழ்வியல் நிகழ்வுகள் பதிவு செய்யப்படுகின்றன. எனவே நடவு பற்றி மட்டுமல்லாமல் ஏற்றம், ஏர் ஓட்டுதல், நீர்ப் பாய்ச்சுதல், நிலத்தின் தன்மை, இயற்கை அழகு, மழை, வெயில் போன்ற வேளாண்மை சார்ந்த பிற நிகழ்வுகளும், காதல், வீரம், வறுமை, பக்தி, வழிபாடு, இல்லற வாழ்வு, மாமியார் பெருமை, நாத்தனார் கொடுமை, சரியான கூலி கிடைக்காமை, அத்தை மருமகளை கிண்டல் செய்தல் போன்ற சுவையான நிகழ்வுகளும் பாடுபொருளாகின்றன. நடவுப் பாடல்களுக்கு எடுத்துக்காட்டாக
**"நித்தம் நித்தம் வேலைசெய்து .....",**
**"தங்கரதம் நானிருக்க அம்மாடியோ...",**
**"சந்திர சூரியனேசாமி பகவனே..." கூறலாம்.**

களையெடுப்புப் பாடலானது, நாற்றுக்களை வயலில் நட்ட பின்பு அது வளர்ச்சியடைந்த வருகையிலே அதனுடன் சேர்ந்து களைகளும் வளரும். அவ்வாறான களைகளை வயலிலிருந்து அகற்றினால் நாற்றுகளினால் கிடைக்கும் விளைச்சல் அதிகரிக்கும். ஆகவே வயற் களங்களில் களைகளை அகற்றும் போது பாடப்படுகின்ற பாடல்களாகும். நாற்றுக்களில் கதிர்கள் வளர்ந்து கதிர் அறுக்கும் பருவம் வந்ததும் விவசாயிகள் கதிர் அறுக்கத் தொடங்குவார்கள். அவ்வாறு கதிர் அறுக்கும் வேளையில் களைப்பும் சலிப்பும் அற்றுப் போவதற்காக கதிர் அறுப்புப் பாடல்கள் பாடப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர் அறுப்பின் பின்னர் நெல்லைத் தூற்றிக் கொள்வர். அச்சமயத்திலேயே நெல் தூற்றுவோர் பாடல் பாடப்படுகிறது. நெல்லை தூற்றி மூட்டைகளில் கட்டிய பின்பு விதைப்பதற்கான நெல்லை தனியாக எடுத்து காயவைத்து சாக்கினில் கட்டிவைப்பர். மீதியை உரலில் போட்டு குத்தி அரிசியாக மாற்றும் போது நெற்குத்திப்பாடல்கள் பாடப்படுகின்றன. நெல்லைக் குற்றும் போது நெல் உடையாமல் நழுவாமல் இருக்க வேண்டும் என்று கடவுளை வேண்டுவர்.

தொழிற்பாடல் வகையை சேர்ந்த நாட்டுப்புறப் பாடல்களில் மீனவர் பாடல்களும் ஒன்று. கடல் தொழில் செய்யும் போது பாடப்படும் பாடல்களே மீனவர் பாடல்களாகும். மீனவப் பாடல்களுள் ஓடப்பாட்டும் ஒன்றாகும். ஓடத்தை தள்ளுகிறவர்கள் தம்முடைய வேளையில் அலுப்புத் தோன்றாமலிருக்கும் பொருட்டு பாடிக் கொண்டே தள்ளுவது வழக்கம். ஓடத்தை கரையருகே இழுத்துச் செல்லும் போது பாடுவதும் உண்டு. இவ்வகையான பாட்டுகளையே ஓட்டப்பாட்டு என்று அழைக்கிறோம். இவை நாடோடிப் பாடல்களை சேர்ந்தவை ஆகும்.

மீனவர் பாடல்களின் ஒவ்வொரு நிறுத்தத்திலும் "ஏலேலோ ஐலசா" என்ற இரு சொற்களும் மாறிவரும். மேலும் வேறுபட்ட சொல் அமைப்புகளிலும் சில பாடல்கள் பாடப்படுகின்றன. இதற்கு எடுத்துக் காட்டாக "ஏலேலங்கிடிலேலம் ஏலேலக் கிளிலல்ல..." என்ற பாடலைக் கூறலாம். மேலும் சில உதாரணங்களாக "மரத்தை நம்பி ஏலெலோ கிளை இருக்கு ஐலசா...", "வாடா தம்பி வளைஞ்சிலுடா..." "ஓடியிரு உழுவ மீனுக்கு..." போன்றவற்றை குறிப்பிடலாம். ஆழ்கடலிலே மீன்பிடிக்கும் போது தன்னுடைய வலியையும் பயத்தையும் போக்குவதற்காக இவை பாடப்படுகின்றது.

தொழிற் பாடல்களானது சில குறியீடுகளுடன் தொடங்குகின்றன. விவசாய பாடல்களின் "ஏலேலோக் குயிலே, ஏலேலோ அன்னக்கிளி, பொலி பொலி" என்றும் கப்பற் பாட்டுக்களில் "ஐலசா, ஏலேலோ சல சலா" என்றும் குறியீடுகளுடன் தொடங்குகின்றன. தற்காலத்தில் நவீன சாதனங்களின் வளர்ச்சியினால் வேளாண்மைத் தொழில் சார்ந்த விடயங்களை இலகுவாக செய்து கொள்ள முடிகின்றது. அதனோடு மனித உடலுழைப்பு வீதமும் குறைகிறது. ஆகவே மனித உழைப்புக் குறையும் பட்சத்தில் வேளாண்மை சார்ந்த நாட்டார் பாடல்களும் மருவுகின்ற நிலைமையும் காணப்படுகின்றது.

மேற்கண்ட பந்திகளின் மூலம் நாட்டார் இலக்கியம், நாட்டார் பாடல்கள், நாட்டார் பாடல்களில் தொழிற்பாடல்கள், தொழிற்பாடல்களில் விவசாய மற்றும் மீனவர் பாடல்களைப் பற்றி விரிவாக நோக்கினோம்.

**செல்வி : வி. லோஜிதா**
மட்/புதுக்குடியிருப்பு **கண்ணகி** ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ நாட்டுக் குறம்...

**கவிஞர் ப.கு சரவணபவன்**

**பாடல்**

தேவரெலாங் கொலுவிருக்கும் ஈழம் எங்கள் தேயஞ்
செப்பிடுவே னதன் பெருமை சற்றிருந்து கேளும்
மூவரன்று பாடுதிருக் கோண மலை நாட்டில்
முத்தொதுக்கிக் கடல் சூழுமெங்கள் தேயம்
(தேவர்)

எத்திசையும் போற்றுங்கதிர் காமமலை நாட்டில்
எங்கள் வள்ளி குடியிருக்கும் ஈழமெங்கள் தேயம்
புத்த பிரான் பொன்னடியாம் பொற் கமல பீடம்
பொலியுமலை எங்கள் மலை ஈழமெங்கள் தேயம்
(தேவர்)

மகாவலி கங்கைப் புனலாந் தாவணியை வீசி
மாதிரமெ லாமணக்கும் வாசணை பூசி
காவலரின் கண் மருட்டும் கன்னி எங்கள் தேயம்
காசினியி லிவகைப் போற் கண்ணியில்லை இல்லையே
(தேவர்)

செந்தமிழஞ் சிங்களமு மாயவிரு தோழி
சேவை செய்யும் இராசக்கள்ளி ஈழமெங்கள் தேயம்
இந்தியரெம் அக்கை மக்கள் எண்றணைக்கும் அம்மை
வந்தனையல் வதெமக்கும் சிந்தனைவே றில்லை
(தேவர்)

பொற்புதையல் கண்டெடுப்பார் போல சில மந்தி
பூமியுள் வெடித்த பலா பொற் சுளையைக் கிண்டும்
நற்குணம் கொள் மங்கையரும் மைந்தர்களும் போல
நாலுகின்ற பூங்கொடியில் ஊசல் சில வாடும்
(தேவர்)

மானின் கலைக் கொம்பெடுத்துக் கால்களென நாட்டி
வளமான பன்றி முள்ளிக் கைமரங்கள் பாய்ச்சி
கானிவுதிர் மாமயிலின் தோகை கொண்டு வேய்ந்து
கட்டியதனுள்ருந்து சிற்றில் சில வாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தேவர்)

கனிபெறவென் றொரு குறத்தி காதணியை வீசக்
கடுவனதைக் கைப்பிடித்துக் காதலி தன் காதில்
நனியழுத்தக் கண்ணின்று நீர்வடியும் வாயில்
நகைவருமக் குரங்கிருக்கும் ஈழமெங்கள் தேயம்

(தேவர்)

**பொருள் :** - தேவர்கள் எல்லோரும் அழகிய கொலுப் பொம்மைகள் போல வீற்றிருக்கும் தேசமாக எங்கள் ஈழ நாடு விளங்குகின்றது. எமது நாட்டின் பெருமை பற்றி நான் கூறுவதை கொஞ்சம் இருந்து கேட்பீராக. தேவார மூவர்களால் அன்று பாடப்பட்ட திருகோண மலைப் பகுதியில் முத்துக்களை அள்ளி வந்து ஒதுக்குகின்ற ஆரவாரிக்கின்ற கடலாற் சூழப்பெற்றது எங்கள் நாடாகும்.

எல்லா பக்கங்களிலும் இருந்து மக்கள் வந்து வணங்குகின்ற கதிர்காம கந்தன் அருள் பாலிக்கும் கதிர்காம மலை (கதிர மலை) உள்ள இடத்தில் எங்கள் வள்ளி நாயகி குடியிருக்கின்ற ஈழம் எங்கள் நாடாகும். புத்தபகவானின் பொன்போன்ற திருவடிகளாகிய பொற் தாமரை பீடங்கள் நிறைந்தது எங்கள் நாடாகும்.

மகாவலி கங்கையானது நீராகிய தாவணியை வீசி திசை வீசுகின்ற நறுமணத்தைப் பூசி நாட்டை ஆழும் மன்னர்களின் கண்களைக் கவருகின்ற கன்னியாகிய இவளைப் போல பூவுலகில் எவருமில்லை எனும் படி விளங்குவது எங்கள் நாடு.

செந்தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளும் தோழியாய் பணி செய்கின்ற அரசிளங் குமரியை உடையது எங்கள் ஈழ நாடு அயல் நாடான இந்தியா எமக்கு தமக்கையாகும். இந்திய மக்களை அக்காவின் மக்கள் என்று அரவணைத்துப் போற்றுவதல்லாது வேறு நினைவுகளே எமக்கு கிடையாது.

பொன்னை உடைய புதையல்களைக் கண்டெடுப்பவர்கள் போன்று சில மந்திக் குரங்குகள், நிலத்துள் வெடித்த வேரில் பழுத்த பலாக்கனிகளின் சுவைமிகுந்த சுளைகளைப் பெறுவதற்காக நிலத்தை தோண்டும். நல்ல குணங்களைக் கொண்ட இளம் பெண்களும் இளைஞர்களும் போல தொங்குகின்ற பூங்கொடிகளில் சில ஊஞ்சல் ஆடும்.

கலை மானின் இரட்டை கொம்பினை எடுத்துக் கால்கள் போன்று நட்டு வைத்து, கைம்மரங்களாக (சிறிய மரங்களாக) கொழுத்த பன்றியின் முட்களை குறுக்கே பரப்பி, காட்டு மயில்களின் உதிர்ந்த இறகினைக் கொண்டு வேய்ந்து கட்டப்பட்ட சிறிய வீடுகளினுள் இருந்து சிறிய சில மிருகங்கள் வாழும்.

மலைக் குறப் பெண் ஒருத்தி, மரத்திலிருந்து பழத்தினைப் பறிப்பதற்காத் தன் காதில் அணிந்திருந்த தோட்டினை எடுத்து எறிய ஆண் குரங்கு ஒன்று அதனை கையில் ஏந்தித் தனது காதலியாகிய மந்திக் குரங்கின் காதில் அணிவதற்காக அதன் காதில் வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் அழுத்த, பெண் குரங்கின் கண்களில் இருந்து கண்ணீர் வடியும், ஆனால் வாயில் புன்னகை வரும் அத்தகைய குரங்குக்கும் ஈழம் எங்கள் நாடாகும்.

**நயத்தல்**

நாட்டுப்பற்றினை ஊட்டும் விதமாக ப.கு சரவணன் இயற்றிய பாடல் இது. இலங்கை மணித் திருநாட்டின் இயற்கை அழகையும் இங்கு வழங்கும் மொழிகளைப் பேசுவோரின் ஒற்றுமையையும்,அயல் நாடான இந்தியாவை உறவு முறை கொண்டு அரவணைக்கும் பண்பையும் இப் பாடல்களினுடாக வெளிப்படுத்தியுள்ளார்.

“தேவரெலாங் கொலுவிருக்கும்” என்பதனூடாகத் தெய்வங்கள் ஆலயங்களில் சிலைகளாக ( பொம்மைகளாக ) நிலை கொண்டிருந்து அருள் பாலிக்கும் நாடு என குறிப்பிடப்படுகிறது “மூவரென்று பாடு திருக்கோணமலை நாட்டில் முத்தொதுக்கில் கத்து கடல் சூழுமெங்கள் தேயம்” என்பதனூடாக திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தி நாயனார் போன்ற தேவார முதலிகளால் திருகோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வர ஆலயமும் திருக்கோணேஸ்வரரும் பாடப்பட்டமை குறிப்பிடப்படுகின்றது. மேலும் திருகோணமலைப் பகுதியில் முத்துகளை அள்ளி வந்து ஒதுக்கின்ற ஆரவாரிக்கின்ற (ஓசை எழுப்புகின்ற) கடலை நான்கு பக்கமும் சூழ பெற்றது எங்கள் தேசம் என்பதனூடாக “செந்தமிழ் சிங்களமுமாயவிரு தோழி” என்பதில் உருவக அணி கையாளப்பட்டுள்ளது. அதாவது தமிழும்(செந்தமிழும்) சிங்களமும் இரு மொழிகளாக உருவகிக்கப்பட்டுள்ளது. “இந்தியரேம் அக்கை மக்கள் என்றணைக்கும் அம்மை வந்தனையல் லாதெமக்குச் சிந்தனைவேறில்லை” எனும் அடிகளினூடாக இந்திய நாட்டை அக்கா என்று உறவு முறை கொண்டும் இந்திய மக்களை அக்காவின் மக்கள் என்று அரவணைத்து பொற்றுவதல்லாது வேறு சிந்தனை எமக்கில்லை என்பதன் மூலம் ஏனைய நாட்டு மக்களையும் சகோதரத்துவத்துடன் எண்ணும் தேச ஒற்றுமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

“பொற் புதையல் கண்டெடுப்பார் போலச் சில மந்தி பூமியுள் வெடித்த பலாப் பொற்சுளையைச் கிண்டும்” எனும் அடியில் உவமை அணி கையாளப்பட்டுள்ளது. “பொற் புதையல் கண்டெடுப்பார் போல்” என்பது இங்கு கையாளப்பட்டுள்ள உவமை அணியாகும் இங்கு உவமேயமாக : பூமியுள் வெடித்த பலாப் பொற்சுளையை கிண்டுதல் கூறப்பட்டுள்ளது. பொதுத்தன்மையாக தோண்டுதல் (கிண்டுதல்) கூறப்படுவதோடு நிறமும் இங்கு பொதுத்தன்மையாக கூறப்பட்டுள்ளது. “நற்குணங் கொள் மங்கையரும் மைந்தர்களும் போல நாலுகின்ற பூங் கொடியில் ஊசல் சில வாழும்” எனும் அடியில் உவமை அணி கையாளப்பட்டுள்ளது. இங்கு உவமானமாக நற்குணங் கொள் மங்கையரும் மைந்தர்களும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கு உவமேயமாக நாலுகின்ற (தொங்குகின்ற) பூங் கொடியில் ஊசல் சில வாடும் (வாழும்) குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் அணியை வெறும் உவமை அணியாக மட்டும் கொள்ள முடியாது. ஏனென்றால் இது எதிர் நிலை உவமை அணியாகும். அதாவது இயற்கையினையே மனிதர்களுக்கு உவமிப்பது வழக்கம். இங்கு பாடலாசிரியர் மனிதர்களை இயற்கைக்கு உவமித்துள்ளார் இதனால் இதனை எதிர் நிலை உவமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணியாக கொள்ளலாம். இலங்கை திரு நாட்டின் முத்து வளம் எடுத்துக்காட்டப்படுகிறது மேலும் நாட்டின் எத்திசையிலும் போற்றும் கதிர் காமமலை"என்பதனூடாக எல்லா திசைகளிலும் இருந்து பக்தர்கள் வந்து கதிர்காம கந்தனை போற்றுவதும் வழிபடுவதும் கூறப்படுகிறது "பொன் அடியாம்" என்பது இங்கு உவமை அணி கையாளப்பட்டுள்ளது. பொன் போன்ற அடி என்பதையே பொன்னடியாம் என கூறப்படுகின்றது "பொன்னடியாம் பொற்கமல பீடம்" என்பதனூடாக உவமை கலந்த உருவக அணியாக கையாளப்பட்டுள்ளது. "பொன்னடியாம்" என்பது உவமை அணியாகவும் "பொன்னடியாம் பொற்கமல பீடம்" என்பது உருவக அணியாகவும் கையாளப்பட்டுள்ளது. அதாவது போன்ற திருவடிகளாகிய பொற்றாமரை பீடங்கள் என்று கூறப்பட்டுள்ளது.

"மகாவலிகங்கைப்புலனாந் தாவணியை வீசி" என்பது உருவக அணியாக கையாளப்பட்டுள்ளது அதாவது நீராகிய தாவணியை வீசி என்று கூறப்பட்டுள்ளது. இங்கு தாவணி என்று நீர் அருவி குறிப்பிடப்பட்டுள்ளது. **"காவலரின் கண்மருட்டுங் கன்னி எங்கள் தேயம்"** என்பதனூடாக இலங்கைத் திரு நாட்டின் ஆட்சி செய்யும் (காவல் காக்கும்) மன்னர்களின் கண்களை கவரும் வகையில் அழகு பொருந்தியது எங்கள் நாடு என்று கூறப்பட்டுள்ளது. " **கன்னி எங்கள் தேயம்**" என்பதனூடாக கன்னியாக இலங்கைத் திரு நாடு உருவகிக்கப்பட்டுள்ளது. "காசினியி ளிவளைப் போற் கன்னியில்லை" என்பதனூடாக பூவுலகில் இலங்கைத் திருநாடு போன்று அழகும் இயற்கையும் நிறைந்த நாடு வேறில்லை என்று உயர்வு நவிற்சி அணியை கையாண்டு குறிப்பிடப்பட்டுள்ளது. மானின் கவைக் கொம்பெடுத்து கால்களென நாட்டி" எனும் அடியில் உவமை அணி கையாளப்பட்டுள்ளது. அதாவது "மானின் கவைக் கொம்பு உவமானமாகவும் கால்கள் (தாங்கும் கால்கள்) உவமேயமாகவும் அழகும் உறுதியும் பொதுத்தன்மையாகவும் கூறப்படுகின்றது . "வளமான பன்றி முள்ளும் கைமரங்கள் பாச்சி" இவ் அடியில் உருவக அணி கையாளப்பட்டுள்ளது அதாவது வளமான கொழுத்த பன்றியின் முட்கள் கைமரங்களாக உருவாக்கப்பட்டுள்ளது.

"கனிபெறவென் றொரு குறத்தி காதணியை வீசக் கடுவனதைக் கைப்பிடித்துக் காதலி தன் காதில் நனியழுத்த கண்ணின்று நீர்வடியும் வாயில் நகைவரும் குரங்கிருக்கும் ஈழமெங்கள் தேயம்" எனும் பாடலடிகளை உயர்வு நவிற்சியாக கொள்ள வேண்டும் ஏனென்றால் குறத்தி பெண் ஒருத்தி கனி பெறத் தன் காதணியை வீசுதலும் கடுவன் குரங்கு அதை ஏந்தி (பிடித்து) தன் காதலி (மந்தி குரங்கின்) காதில் வைத்து அழுத்தும் என்று பாடலாசிரியர் நாட்டு வளத்தையே வெளிப்படுத்துவதாக உள்ளது ஆகையால் இதனை உயர்வு நவிற்சி அணியாக கொள்ளலாம்.

"ஈழமெங்கள் தேயம்" எனும் தொடரின் மூலம் எமது ஈழத்தின் மீது கவிஞர் கொண்ட பக்தியும் அதனை ஏனையவர்களும் உணர்சி பூர்வமாகக் கைகொள்ள வேண்டுமென்ற வேட்கையும் புலப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தேவர்கள் கொலுவிருத்தல் திருகோணமலையில் முத்தொதுக்கிய கடல் சூழல் கதிர்காம மலையிலிருக்கும் இறைவனை எத்திசையோரும் வணங்குதல், கதிர்காம மலை நாட்டில் கான வள்ளி குடியிருத்தல், புத்த பிரானின் பொற்றாமரைப் பீடங்கள் பொலிந்து விளங்குதல், மகாவலி கங்கை மலர் வாசனை வீசி ஓடுதல், செந்தமிழும் சிங்களமும் தோழிகளாக அரசாட்சியில் விளங்குதல், இந்திய மக்களை எமது அண்டை நாட்டு மக்களாக அரவணைத்தல், வேரிற் பழுத்த பலாக்கனிச் சுளையை எடுக்க மந்தி குரங்குகள் தோண்டுதல், தொங்குகின்ற பூங்கொடிகளில் சில ஊசலாடுதல், மான் கொம்பையும் பன்றி முள்ளையும் மயிற்றோகையையும் கொண்டமைந்த சிறிய வீடுகளில் சிறு விலங்குகள் தங்கியிருத்தல், குறத்தி வீசிய காதணியைக் கடுவன் குரங்கு ஏந்தித் தன் காதலியான மந்தியின் காதில் வைத்து அழுத்தியதால் மந்தி கண்ணீர் விடுதலும் வாயிற் சிரிப்பு உண்டாதலும் முதலான அனைத்து விடயங்களும் நாட்டின் வளத்தினையும் சிறப்பினையும் நாட்டு மக்களின் நோக்கத்தையும் நாட்டின் பெருமையினையும் கூறுவதாக அமைவதுடன் நாட்டுப் பற்றினை எம்முள் ஊட்டுவதாகவும் அமைகின்றது.

**இப் பாடலில் காணப்படும் அணிச்சிறப்புகளாக**

1. மகாவலி கங்கை புனலாந் தாவணியை வீசி மாதிரமெல்லாம் மணக்கும் வாசனையைப் பூசி உருவக அணி
2. "காவலரின் கண் மருட்டுங் கன்னி எங்கள் தேயம் காசினியிலிவனைப் போன்ற கன்னியில்லை" உயர்வு நவிற்சி அணி
3. "செந்தமிழும் சிங்களமுமாயவிரு தோழி" உருவக அணி
4. "இந்திய ரெம் அக்கா மக்கள்" உருவக அணி
5. "பொற்புதையல் கண்டெடுப்பார் போலச் சில மந்திகள் பூமியுள் வெடித்த பலாப் பொற் சுளையைக் கிண்டும்" உவமை அணி
6. "நற்குணங் கொள் மங்கையரும் மைந்தர்களும் போல நாலுகின்ற பூங்கொடியில் ஊசல் சில வாரும்" -உவமை அணி
7. "மானின் கலைக் கொம்பெடுத்துக் கால்களென நாட்டி" உவமை அணி
8. "பன்றி முள்ளும் கைமரங்கள்" -உருவக அணி

**"குறத்தி கனிபெருக் காதனியை .."** எனத் தொடங்கும் பாடலில் உயர்வு நவிற்சி அணி போன்ற அணிகள் காணப்படுகின்றன.

இப்பாடலின் கவிச் சிறப்புகளாக எளிய சொல்லாட்சி, சிறப்பான அணிப்பிரயோகங்கள், கற்பனை வளம், பொருத்தமான வருணனைகள், இசையோடு பாடத்தக்க ஓசை(சந்தம்), நாட்டுப் பற்றினை ஊட்டும் பாடு பொருள், குறவஞ்சி இலக்கிய மரபின் சில கூறுகளை ஒட்டிய வடிவப்பாங்கு போன்றவற்றை கூறலாம்.

பாடலாசிரியர் இலக்கிய கவிச் சிறப்பு மிக்க பாடலாக "ஈழநாட்டுக் குறம்" எனும் பாடலினை இயற்றியுள்ளார் என்று இப்பாடலை கூறுவது மிகையாது.

**பாடல்நயத்தல்**
**சிரேஷ்டபிரிவு**
**முதலாமிடம்**

**முற்றும்**

**செல்வி : ரிஷ்கேசன் குவேனுகா**
**மட்/ஆரையம்பதி இ.கி.மி.மகா வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மை போற்றும் தாய்மை......

மேடை: படச் சட்ட மேடை

நேரம் : 30 நிமிடம்

பாத்திரங்கள் :

- ❖ எடுத்துரைஞர்
- ❖ மனைவி
- ❖ கணவன்
- ❖ குழந்தை
- ❖ மாமி
- ❖ குழந்தை / பிள்ளை பராமரிப்பவர்
- ❖ பாடகர்கள்

**காட்சி - 01**

எடுத்துரைஞர் மேடையின் பட பகுதியில் உறை நிலையில் நிற்க. மேடையின் CC பகுதியில் குழந்தை (பிள்ளை மூளை வளர்ச்சி குன்றியது போல் பாவனை செய்தல்)

**எடுத்துரைஞர் :**

கதை சொல்லப் போகின்றேன். கதை சொல்லப் போகின்றேன். முன்னொரு காலத்தில் எம் ஊரில் நடந்த உண்மைக் கதை சொல்லப் போகின்றேன். இதோ இந்த பிள்ளையை பாருங்கள் நான் சொல்ல வந்த கதை புரியும். ஏன்? இந்த பிள்ளை இப்படி இருக்கின்றது. இந்த பிள்ளைக்கு என்ன நடந்தது? என்று உங்களுக்கு தெரியுமா? (யோசித்தல்) ம்...ம்... நானே சொல்கிறேன். அதற்கு முன் இந்த தாயை பாருங்கள்.

(எடுத்துரைஞர் மேடையின் பட பகுதியிலே நிற்க காட்சி மாறுதல் மாற்றம் அடைதல்)

**காட்சி - 02**

(கர்ப்பவதி பெண் ஒருத்தி (மனைவி) உலாவியபடி)

**மனைவி :**

கண்ணா நான் பேசுறது உனக்கு கேட்குதா பா (தனது வயிற்றில் கை வைத்து தடவியபடி) கேட்டா கேளுப்பா. அம்மா இங்க நின்மதியாகவே இல்லப்பா அம்மாக்கு இங்க எந்த சந்தோசமும் இல்லடா. அம்மாக் கூட பேச யாருக்குமே நேரம் இல்ல. அம்மா இந்த வீட்டில ஒரு வேலைக்காரி மாதிரித்தான் இருக்கன். அம்மாக்கு இங்க எந்த சுதந்திரமும் இல்ல. என் மேல அன்பு வைக்க இங்க யாருமே இல்ல. அம்மா இந்த வீட்டில அழாம ஒரு நாள் கூட இருந்ததில்லப்பா.

மாமி :

ஏய் என்ன செய்கிறாய்? உனக்கு வேற வேலை இல்லையா? எப்ப பாரு உலாத்திக் கொண்டு தனியாவே பேசு. உனக்கு ஏதும் மன வியாதியா? போ போய் வீட்டு வேலையை பாரு.

**கணவன் :**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தனது கையில் இருந்த பையை வேகமாக வீசுதல்)

**மனைவி :**
ஏதும் பிரச்சனையா? ஏன் இப்படி கோபமாய் இருக்கிங்க?

**கணவன் :**
நீ எதுவும் பேசாத உன்னாலதான் எனக்கு எல்லா பிரச்சினையும்

**மனைவி :**
நான் என்ன தப்பு செய்தன் ஏன் எனக்கு இப்படி எல்லாம் கதைக்கிறீங்க?

**கணவன் :**
என்ன தப்பு செய்தன் என்டா கேட்கா உன்னோட ஆஸ்த்துமா வியாதியால தினம் தினம் எனக்கு செலவு. நான் உழைக்கிறதில பாதி உனக்கே செலவாகிறது எல்லாம் என்னோட தலை விதி.

**மனைவி :**
எனக்கு இந்த வியாதி இருக்கென்டு தெரிஞ்ச பின் தானே என்ன திருமணம் செய்தீங்க

**மாமி :**
ஓகோ.. மெடம் இப்போ எதிர்த்து பேச தொடங்கித்தாவோ

**மனைவி :**
நான் எதிர்த்து பேசலயே

**கணவன் :**
(அடிக்க கை ஓங்கிய படி) வாய மூடு.இது உன்னுடைய வீடு இல்லை இது என்னுடைய வீடு இங்கு நீ என்னுடைய விருப்பப்படி தான் இருக்க வேணும் புரிஞ்சதா உனக்கு போய் வேலையைப் பாரு.

**மாமி :**
மாடிப்படி சுத்தம் செய்ய வேண்டும்.வீட்டில் தூசி தட்டி அறைகளை எல்லாம் கழுவ வேண்டும் போ.. போய் வேலைகளைச் செய்.

**எடுத்துரைஞர் :**
இங்கு என்னதான் நடக்கின்றது கர்ப்பவதி பெண்களுக்கு ஆஸ்மா ஒரு ஆபத்தான வியாதி அல்லவா? கர்ப்பவதி பெண்கள் மாடிப்படி ஏறக்கூடாது பாரிய வேலைகள் செய்யக்கூடாது என்றல்லவா சொல்வார்கள் இந்த வீட்டில் மாடிப்படியை சுத்தம் செய்ய சொல்கின்றார்களே அந்த பெண் கர்ப்பவதி என்று கூட பாராமல் இவ்வாறு கொடுமை செய்கின்றார்களே. ஒன்றல்ல இரண்டல்ல இது போல கொடுமைகள் பல இந்த வீட்டில் நடைபெற்றது ஒவ்வொன்றாக சொல்கின்றேன்.(பாடலுக்கு ஏற்ற வகையில் வீட்டில் நடக்கும் நிகழ்வுகள் சித்தரிக்கப்படல் அந்த கர்ப்பவதி தாயின் மனநிலை வெளிக்காட்டப் படுதல்)

**பாடகர்கள் :**
சிறு விதை மணல் மீது மரமாக தோன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வேளை அவ் விதை தோன்றாமல் போகும் - 2
கருவோடு ஒரு உயிர் வருகின்ற போது
அவ் உயிர் மீது இவள் கொண்ட பயம் ஒன்றே போதும் - 2
நெறி மாறு பல நூறு வலி வந்து - சூலும்
நிலையான தரை மீது உயிர் வந்து சேரும்
(பாடல் காட்சியின் போது கர்ப்பிணிப் பெண் அடி பட்டு கீழே விழுந்து வலியால் துடி துடித்தல்)
நெறி மாறு பட நூறு வலி வந்து சூழும்
நிலையான தரை மீது உயிர் வந்து சேரும் - } வேகமாக பாடுதல்

காட்சி - 01 இல் இருந்தவாறு மேடையின் பட பகுதியில் உறை நிலையில் எடுத்துரைஞர் நின்று கொண்டிருக்க மேடையின் CC பகுதியின் மூளை வளர்ச்சி இல்லாத பிள்ளை இருக்க குழந்தை பராமரிப்பாளர் அக் குழந்தையை கவனித்த படி இருந்தார்

**எடுத்துரைஞர் :**
பல பிரச்சினைகளையும் தாண்டி அந்த பெண் அந்த குழந்தையை பெற்றெடுத்தாள்.

**பாடகர்கள் :**
தப்பியது குழந்தை தப்பியது தப்பியது குழந்தை
தக்கெனவே பிளைத்தது குழந்தை குழந்தை - 2

**எடுத்துரைஞர் :**
நிறுத்துங்கள் நிறுத்துங்கள்! குழந்தை தப்பியது உண்மைதான் ஆனால் அந்த குழந்தை மூளை வளர்ச்சி இல்லாமல் பிறந்துள்ளது. அந்த குழந்தைதான் இந்த குழந்தை இப் பொழுது புரிகிறதா? அந்த குழந்தையை பெற்றெடுக்கும் போதே அந்த தாய் இறந்து விட்டாள்.

இந்த குழந்தை இவ்வாறு பிறப்பதற்கு விதி காரணமல்ல தெரிந்தே செய்த சிலரது சதிதான் காரணம். கர்ப்பவதியான பெண்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். ஓய்வாக இருக்க வேண்டும் மனதில் கவலை இல்லாமல் இருக்க வேண்டும். ஏனென்றால் தாயின் ஒவ்வொரு செயலும் சேயயே பாதிக்கும் இங்கு அந்த தாய் மகிழ்வாகவே ஓய்வாகவே இல்லையே அதுவே இந்த குழந்தையின் நிலைக்கு காரணம்.

எனவே மேலும் இவ்வாறு குழந்தைகள் பிறப்பதை தடுப்போம் முடிந்தவரை கர்ப்பிணிப் பெண்களை மகிழ்ச்சியாக வைத்திருப்போம். பெண்மை இன்று போற்றப் படுவதற்கான காரணமே தாய்மைதான் அந்த தாய்மையை போற்றுவோம் பாதுகாப்போம்.

பாடகர்கள் :
பெண்மை போற்றும் தாய்மை வாழ்க
பெண்மை போற்றும் தாய்மை வாழ்க!!

முற்றும்..

குறுநாடகம்
சிரேஷ்டபிரிவு
முதலாமிடம்

**செல்வி.ரிஷ்கேசன் குவேனுகா**
மட்/ஆரையம்பதி இ.கி.மி.மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுபடுவோம்

ஒன்று சேர்ந்து வாழ்வோம் - தேசம்
நன்று என்று வெல்வோம்
ஒற்றுமை .... ஒற்றுமை வேண்டும்
வேற்றுமை .... களைந்திட வேண்டும்
கற்றபடி .... மற்றவரை ...
உற்றார் உறவென வாழ்வோம் . (ஒற்றுமை ....)

மதம் வாழ்வின் வழியே ...
மதம் கொண்டால் வலியே ...
பதம் பணிந்தோம் இறைவா !
வதம் புரிதல் .... முறையோ .... ! (மதம் வாழ்வின்)

மனிதா! மனித நேயம் ....
'மனிதம்' வாழும் தேசம் ...
புனித ... மனதால் ஒன்றாய் ....
இனிநாம் வாழ்வோம் நன்றாய் (மனிதா ..!...)
பிறப்பும் இறப்பும் நியதி...
சிறந்து வாழ்வோம் கவனி....
அறத்தின் வழியில் செல்வோம்...
பிறப்பின் பயனை வெல்வோம். (பிறப்பும்...)

**வேறு :**
ஒழுக்கமான வீடு ... - நல்ல
அமைதியான நாடு.
முழுமையான மனிதன் - நல்ல

புனிதமான ' மனிதம் '
ஒன்று சேர்ந்து வாழ்வோம் - தேசம்
நன்று என்று வெல்வோம்.

**பாடல் ஆக்கம்**
**திறந்த மட்டம்**
**முதலாமிடம்**

**திரு.த. இன்பராசா**
**புதுக்குடியிருப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்முனைப்பற்று பிரதேசத்தில் ஆரையம்பதியின் கூத்துக்கலை

கூத்துக்கலையானது கைலைமலையில் அமர்ந்து அகிலத்தை ஆளுகின்ற கற்பனைக்கெட்டாத கருணை சொருபி அகில நன்மைக்காக கலைகளை அளித்ததல்லாமல், கூத்துமாடி, கூத்தாடி என்ற பட்டத்தையும் தனதாக்கிக்கொண்டார். இக்கூத்துக்கலையும் மத்தளம் மீட்டுகின்ற தன்மையையும் முனிவர்களுக்கு நந்திதேவர் அடித்தும் நடித்தும் காட்டினார். தாருகாவனத்திலே அது தாண்டவம் போல் இருந்தது.

**அரனின்றாடும் அழகிய சிற்சபையில்**
**நிறையோடு தாளலய சுருதி நிந்தனையின்றியே**
**பரனிடம் கேட்டுமே பண்புடன் தெளிந்து கொண்டு**
**குறைவின்றி வையகத்தோர்க்கு குறிப்புடன் கூறிவைத்து**
**அரபு பிறை சடையோன் அணங்கதை தலையில் வைத்தே**
**வரையின்றி கூத்தாடி வானவர் மகிழவேதான்**
**மரபு நெறி தவறா மாண்புடன் மத்தளத்தை**
**கரையின்ற கானமியற்று கலை நந்தியை போற்றுவோம்.**

சிவபெருமான் தில்லையில் ஆடியதே முதல் கூத்து. சிவபெருமானே முதல் கூத்தன். நந்தியன் பெருமானே முதல் மத்தள காரன். இது தெய்வீகக் கூத்து. இதனால்தான் மணிவாசகரும் "தில்லையில் கூத்தனே தென்பாண்டி நாட்டானே" என்று பாடியுள்ளார். கூத்து, கூத்தன் என்ற சொற்கள் அநாதியானவை. உலகத் தோற்றத்துக்கே காரணமானது. இறைவனை ஆனந்தக் கூத்தன், கூத்துப்பிரான் என்றே ஆதி நூல்கள் கூறுகின்றது. நடராச வடிவம் இதற்கு உதாரணம். கூத்திலிருந்து உலகம் தோன்றியது உறுதிப்படுத்தப்படுகின்றது.

நாட்டுக் கூத்தானது இயல், இசை, நாடகமாகிய முத்தமிழ்கலை அறிவினையுந் தூண்டி, உணர்ச்சியும் இன்பமும் ஊட்டி, மக்களது பழம்பண்பை வளர்க்கும் கருவிகளாக அமைகின்றன. ஒரு பிரதேசத்தின் கலை, இலக்கியப்பண்பாடு முதலான சிறப்புக்கள் பலவற்றையும் எடுத்துக்காட்டும் பழம் பெருங் கலைக் களஞ்சியங்களாலானவை.

கூத்தில் இராகமும் சுவையும் அணுவளவும் பிசகாமல் நிகழ வேண்டும். பிசகினால் இராகம் இன்னொரு ராகமாகிவிடும். ஒரு சுவை மற்றொரு சுவையாகிவிடும், எந்தச் சுவையும் அளவு கடந்தால் நகைச்சுவை ஆகிவிடும். கூத்தாடுவது இலகுவான காரியமில்லை. இதனால்தானோ "எல்லோர்க்கும் புரியாதுதாளக்கட்டு, எழுதாமல் கிடையாது தாலிக்கட்டு", என்று கூத்தின் உண்மையை உறுதியாக உணர்ந்தவர்கள் உரைத்த உறுதியுரையாகும்.

கூத்துக் கலையை மெருகூட்டி அதன் சுவையைச் சுவைக்க மத்தளம், சல்லாரி(தாளம்), சதங்கை மூன்றுமே பயன்படுத்தப்படுகின்றது. தாளக்கட்டின் போதும், ஆட்டத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் இவை மூன்றின் ஒத்தியையயே ரசிகர்கள் எதிர்பார்ப்பார்கள். தமிழ் வளர வேண்டும், தமிழ் கலாசாரம் வளர வேண்டும் என்று நினைத்த நம்முன்னோர்கள் தமிழர்களின் பாரம்பரியமான கூத்துக்கலையை மரபு மாறா முறையில் தமிழ்ப் பாரம்பரியத்துடன் வளர்த்து வந்துள்ளனர்.

கூத்துக்கலையானது முத்தமிழ் வித்தகமுடையது, தமிழர்களின் கலைகாக்கும் காவலரண், இசை ஆன்மாத் தொடர்பின் உறவுப்பாலம், கிராமிய மக்களின் பல்கலைக்கழகம், வரலாற்றின் குறிகாட்டி, இறை தந்த பெருங்கொடை, ஒற்றுமையின் தத்துவ உறைவிடம், நாட்டின் அணிகலன், நாகரிகத்தின் அளவுகோல், தனிநபர் ஆளுமை அடையாளம், தமிழ் இலக்கண இலக்கிய காப்பேடு, புதுமைக்கு வழிகாட்டி, மரபுவழி ஊடகம், திறமைக்கு ஒரு களம், புலவனின் புத்தகம், பாரம்பரியத்தின் புகலிடம்,ஈழத்தின் தனித்துவம், முகாமைத்துவ அடித்தளம், அறிவுக்கு ஒரு பாடம், அறிவியல் தொழில்நுட்பம் எனக் கூத்துக்கலையின் வெளியீடுகளை பல வகைகளில் வகைப்படுத்தலாம்.

## ஆரையம்பதிக் கிராமமும் நாட்டுக் கூத்துக்கலையும்

மண்முனைப்பற்றுப் பிரதேசம் வடக்கே காத்தான்குடியையும் மேற்கே மட்டு வாவியையும், கிழக்கே வங்கக் கடலையும், தெற்கே குருக்கள் மடத்தையும் எல்லைகளாகக் கொண்ட 21.5 சதுர கிலோ மீற்றர் பரப்பளவையும் அண்ணளவாக 35,900 மக்கள் தொகையையும் கொண்டது. இதில் நீரவளம், நிலவளம், கலைவளம், கல்விவளம், வந்தோரை வரவேற்று உபசரிக்கும் மனவளம், ஆலய வழிபாட்டில் சிறந்த ஆன்மீக வளத்தோடு அன்னம் பாலிக்கும் சிற்றம்பலமாகவும், மட்டக்களப்பின் கலைகளின் மேடையாகவும் விளங்குவது 06.4 சதுர கிலோமீற்றர் பரப்பளவும், ஏறத்தாள 3243 குடும்பங்களையும் 12643 சனத்தொகையும் கொண்ட ஆரையம்பதிக் கிராமம், மண்முனைப்பற்றின் இதயமாக விளங்குகின்றது.

எம்முன்னோர் எமக்களித்திருக்கின்ற தொன்மையும் பெருமையும் மிக்க கலைச்செல்வங்களான வடமோடிக் கூத்து, தென்மோடிக் கூத்து வசந்தன் கூத்து, மகுடி கூத்து, குரவைக் கூத்து, மகுடிக் கூத்தின் உட்பிரிவான புலிக் கூத்து, விசேட கூத்து, நவீன நாட்டுக் கூத்து, கரகம், காவடி, கோலாட்டம், கும்மி, கொம்புமுறி, சுளகு நடனம்,செம்பு நடனம், அருவி வெட்டு நடனம், நாடகம், கோடு கச்சேரி ஆகிய கலைகளினால் ஆரையம்பதிப் பிரதேசம் சிறந்து விளங்கியது அவற்றுள் முதன்மையானது கூத்துக் கலையாகும்.

ஆரையம்பதியில் ஆரம்பகாலத்தில் வடமோடி, தென்மோடி கலந்த "விலாசம்" எனும் நாடக புதிய மாற்றங்கள் கொண்டவையாக நடிக்கப்பட்டன. அதில் அமரர் சு.பரசுராமன் "பவளக்கொடி எனும் விசால நாடகத்தில் பவளக்கொடி பாத்திரமேற்று நடித்து ஊர் மக்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டதாக கூறுமளவுக்கு பிரபலம் பெற்றுள்ளார்.

இப்பிரதேசத்தில் வடமோடி, தென்மோடி கூத்துக்களே பெரும்பாலும் ஆடப்பட்டுள்ளது. இவ்விரு கூத்துக்களுக்குமிடையே பெரிதும் வேறுபாடுகள் உள்ளன. அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலும் கதைப்போக்கு, ஆடல்வகை, உடை அணியும் முறைகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன. வடமோடி கூத்துக்கள் பெரும்பாலும் போர்செய்து வெற்றிபெறுவதிலும், தென்மோடி கூத்துக்கள் காதற் சுவை பயந்து காதல் கை கூடுவதாகவும் கதைப்போக்கு பெரும்பாலும் அமைந்து காணப்படும்.

வடமோடியில் வீரம், கோபம், அழுகை முதலிய சுவைகளும், தென்மோடியில் நகை, வியப்புப் போன்ற சுவைகளும் மேலோங்கிக் காணப்படும். தென்மோடியில் வடமோடியிலும் பார்க்க குத்திமிதித்தல், பிரட்டிமிதித்தல், துள்ளிமிதித்தல் போன்ற அதிக நுணுக்கமும் கடினமுமான ஆட்டங்கள் காணப்படும். அதனாலேயே வடமோடியில் வரவு ஆட்டத்தின் பின்னர் தம் வரவைக் குறிக்கும் பாட்டை கூத்தர் தாமாகவே படிப்பர். தென்மோடியில் அதனைப் பக்கப்பாட்டுக்காரர்(சபை)களே படிப்பர்.

வடமோடியில் விருத்தங்களை சாதாரண முறையிலும் தென்மோடியில் இழுத்தும் படிப்பர். வடமோடியில் கூத்தர் (நடிகர்) தம் பாட்டைப் படிக்க அதனைத் தொடர்ந்து பக்கப்பாட்டுக்காரர்கள் படிப்பார்கள். ஆனால் தென்மோடியில் பாடலின் கடசிப்பகுதியை மட்டும் பிற்பாட்டுக்காரர் படித்து விட்டுப் பாடலுக்கான தருவை முழுமையாகப் பாட கூத்தர் தாளத்திற்கேற்ப ஆடுவர். கூத்துப் பாடல்களைப் பாடும் முறையை அமைத்து காட்டும் ஒரு வித சொற்கோர்ப்பே தரு எனப்படும். வரவாட்டம், பாட்டு எனபவற்றை முடித்துக் கொண்டு, களரியை விட்டுப் போகும் வேளையில் காலமேற்றுதல் எனும் துரிதமான ஆட்டம் வடமோடிக்கே உண்டு, அது தென்மோடியில் இல்லை.

ஆட்டங்களுக்கு இணங்கவே கூத்தர்களின் உடைகளும் அமையும். தென்மோடியில் உடல் வருந்த வளைந்து ஆடுவதனால் பாரங் குறைந்தனவாய் இருக்கும் பூமுடிகளும், பட்டுதுணிகளாலும் மணிகளாலும் செய்யப்பட்ட உடைகளையும் அணிவார்கள். வடமோடியில் கெருட முடியும், இடுப்பில் ஒடுக்கமாகவும் கீழ்பாகம் அகன்ற வட்டமாகவும் கரப்புப் போல தொங்கும் வட்டுடைகளையும் அணிவர். ஆரையம்பதிப் பிரதேசத்தில் ஆடும் கூத்துக்களில் மேற்கூறப்பட்ட விடயங்கள் துல்லியமாகக் கைக்கொள்ளப்படுவது கண்டிப்பாயிருக்கும். ஆரையம்பதி பிரதேச கலாசாரப் பேரவையால் வெளியிடப்படும் சிகரம் சஞ்சிகைகளின் சின்னமாக வடமோடிக்குரிய கெருடமுடி பொறிக்கப்பட்டிருப்பதே இதற்குச் சான்றுபகரும்.

## ஆரையம்பதியில் ஆடப்பட்ட கூத்துக்கள்

### தென்மோடிக் கூத்துக்கள்

1985 ல் அல்லிநாடகம், 1920ல் வாளவீமன் நாடகம் 1945ல் அலங்காரரூபன் நாடகம், 1997ல் மறலியை வென்ற மங்கை.

### வடமோடி கூத்துக்கள்

1898ல் இராம நாடகம், 1913ல் திருத்தொண்டர் நாடகம், 1915ல் சந்திரகாசன் நாடகம், 1918ல் பப்பரவாகன் நாடகம், 1923ல் குருக்கேந்திரன் போர் நாடகம், 1935ல் சுபத்திரை கல்யாணம், 1938ல் சயந்தவன் நாடகம், 1940ல் குருக்கேந்திரன் போர், 1942ல் மார்க்கண்டேயர், 1955ல் கிருஸ்ணன்தூது, 1960ல் கண்ணகி சிலம்பு, 1962ல் 17ம் 18ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர், 1965ல் வள்ளியம்மன் நாடகம், 1970ல் லெட்சுமி கல்யாணம், பரிகாரிமகன் 1972ல், 1975ல் மீண்டும் பப்பரவாகன், 1993ல் அனுமன் கண்ட சீதை, 1994ல் மங்களதீபம், 2002ல் குருதட்சனை.

ஆரையம்பதியின் மூத்தகூத்துக் கலையின் முதிசமான அமரர் செ.பூபாலப்பிள்ளைப் பண்டிதர் அவர்கள், பேராசிரியர் சு.வித்தியானந்தனுக்கு முன்பே இங்கே கூத்துப் பணியை ஆரம்பித்துவிட்டார். கூத்துக் கலையை தேசிய மட்டத்திற்கு கொண்டு சென்ற பெருமை இவரையே சாரும். இலங்கை சுதந்திரமடைந்த ஓராண்டு பூர்த்தி விழா கொழும்பில் 1949.02.04இல் நடைபெற்ற காலை, பிரதேச கலைகளுக்கு முக்கியத்துவமளித்த வேளை, கிழக்கீழப் பிரதேசத்தின் பாரம்பரிய கலை வடிவமான, ஆரையம்பதியில் ஆடி, அரங்கேற்றப்பட்ட "சுபத்திரை கல்யாணம்" தெரிவு செய்யப்பட்டு, பண்டிதர் செ.பூபாலப்பிள்ளையின் தலைமையில் கொழும்பு மாநகரில் ஆடப்பட்டு பத்திரிகைகளினதும், உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரமுகர்களினது பாராட்டுதல்களைப் பெற்றது. 1952ஆம் ஆண்டு, இவரின் தலைமையிலேயே ஆரையம்பதிக் கலைஞர்களால் ஆடப்பட்டு பட்டி தொட்டிகளில் எல்லாம் பாராட்டுதல்களைப் பெற்ற "அலங்காரரூபன்", தென்மோடி கூத்தானது கொழும்பிலேயும் அரங்கேற்றப்பட்டு பாராட்டுப் பெற்றது. அன்றியும் இக்கூத்துக்கள் 1987.09.05, 1987.09.12, 1987.10.10, 1987.10.17, 1989.09.09, 1989.09.16ஆந் திகதிகளில் இலங்கை வானொலியில் ஒலிபரப்புச் செய்யப்பட்டதும் ஈன்று குறிப்பிடத்தக்கது.

### கூத்துக்கலை அண்ணாவிமாரும் மத்தள கலைஞர்களும்

ஆரையம்பதியில் ஆடப்படுகின்ற கூத்துக்களான வடமோடி, தென்மோடி, வசந்தன், மகுடிக் கூத்துக்களிலே பெரும்பாலும் மத்தாளமே பயன்படுத்தப்படுகின்றது. இக்கூத்துக்கலை முறைப்படி பயின்று விதி முறைகளுக்கமைவாகப் புனிதமாக பயிற்றுவித்து நெறிப்படுத்துபவர்கள் அண்ணாவிமார்களாகும். எனவேதான் அக்காலத்தில் கூத்துக்கள் தொடங்குவதற்கு முன் அண்ணாவியாரிடம்,

"அண்ணாவி என்பதற்கு பொருளைச் சொல்லு
அடிக்கும் இரு கரங்களுக்குச் சொரூபம் சொல்லு
பண்ணான தாளமதின் பண்பு சொல்லு
பரிதியென வளைந்த தோலின் பொருளும் சொல்லு
கண்ணான வாருக்குக் கருத்துச் சொல்லு
கட்டி வந்த வேட்டிக்குப் பொருளைச் சொல்லு
திண்ணமுடன் களரி நிற்கும் இடத்தைச் சொல்லு
திறமுடனே சால்வைக்குத் தீரம் சொல்லுமண்மகனே மத்தாள சக்தி சொல்லு
மனமுவந்து தென்வாசல் சந்தம் சொல்லு
கிண்ணென இசைக்கும் சல்லாரிச் சத்தம் சொல்லு
கிருடம்மெனும் தலைப்பாகைக் கீர்த்தி சொல்லு
மண்வளரும் மண்ணுயிரின் மகவைப் பாரும்
மத்தளத்தை எடுத்து நீர் அடிக்கும் முன்னம்
அண்ணாக்குள் நின்றிலங்கும் ஆதி ஆணை
அல்லது களரியை விட்டகலுவாயே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூத்தின் வித்தகம் தெரிந்த உத்தமர் வினாவிற்குத் தக்க பதிலை அவ்வண்ணாவிமார்களை

"அண்ணாவி என்று சொன்னால் ஆதி மூர்த்தி
அடிக்கும் இரு கரங்களுமே சிவத்துள் சக்தி
பண்ணான தாளம் தான் "ததிந் ததிந்தா"
பரிதிவட்டம் பரமசிவன் உரித்த தோலதாகும்
கண்ணான வாரதுவோ வாசுகிதான்
கட்டி வந்த வேட்டியதோ புலித்தோலாடை
திண்ணமான களரியது தில்லையம்பலம்
திறமுடைய சால்வையது நாகபாம்பு
மண்மகனே மத்தாளம் நந்தி தேவன்
மனமுடனே தென்வாசல் தருவினாலே
கிண்ணென இசைக்கும் சல்லாரியது பொற்தாளம்
கிரீடமெனும் தலைப்பாகை கங்கை, திங்கள்
மண்வளரும் மத்தாளத்தின் மாண்பு சொன்னேன்
மகத்துவமாய் மத்தாளம் அடிக்கும் முன்னம்
அண்ணாக்குள் நின்றிலங்கும் ஆதி ஆணை
அகன்றிடுவாய் இக்கருத்தை அறிந்து தானே"

என்று கூத்து மத்தாள வரமுறை அறிந்த அண்ணாவியார் பதில் கூறி கூத்தைத் தொடங்குவார்.

ஆரையம்பதியில் ஆடப்பட்ட கூத்துக்களை பாடி, ஆடுகின்ற, பழக்குகின்ற அண்ணாவிமார்களான அமரத்துவமடைந்தவர்களான க.பொன்னம்பலம் (வைத்தியர்), நா.நல்லதம்பி, பா.கணபதிப்பிள்ளை, வ.செல்லத்தம்பி, இராமர் காசுபதி, த.நல்லலிங்கம் (அதிபர்), க.காசுபதி, மு.சீனித்தம்பி போன்ற பலரும் தற்போது, கலையின் முதிசம் மு.கணபதிப்பிள்ளை (மூனாகானா), மூ.அருளம்பலம் (ஆரையூர் அருள்), பூ.இராசரத்தினம் (ஆசிரியர்), சீ.சிபபாதசேகரம், வே.பூபாலப்பிள்ளை இன்னும் சிலரும், மத்தளக் கலைஞர்களான அமரத்துவமடைந்த மூ.இளையதம்பி, கா.சாமித்தம்பி, சி.இரத்தினசிங்கம், க.செல்லதம்பி, சீ.கோணலிங்கம், ஓவிசியர் க.தம்பிராசா, த.நல்லலிங்கம் போன்றோர்களும், தற்போது பூ.இராசரத்தினம், சீ.சிபபாதம், வே.பூபாலப்பிள்ளை இன்னும் சிலர் உள்ளனர்.

கூத்துக் கலைஞர்களுக்கான ஆடைகள் அலங்காரப் பொருட்கள், மற்றும் உபகரணங்களான, வில், அம்பு, கட்டாரி, வாள், தண்டாயுதம், வாகனங்களான குதிரை, மாடு, மயில் போன்றவைகளையும் ஒப்பனைகளும் செய்யும் கலைஞர்களாக அமரத்துவமடைந்தவர்களான க.நல்லதம்பி, கா.கண்ணப்பர் போன்றவர்களும், தற்போது செ.அரசரெத்தினம், க.கார்த்திகேசு, ஐ.சிவானந்தராசா, ஐ.மகேசானந்தம் போன்ற பலர் மேஸ்த்திரிகளாகவும் ஒப்பனையாளர்களாகவும் உள்ளனர்.

இங்கு வாழ்ந்த, வாழ்கின்ற கூத்துக் கலைஞர்களான அமரர் க.காசுபதி, ந.கோபாலன், செ.தம்பிப்பிள்ளை, இ.சோதிநாதன், பொ.தருமலிங்கம் போன்றோரும் தற்போது மூ.அருளம்பலம் (ஆரையூர் அருள்), பூ.இராசரெத்தினம் (ஆசிரியர்), மு.நடராசா, க.தம்பிராசா, சிபபாதம் இன்னும் பலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரையம்பதியிலே கூத்துக்கலைக்காக கலாபூசண விருதுபெற்று கூத்துக்கலை சிறக்க பொட்டிட்ட பொற்குடங்களாக மூ.கணபதிப்பிள்ளை (1995இல்), அமரர் திருமதி. தங்கம்மா சந்திரசேகரம் பல கூத்துக்களில் பெண்பாத்திரமேற்று நடித்து(2002இல்) அமரர் த.நல்லலிங்கம்(2005இல்), மூ.அருளம்பலம் (ஆரையூர் அருள் (2010இல்)) தேசிய விருது பெற்று ஊருக்கே புகழ் சேர்த்தனர்.

நவீன நாட்டுக்கூத்து என்னும் விசேட நாட்டுக்கூத்து ஆரையம்பதியிலே முதன்முதலாக மு.கணபதிபிள்ளை (மு.க) அவர்களால் 1993ஆம் ஆண்டு "லெட்சுமி கல்யாணம்" எனும் மரபு வழி மாறாத வடமோடிக் கூத்தாக ஆடப்பட்டது, இதே ஆண்டு மட்/ஆசிரியர் கலாசாலையில் மாணவர்களால் ஆடப்பட்டது. "பரிகாரிமகன்" எனும் விசேட கூத்து 1972இல் ஆரையம்பதி கவின்கலை மன்றத்தினால் தயாரிக்கப்பட்டு 1997.03.03இல் கொழும்பு லயன்ஸ்வென்ற் அரங்கில் நிதியுதவிக்காக அளிக்கை செய்யப்பட்டு புகழ்பெற்றது. தொடர்ந்து நவீன நாட்டுக்கூத்தான விசேடக்கூத்து 1992இல் "வழிதவறிய வஞ்சி" மூ.அருளம்பலம் (ஆரையூர் அருள்) அவர்களால் எழுதி, தயாரித்து ஆரையம்பதி ஸ்ரீ கந்த சுவாமி ஆலய மேடையில் அரங்கேற்றப்பட்டு, பாராட்டைப்பெற்றது, 1994ல் "மங்களதீபம்" எனும் விசேட கூத்து அதே அரங்கில் மூ.அருளம்பலம் (ஆரையூர் அருள்) அவர்களால் எழுதப்பட்டு, பழக்கி அரங்கேற்றப்பட்டது.

பாரம்பரியக் கலைவடிவமான கூத்துக்கலை 1994இற்குப் பின்னர் படிப்படியாக மந்தநிலையை அடையத் தொடங்கியதற்கு பல பின்வரும் காரணங்களால் நலிவடையத் தொடங்கிவிட்டது. எமது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலை காரணமாக மாலையாகி விட்டாலோ, பகலிலோ வெளியில் நடமாட முடியாத நிலை. ஆரையம்பதி கலைஞர்களோ இளைஞர்களோ, யுவதிகளோ வெளியில் நடமாட முடியாத நிலை ஏற்பட்டதோடு இடம்பெயர்ந்து செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டது. இந்த நிலை கூத்துக்கலைஞர்களின் ஆர்வத்தைக் குறைத்ததோடு இளம் தலை முறையினர் இதில் அக்கறையின்றி ஈடுபட விருப்பமின்றி இருந்தனர்.

அன்று ஆரையம்பதி கிராமத்திலே சித்திரை வருடப்பிறப்பு கொண்டாட்டத்தை தொடர்ந்து மகுடிக்கூத்து பல இடங்களில் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் பின்நேரங்களில் நடைபெற்று வந்தது. வைகாசி மாதம் கண்ணகை அம்பாள் சடங்கு காலங்களில் வசந்தன் கூத்தும் ஆடப்பட்டும் வந்தது. கண்ணகை, மாரி, பேச்சி, காளி ஆலயச் சடங்கு நேரங்களில் பெண்களின் குரவைக் கூத்தும் நடைபெற்று வந்தது, ஆனால் இவ்வாறு ஆரையம்பதி மக்களிடையே வாழ்வில் சந்தோசம், படிப்பினை, நல்வழிப்படுத்தும். இக் கூத்துக்கலைகள் மக்கள் மத்தியிலிருந்து மறைந்து அழியும் நிலைக்கு தள்ளப்படவுள்ளமைக்கான காரணங்களைப் பின்வருமாறு வரையறை செய்யலாம்.

மேல் நாட்டு கலாசாரமோகம், சினிமாவின் தாக்கம், கைபேசி,தொலைக்காட்சித் தொல்லைகள், அறிவியல் மறுமலர்ச்சி, அந்நியநாட்டு கலைகளில் ஈடுபாடு,இளைய தலைமுறையினரின் கல்வி நாட்டம், தொடர் உழைப்பு, போர்ச்சூழல், கூத்துக்கலையில் மக்களின் ஆர்வம் இன்மை, போதிய நிதி உதவியின்மை, அரச ஆதரவு குறைவு, படித்தவர்கள் முன்வராமை, இக் கிராமத்தவர் நகரத்தை நோக்கி இடம்பெயர்ந்தமை ஏற்பட்ட அனர்த்தங்களால் கலைப் பொக்கிசங்கள் பாதுகாப்பின்றி அழிந்து போனமை போன்ற இன்னோரன்ன காரணங்களும் கூத்தின் வளர்ச்சியில் தாக்கம் செலுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பிரதேசத்தின் பண்பாட்டு பாரம்பரியங்களை வெளிப்படுத்தும் கலைவடிவங்களான கூத்துக்களை தற்போது பல்கலைக்கழகங்களில் நாடகமும் அரங்கியலும் எனும் பிரிவினிலே கல்வி பயின்று வெளியேறிய, வெளியேறும் மாணவர்கள் தற்போது ஊக்கமுடன் ஆக்கசெயற்பாட்டில் ஓரளவு ஆர்வம் காட்டுவது எதிர்காலத்தில் கூத்துக்கலை புத்துயிர்ப்பு அடையும் என்பது ஓரளவு நம்பிக்கையை அளிக்கின்றது எனவே மண்முனைப்பற்று பிரதேசத்தின் கூத்துக்கலை பாரம்பரியத்தை வளர்த்து வரும் ஆரையம்பதியானது எமது மூதாதையர்கள் எனக்கு கையளித்துச் சென்ற இக் கூத்துக்கலைகளை பண்பாட்டு மரபு மாறா வகையில் எதிர்காலத்தில் எடுத்துச் செல்ல இளம் சந்ததியினர் முன்வந்துள்ளமை தற்போது பயின்றுவரும் கூத்துக்கள் சான்று பகருகின்றது.

**நாட்டார் கலை கற்றல்**
**திறந்தமட்டம்**
**முதலாமிடம்**

**திரு.மூ.அருளம்பலம்**
ஆரையம்பதி - 01

## சிறுவர் பிரிவு கவிதை பாடல் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம்

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | - | **செல்வி.ஜீஅவிஷ்னயா**<br>மட்/ஆரையம்பதி இராமகிருஸ்ணமிஸன் மகா வித்தியாலயம் |
| 2ம் இடம் | - | **செல்வன்.யோ.டிக்ஷன்**<br>மட்/மாவிலங்கத்துறை விக்னேஸ்வரா வித்தியாலயம் |
| 3ம் இடம் | - | **செல்வி.ம.கோபிகா**<br>மட்/மாவிலங்கத்துறை விக்னேஸ்வரா வித்தியாலயம் |
| | | **செல்வி.க.நமீதா**<br>மட்/மாவிலங்கத்துறை விக்னேஸ்வரா வித்தியாலயம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணாதாசன் கவிதைகள்

அண்ணாதாசன் எனும் புனைப் பெயர் கொண்ட கி. துரைராஜசிங்கம் மட்டக்களப்பு வந்தாறுமூலை கிராமத்தில் 28.07.1956 ஆம் ஆண்டு பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை மட்/வந்தாறுமூலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கற்று உயர்தரக் கல்வியை மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் நிறைவு செய்து ஆசிரியராக கடமையாற்றிய இவர் இலங்கை சட்டக்கல்லூரி கொழும்பில் சட்டப்படிப்பினை நிறைவு செய்து சட்டத்தரணியாக கடமையாற்றியதோடு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராகவும், மாகாணசபையின் விவசாய அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார்.

அண்ணாதாசனின் முதலாவது கவிதை அவரது ஒன்பதாவது வயதில் 1965 ஆம் ஆண்டு ஸ்ரீகோவிந்தசாமியால் வெளியிடப்பட்ட "சுடர்" கையெழுத்து சஞ்சிகையில் வெளிவந்தது. "துரையன்" என்ற புனைப்பெயரில் "மூட்டை" எனும் தலைப்பில் இக்கவிதை வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

மூட்டை எங்கும் மூட்டை
மூலை முடுக்கெங்கும் மூட்டை
நாம் படுக்கும் படுக்கை
மூட்டையிட கோட்டை

மூட்டையிட வேட்டை
முதுகினிலே பல குட்டை
மூட்டையிடும் சேட்டை
முஸ்பாத்திக்கு முட்டுக்கட்டை
என் சட்டையிலிருந்த மூட்டை
நண்பன் சண்முகத்தின் வீட்டை
மூட்டையிட பாட்டை
முடித்துவிடும் "ரன்பக்"

இவ்வாறு அண்ணாதாசனின் முதற்கவிதை அமைந்திருந்தது. பாடசாலைக் காலத்தில் இலக்கிய மன்றம், இளைஞர் பேரவை எனும் அமைப்புக்களினூடாக பல கவிதைகளை எழுதிய இவர் மாணவர் பேரவையில் செயற்படும் போது 1969 ஆம் ஆண்டு "உதயசூரியன்" எனும் கையெழுத்து சஞ்சிகைக்கு பிரதம ஆசிரியராக இருந்து பல கவிதைகளை எழுதியுள்ளார்.

1975 ஆம்ஆண்டு "கண்டேன் தமிழ்த் தாயை" எனும் குறுங்காவியம் ஒன்றை வெளியிட கவிஞர் காசியானந்தனின் முன்னுரையை பெற்றும்.அதே போன்று1986ஆம் ஆண்டு "கிராமத்த கீதங்கள்" கவிதை மற்றும் பாடலாக்க நூலுக்காக கவிஞர் திமிலைத்துமிலனின் முன்னுரையை பெற்றும் இரண்டு நூல்களும் இது வரை வெளிவரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுதந்திரன்" பத்திரிகையில் அதிகமான கவிதைகளை எழுதிய அண்ணாதாசன் "தினபதி", "வீரகேசரி" முதலாக பத்திரிகைகளிலும் "இருக்கிறம்","சிவசக்தி""வயல்" முதலான சஞ்சிகைகளிலும் இன்னும் பல சிறப்பிதழ்களிலும் கவிதைகளை எழுதிய அண்ணாதாசனின் இருநூற்றுக்கும் மேற்பட்ட கவிதைகள் இதுவரை வெளிவராமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட சில பத்திரிகைகளிலும்,சஞ்சிகைகளிலும் கவிதைகளை எழுதி கவிஞராக அடையாளம் காணப்பட்ட அண்ணாதாசன் அவர்களின் கவிதைகள் ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் அதிகம் தாக்கம் செலுத்தவில்லை என்றே கருத முடிகிறது. இவற்றுக்கான காரணம் இவருடைய கவிதைகள் நூலுருப் பெறாமையும், இவரது கவிதைகள் மற்றும் பிறர் ஆக்கங்கள் விமர்சனக்கட்டுரைகள் வெளிவராமையும் என்று கூற முடிகின்றது. ஆக அண்ணாதாசனின் கவிதைகள் மற்றும் இவரது கவிதைகள் தொடர்பான மேலதிக ஆவணங்கள் புத்தக வடிவிலோ தேவைக்கேற்ற விதத்தில் கட்டுரை வடிவிலோ இல்லை என்பதே முடிவாகிறது.

கையெழுத்தாக இருக்கின்ற கவிதைகளையும் அச்சில் வெளிவந்த ஒருசில கவிதைகளையும் ஆய்வு செய்கின்ற போது அண்ணாதாசனின் கவிதைகளின் முக்கியத்துவம், அவை எழுதப்பட்ட அல்லது வெளிவந்த காலத்தின் சமூகப் பிரதிபலிப்பு, கவிதைகளின் கருப்பொருள் என வேறுபட்ட உருவ, உள்ளடக்க அம்சங்களை கண்டு கொள்ள முடிகின்றது.

அந்த வகையில் குறிப்பிட்ட பிரதான விடயங்களின் அடிப்படையில் அண்ணாதாசனின் கவிதைகளை ஆய்வுக்குட்படுத்துதல் சிறப்பு என கருதுகின்றேன்.

1. அரசியல் சார்ந்த கவிதைகள்
2. சமூகம் சார்ந்த கவிதைகள்
3. பண்பாடு சார்ந்த கவிதைகள்

அரசியல் சார்ந்த கவிதைகள் எனும் வகையில் இவரது கவிதைகளை உள்வாங்கும் போது நூற்றுக்கு எழுபது வீதமான கவிதைகள் அரசியல் அல்லது மொழியுணர்ச்சி பற்றிய கவிதைகளாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஈழத்து கவிதை இலக்கிய வரலாற்றில் மொழியுணர்ச்சிக் கவிதைகள் அல்லது தமிழர் அரசியலை மையப்படுத்திய கவிதைகள் ஐம்பதுகளில் இருந்து வெளிவரத் தொடங்கின எனலாம். தமிழ்த் தேசிய உணர்வின் அடிப்படையில் அக்காலத்தினை பிரதிபலிக்கின்றவையாக பல கவிஞர்கள் உணர்ச்சிமிக்க கவிதைகளை படைத்துள்ளனர்.

ஈழத்தில் தமிழர் அதிகமாக வாழ்கின்ற பிரதேசங்கள் அல்லது மாவட்டங்களில் இவ்வாறான தமிழ்த் தேசிய உணர்வுமிக்க பல கவிதைகளும் பல கவிஞர்களும் தோற்றம் பெற்றனர். குறிப்பாக மட்டக்களப்பு பிரதேசத்தில் நீலாவணன்,காசியானந்தன், இராஜபாரதி, எருவில் மூர்த்தி, பாண்டியூரான் வாகரைவாணன், செ. குணரெத்தினம், செங்கதிரோன், ஆரையூர் அமரன், கோவிலூர் தணிகா, ஆ.மு.சி. வேலழகன், செ. சிவானந்ததேவன் முதலியோரும் இன்னும் பலரும் அரசியல் சார்ந்த கவிதைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியுள்ளனர். இவர்களின் வரிசையில் அண்ணாதாசனும் அரசியல் கவிதைகள் எழுதியவராக சொல்லக்கூடியவர். இவருடைய ஆரம்பகால கவிதைகளில் சில எடுத்துக்காட்டாக கீழ் குறிப்பிடப்படும் கவிதைகளை நோக்கலாம்.

“தாய் கொடுத்த பாலுண்டு
தமிழ் இரத்தம் அதிலூறி துடிப்பதுண்டு
நீ கொடுத்த தமிழுண்டு
நிச்சியமாய் தமிழீழம் கிடைக்குமென்று
போர் தொடுக்க புறப்பட்ட
புலித் தமிழர் கூட்டம்
நின் கண்முன் உண்டு
நீ இதற்கு நாயகமாய்
நிமிர்ந்து உணர்ந்து நடந்திடுவீர்
வருக அண்ணே!

கவிஞர் காசியானந்தனை வரவேற்று எழுதிய இக்கவிதையில் தமிழ்த் தேசிய உணர்வினை தமிழ் மக்கள் கொண்டிருந்த பற்றுறுதியினை வெளிப்படுத்துவதாக உள்ளது.

தை 2009 “வீரகேசரி” பத்திரிகையில் “சடங்குப் பொங்கல்” எனும் தலைப்பிடப்பட்ட கவிதையிலும் இவரது தமிழ் தேசிய அரசியல் சார்ந்த வரிகளை கண்டு கொள்ள முடிகிறது. “கிழக்கு வான் பருதி உள்ளக் கிடக்கையை” என ஆரம்பிக்கும் இக்கவிதையில்

“பிள்ளையைத் தேடும் அன்னை
பேத்திதை தேடும் பாட்டி
அண்ணனைத் தேடும் தம்பி
ஆளனைத் தேடும் மங்கை
உள்ளொளிப் பரப்பில் தேடும்
உயர் பக்தர் போலுமானோர்
அங்குள மரத்தின் கீழே
அகதிகள் முகாமினுள்ளே
தங்களின் உற்றார் வீட்டில்
தரிப்பிட நிலையந் தன்னில்
வேதனை வாழ்வில் மக்கள்
வெங்கொடுஞ் சிறையில் என்று
இங்கிவ நிகழும் போதில்
இதயத்தில் இன்பம் பாயப்
பொங்கலோ செய்வீர் போங்கள்
போலிக்கோர் சடங்குப் பொங்கல்”.

2009 ஆம் ஆண்டு அரசியல் நிலவரத்தையும் யுத்தம் நிறைவடைந்து மக்களின் துயரத்தினையும் சடங்கு பொங்கல் மூலம் அண்ணாதாசன் வெளிப்படுத்தியுள்ளார். பொங்கலை பற்றி எழுத நுழைந்த கவிதையுள்ளும் தமிழர் அரசியல் தளத்தின் பிரதிபலிப்புக்கள் காலத்தை காட்டும் கண்ணாடியாக விளங்குகின்றமை அண்ணாதாசனின் கவித்துவத்தை வெளிக்காட்டுகின்றது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் பத்திரிகையின் 1972 ஆம் ஆண்டு வெளிவந்த "விடுதலை வேட்கை" எனும் கவிதை இவருடைய அரசியல் அல்லது மொழியுணர்ச்சி கவிதைகளுக்கு மிகுந்த உதாரணமாக விளங்குபவை என்பதில் ஐயமில்லை.

சுட்டாலும் சுட்டுப் பொசுக்கி - எம்மை
துண்டு துண்டாக்கி
துவைத்து உண்டாலும்
கட்டாந் தரையில் கிடத்தி - பல
மாமலையர் எனை வைது நின்றாலும்
எட்டாத பழம் அவர் எண்ணம்.

இக்கவிதை பற்றி "கோவை மகேசன்" சுதந்திரனில் தனது ஆசிரியர் தலையங்கத்தில் அடிக்கோடிட்டு காட்டிய விடயமும் கவனிக்கத்தக்கது. சிவக்குமாரன் இறந்த செய்தியை கேட்டு எழுதிய இன்னுமொரு கவிதை மற்றுமொரு உணர்ச்சியை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

"செறுக்களத்தின் வரிப்புலியே சிங்க ஏறே
சிவகுமாரா! விழுந்தனையோ மண்ணில் மேலே
தமிழ்க் குலமே துயர் கடலில் அடடா உந்தன்
தனித்திறன்தான் என்ன அடா - துணிவின் குன்றே"

இவ்வாறு சந்தர்ப்பத்திற்கும் தான் கவி எழுதிய காலத்திற்கும் ஏற்றாற் போல் உணர்வு மேலீட்டால் பல கவிதைகளை அண்ணாதாசன் படைத்துள்ளார்.
முடியாது, நீதி, தாய், வழி, விரக்தி என பல தலைப்புகளில் காணப்படும் கவிதைகளில் அரசியல் சார்ந்த விடயங்களை காண முடிகிறது. கவிஞன் காசியானந்தனின் கவிதை போன்று உணர்ச்சிகளையும், உள்ளத்தை தட்டியெழுப்புகின்ற கவிவரிகளை இவரின் கவிதைகளில் காண முடியவில்லை. ஆனாலும் மொழிநடைப் பிரயோகம், அவலத்தை கூறும் விதம் சம்பவத்தை இலகுவாக மனதில் பதியும் வண்ணம் கூறுகின்ற தன்மை சிறப்பென்றே கருத முடியும்.

கவிதையின் தலைப்பிலும் கவிதையின் ஆரம்பத்திலும் கவிதையின் வெளிக்கருத்திலும் அரசியலை காண முடியாமல் அதாவது அரசியல் சார்ந்த கருத்துக்களை கண்டு கொள்ள முடியாத அளவுக்கு சில கவிதைகள் காணப்பட்ட போதிலும் மீள் வாசிப்பு அல்லது கருத்தூன்றிய வாசிப்பின் போது அரசியல் உணர்வினை தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களை அண்ணாதாசனின் கவிதைகளில் கண்டு கொள்ளலாம்.

இவர் கவிதை எழுத ஆரம்பித்த காலம் இத்தகைய சூழலுக்கு இவரைக் கொண்டு சென்றுள்ளது என்பது வெள்ளிடைமலையே. 1965 ஆம் ஆண்டு இவர் முதலாவது கவிதையை எழுதியிருந்த போதும் கிட்டத்தட்ட எண்பதுகளில் இருந்தே இவரது கவிதைகள் பல எழுதப்பட்டிருப்பதாக காணமுடிகிறது. அந்தவகையில் அண்ணாதாசனின் ஆரம்பகால கவிதைகளை சமூகம் சார்ந்த சாதாரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்கயையும் எடுத்தியம்பும் கவிதைகளாகவும், 1980 தொடக்கம் 2009 வரையிலான காலப்பகுதியில் எழுதப்பட்ட அல்லது வெளிவந்த கவிதைகள் அநேகமானவை அரசியல் சார்ந்த விடயங்களை எடுத்தியம்பும் விடயங்களாகவும், 2009 க்கு பிற்பட்டகால கவிதைகள் சமூகத்தில் ஆங்காங்கே நடைபெறும் சம்பவங்களின் வெளிப்பாடாகவும் பிரித்து பார்க்க முடிகிறது.

1980 இற்குப் பின் எழுதப்பட்ட கவிதைகளை ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து கீழ் குறிப்பிடப்படும் கருப்பொருட்கள் கவிதைகளின் சாராம்சமாக அல்லது மையப்பொருளாக அமைந்துள்ளது என்பதை கண்டு தெளியலாம். இவை அரசியல் சார்ந்த கவிதைகளில் தொகுக்கப்பட்ட விடயங்களாகும்.

1. தமிழ் மக்களுக்கு இளைக்கப்ட்ட்ட துரோகங்கள், வன்முறைகள் கூறுவனவாக அமையப்பெற்ற கவிதைகள்.
2. இடையிடையே எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் நிலைப்பாடுகள் பற்றிய கவிதைகள்.
3. தமிழ் ஈழப் போராட்டம் அதன் வரலாறு பற்றிய கவிதைகள்
4. தமிழ்த் தேசிய உணர்வு மிக்கவர்களின் இழப்பு பற்றிய கவிதைகள்
5. அகதி வாழ்க்கை, இராணுவ கெடுபிடிகள் என பல்வேறுபட்ட அம்சங்களை உள்ளடக்கமாக கொண்டு இவரது கவிதைகள் அமைகின்றன.

மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் எழுதிய அநேகமான கவிஞர்களின் கவிதைகளில் கருப்பொருளும் இவையே.

“கோழியின் கொக்கரிப்பு
உரியவன்
அதை எடுக்க வேண்டும்
என்பதற்கான அமைப்பு”

இவ்வாறான பல சிறிய சிறிய கவிதைகள் வெளிப்படையாக ஒரு பொருளையும் உள் பொருள் அரசியல் கருத்துக்களையும் வெளிக்காட்டுபவையாக அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும்.

அண்ணதாசன் கவிதைகளில் சமூகம் சார்ந்த பல கவிதைகளையும் பிரித்து பார்க்க முடிகிறது. சமூகம் எனப்படும் போது தான் சார்ந்த தமிழ்ச் சமூகத்தை பிரதிபலிப்பவையாகவே இவருடைய கவிதைகள் அமையப் பெற்றுள்ளன. சுகாதாரம், கல்வி, காதல் உறவுகள், பொருளாதாரம், துஷ்பிரயோகங்கள், சிறுவர் மற்றும் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் என பல்வேறு சமூக மட்டத்தில் வாழ்வோரின் இன்னல்களை இவரது கவிதைகள் வெளிக்காட்டுகின்றன.

“ மூட்டை” எனும் தலைப்பில் 1965 இல் ஆரம்பமான சமூகக் கவிதைகள் இன்றுவரை பல கவிதைகளில் பதிவு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அண்ணாச்சியை உபசரிப்பதில்
அவ்வளவு அக்கறை தங்கச்சிக்கு
அடுத்த நாளே கோபித்து கொள்கிறாள்
ஏன் எதிர்பார்த்தாளாம்
ஏமாற்றி விட்டாளாம்
கணவனை உபசரிப்பதில்
அவ்வளவு அக்கறை மனைவிக்கு
ஏன்? ஊரார் அவளை
மெச்ச வேண்டுமாம்
பதிவிரதை என்று
மூன்று வேளை உண்ணாதவன் மகன்
மூன்றாம் வேளை உண்ணாததற்காக
கவலைப்படுகிறாள் - ஏன்?
அவள் தாய் என்பதால்
ஆகக் கூடினால் மற்றையோர்
அரை வழிக்குத்தான் துணை
ஆனால் அன்னையோ
ஆயுள் வரை துணை."

"தாய்" எனும் இக்கவிதை ஓர் வித்தியாசமான சிந்தனையில் ஏனைய உறவுகளோடு ஒப்பிட்டு ஒரு வசனத்திலே தாயின் சிறப்பை சிறப்பிக்கின்றமையை காணலாம்.

அண்மையில் வெளிவந்த 1000 கவிஞர்கள் கவிதைகள் எனும் கவி நூலில் "எவரிடம் போய் நான் கேட்க" என்ற தலைப்பில் உள்ள கவிதை அண்ணாதாசனின் காதல் கவிதைகளுக்க சிறந்த எடுத்து காட்டாகும்.

கண்ணில் இருக்கின்ற கண்ணீரையே கொட்டி
உன்னில் இருக்கின்ற உணர்ச்சிகளை கொட்டுகின்றாய்.
பெண்ணின் உணர்வென்று பேசாது இவ்வுலகம்
என்னில் அது வந்தால் ஏளனமாய் போகாதா?
எண்ணி ஓரக்காள் என்பின்னே இரு தங்கை
என்னை நிகர்த்தோர்கள் உள்ளார்கள் என் வீட்டில்
தண்ணி தவிக்கின்ற தெனக்கும் ஆனாலும்
உண்ணீர் என ஊட்ட உள்ள கடன் தள்ளுதா?

கள்ளி உனைவிட்டு பிரிகின்ற போதிலெல்லாம்
கிள்ளி எடுக்கிறாய் என்மனதை அம்மாடி
பள்ளி தொடக்கம் பணி செய்யும் இன்றுவரை
உள்ளில் இருக்கின்ற உணர்ச்சிகளை நீ அறிவாய்
அள்ளி உனைத்தூக்கி ஆலாக்காய் கொண்டுசெல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளியின் இனமாய் படைத்திருக்க கூடாதா?
புள்ளி மயிலே பொறு என்று சொல்லுகிறேன்
புண்ணில் எரி வைத்தால் புளங்காகிதம் வருமா?

உன்னை எவருக்கும் ஒப்பிட நான் பேயனில்லை
என்னை உணர்ந்தவள் நீ என்னிலையும் நீ அறிவாய்
தென்னை இளநீரும் தீக்கிரையும் முருங்கும்
தின்ன இருக்கின்ற நாட்களில் தின்னாமல்
பின்னர் ஒரு நாளில் பேய்விருந்து வைக்கின்ற
பெற்றி கருதி மனம் பேதலித்து போகுதடி
என்ன தவக்குறைவோ ஏனிந்த சோதனையே
என்னை நீ கேட்டால் எவரிடம் போய் நான் கேட்க.

இக்கவிதை காதலோடு இணைந்து சமூகத்தின் பல கதைகளையும் கூறுகின்றது. இரு தங்கைகள் இருக்கின்ற போது காதல் அல்லது திருமணத்தின் சாத்தியம் பற்றி கேள்வியெழுப்புகின்ற போது "கடன்" அல்லது "கடமை" என்கின்ற சமூகப் பொறுப்பினை எடுத்தியம்புகின்ற போக்கு சிறப்பானது.

"தென்னை இளநீரும் தீங்கீரையும் முருங்கும் தின்ன இருக்கின்ற நாட்களில் தின்னாமல்" இவ்வரிகள் காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும் என்ற கருத்தினையும் வலியுறுத்துகின்றது.
சமூகப் பிரச்சினைகளை பாடு பொருளாக கொண்ட அநேகமான கவிஞர்கள் பிள்ளைகள் அல்லது சிறுவர்கள் பிரச்சினைகளை எழுதாமல் விட்டதில்லை. அண்ணாதாசனும் விதிவிலக்கல்ல.

பிஞ்சுக் குழந்தைகளே
உங்களுக்காக இரங்குகின்றேன்
நீங்கள்
பிறந்த அன்றே
இறந்திருக்க கூடாதா?
ஒன்று செய்யுங்கள்
பெரியவர்களோடு சேராதீர்கள்
உங்களுக்கென்று
தனியரசொன்றை நிறுவுங்கள்
இதய சுத்தி உங்களுக்கு
மட்டுந்தான் இருக்கு
அதனை காப்பாற்ற
இதுவொன்றே வழி.

"வழி" எனும் இக்கவிதை மூலம் சிறுவர்களுக்கான வழியொன்றை தேடுகிறார் கவிஞர். அதிகமான வசனங்கள் வர்ணனைகள் இன்றி இலகுவாக ஓர் செய்தியினை கூறுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையினை அவதானிக்க முடிகிறது. "மனிதன்" எனும் கவிதையில் மனிதனின் குணாம்சங்களை கூறும் பாங்கு வித்தியாசமானது.

"கொல்லும் புலி, கொடு நாகம், நரி என்றும்
குரைக்கும் சுயநல நாய் - நிலை
கொள்ளாக் குரங்கு, நீலி முதலை
நிட்டுரஞ் செய் எருமை என்றும்
உள்ளிருந்தே கெடுக்கும் புழு
பண்டத்தை ஊதாரிக்கும் எலிகள்
எல்லாம் தனக்கென கொண்ட குணங்கள்
இம்மனிதன் கொண்டுள்ளான்"

இக்கவிதையில் கவித்துவம் அதிகம் காணப்படாத போதும் சில தனித்துவத்தினை கண்டு கொள்ள முடிகிறது. சகல மிருகக் குணங்களும் மனிதனை ஆட்கொண்டுள்ளது என வெளிப்படையாக கூறுகிறார் கவிஞர்.

கல்வி, உத்தியோகம் என்பவற்றை மையப்படுத்தியும் சில கவிதைகளை சமூக நோக்கோடு கவிஞர் எழுதியுள்ளார். இவருடைய "உரிமைச்சீட்டு" எனும் கவிதையினை எடுத்துக்காட்டாக பார்க்கலாம்.

"படித்து முடிக்கவே
பட்ட பாடு
வெடிக்கும் வேலைக்கும்
பசிக்கும் மத்தியில்

தரா தரப்பத்திர
திருவோடு தாங்கி
யாசித்தும் பூசித்தும்
வெறுமையே மீதி

அப்பா முதுகு
அரிவாள் ஆனது
அம்மாவின் ஆசையால்
ஆலயம் தேய்ந்தது

உழைத்துக் குவிக்கவோ
உத்தியோகம்
ஊரில் திரிய
உரிமைச் சீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கால கட்டத்தில் படிப்பு, உத்தியோகம் ஒன்று பார்ப்பதற்கு மாத்திரம் என்றில்லாமல் ஊரில் மதிப்பு மரியாதை பெறுவதற்கு மிக அவசியம் என்ற பொருளில் இக்கவிதை ஆக்கப்பட்டுள்ளது. படிப்பதற்கு பட்ட சிரமம், அப்பாவின் இடையறாத உழைப்பு, அம்மாவின் வேண்டுதல், வறுமை, பசி பட்டினி என்பவற்றோடு "வெடிக்கும்" என்ற வசனமும் கவனிக்கத்தக்கது.

சமூகத்தின் மீது தோன்றும் எண்ணவலைகளை கவிஞர் உடனுக்குடன் பதிவு செய்துள்ளார் என்பதில் ஐயமில்லை. மனதில் எழுந்த தாக்கங்கள்,உருவாகிய ஊக்கங்கள் உடனுக்குடன் கவிதை எழுத தூண்டியுள்ளது. மானுடம், அன்னை, வாழும் உலகு, சொந்த வாழ்க்கை, விடை தெரிந்த கணக்கு என பல்வேறு கவிதைகளை சமூகம் சார்ந்து அண்ணாதாசன் எழுதியுள்ளார். இவை கவிஞர்கள் மத்தியில் காணப்படும் பொதுத்தன்மை எனவும் குறிப்பிடலாம்.
நவீன கவிதையின் முன்னோடி பாரதியார் தொடக்கம் இக்கால இளங்கவிஞர்கள் வரைக்கும் சமூக நோக்கோடு சமூகத்தை விழிப்படையச் செய்ய கவிதைகள் படைத்த கவிஞர்கள் ஏராளம் அந்தவகையில் கவிஞர் அண்ணாதாசனும் தனது பங்களிப்பை நல்கியுள்ளார்.

கவிஞர்கள் தாம் சார்ந்துள்ள சமூகத்தின் அடிப்படையில் தங்கள் கவிதைகளில் பண்பாட்டு அம்சங்களையும் உட்புகுத்தி கவிதைகளை படைப்பது வழமை. அந்த வழமையோடும் அண்ணாதாசன் பயணிக்கிறார்.

மருத்துவ மனைக்கு கூட மதிலுக்கு
வெளியால நிற்கும் போதே
கருத்தினை கடவுட்பால் செலுத்தி
நேர்த்தி செய்து கண்ணைமூடிப்
பெருத்ததோர் ஆவலுடன் நின்றிடப்
பிரசவப்பக்கம் சென்றேன்
ஒருத்தி "நேர்ஸ்" வந்தவள் ஒரு கல்லைத்
தூக்கியென் தலையிற் போட்டாள்.

"என்ன கிளார்க்கரண்ண என்னத்தக்
கேக்கிறயள் யோகம்
முன்னதயப் போலதான்
இனி என்னத்த சுணங்காதங்கோ
எண்ணத்தை யென்டான வித்துப்போட்
டின்டைக்கே அத்திவாரம்
சின்னத் தனிசாக வெண்டானப்
போடுங்கோ! என்றாள் அன்னாள்.

இவ்வாறு தொடர்ந்து செல்கின்ற "வெற்றுரை" எனும் தலைப்பிடப்பட்ட இக்கவிதையில் பிரசவத்தின் போது நேர்த்தி வைக்கின்ற பண்பாடு, என்ன பிள்ளை என எதிர்பார்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பு, பெண் பிள்ளை பிறந்ததினால் இப்போதே வீடு கட்ட வேண்டும் என்ற பண்பாடு தொடர்பான விடயங்களை எடுத்துக் காட்டியுள்ளார்.

நாகரீகம் வந்ததால நாடு கெட்டுப் போச்சு
நாலு பணம் அஞ்சு பணம் நாதியற்றதாச்சு
ராஜரீக காரியங்கள் ரம்மியமாய் போச்சு
ரசனையெல்லாம் சிச் சீச் சீ வெக்கக் கேடாய் ஆச்சு
பண்டைய பண்பாடு பழுதடைகின்ற போது அல்லது பின்பற்ற தவறுகின்ற போது ஏற்படும் விரக்தியின் வெளிப்பாடாக இக்கவிதை அமைந்துள்ளது.

சூரியனுக்கொரு பொங்கல் - கொடுஞ்
சூலவயிரவர் - காளிக்கு பொங்கல்
மாரி மழைக்கொரு பொங்கல் - சிறு
மண்குடிசைதனை வைக்கவும் பொங்கல்
ஆலயங்கள் ஒரு கோடி - அங்கு
ஆண்டு முழுவதும் ஆயிரம் - கூடி
வேண்டுதல்கள் பல இங்கே வந்த
வேதனைக்கோ விடிவென்ற தொன்றில்லை.

"அறிவியற் பாதை" எனும் தலைப்பிடப்பட்ட கவிதையின் இரண்டாவது கவிதை மேற்கூறப்பட்டது. இக்கவிதையினை முழுமையாக நோக்குமிடத்தும், மேற்கூறப்பட்ட வரிகளின் பொருளினை ஆராயுமிடத்தும் பொய்மையான பண்பாடுகளை நீக்கி அறிவியற் பாதையில் பயணிக்கப்பட வேண்டும் எனும் கருத்துப்பட கவிஞன் கவிதை புனைந்துள்ளான். கவிஞன் பொய்மை என கூறும் சில விடயங்கள் இன்னொருவருக்கு மெய்மையாக தோன்றுவதில் தவறில்லை.

அரசியல், சமூகம், பண்பாடு என்பவற்றை பிரதான கருப்பொருளாக கொண்டு கவியெழுதிய அண்ணாதாசனின் கவிதைகளில் விஷேட அம்சங்கள் பல நிறைந்துள்ளமை சிறப்பம்சம் எனலாம்.

"அடுப்பினை மூட்டச் சென்ற
அழகர் ஆ வென்று நின்றார்.

சடங்குப் பொங்கல் எனும் கவிதையில் வருகின்ற வரிகள்.இவை போன்ற பேச்சு வழக்கோடு இணைந்த பல வரிகள் இவரின் கவிதைகளில் காணமுடிகிறது.
"சுப்பனுக்கு வந்ததொரு சுடலை ஞானம்" கொள்ளையாப் பெத்திட்டம் என்று கோபமா" என்று கணவர் கேட்க, மனைவி "இல்லையா புன்ன" என்பதில் கூறுவதாக அமையும் உரையாடல் பாங்கு,

"ரெண்டு கோழி வச்சிருந்தே சீவிச்ச காலம், ச் சீ, சிறுக்கி
ஆவெண்டுத்து பென்னம்பெரிய, சுருக்கென்று, பிலாக்கணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளி. இவ்வாறு சாதாரண பிரதேச பேச்சு வழக்கு சொற்களையும் நேர்ஸ், கிளார்க் போன்ற ஆங்கில சொற்களையும் பயன்படுத்தியுள்ளார்.
மேழும் சமவுடமைப் பொருளாதாரம், மாக்ஷிய சிந்தனை அடிப்படையிலும் இவரது கவிதைகள் அமைந்துள்ளன.

"வண்டி வளர்த்துச் சிலரிருப்பர் - பலர்
உண்டி இழுத்திடுவார் - சிலர்
உண்டி அருந்திக் களைப்பார் - சிலர்
உண்டியின்றிக் களைப்பார் - சிலர்
மண்டபங்கள் அமைப்பார் - பலர்
மண்குடிசை அமைப்பார் - சிலர் இந்த
ரெண்டு நிலைமையை மாற்றி வழமை
ஒன்றென செய்திடுவோம்"

சிறு சிறு கவி வரிகளிலேயே பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் இவருடைய கவிதைகள் அமைந்துள்ளன.

"விளங்காப் பாஷை
விளங்கா விட்டால்
முழங்கால் தண்டனை
முதுகும் வெடிக்கும்" எனும் கவிதையும்

"தேவை அறிந்து
செய்கை நடந்தால்
தீமை ஒழிந்து
சிறக்கும் நாடு"

இக்கவிதை பாரதியாரின் அக்கினிக் குஞ்சினை நினைவு படுத்துகின்றது.
பெண்ணியம் சார்ந்த சிந்தனை போக்கினையும் அண்ணாதாசனின் கவிதைகளில் காணலாம்.

பெண்மையை விலை போடாதீர் எனும் கவிதையில்,

"சீ. என்ன வெட்கக்கேடு
செந்தமிழ் நாட்டில் வந்து
பாவடி போருக்கெல்லாம்
பைத்தியம் வந்ததாமோ?
ஆ வலில் ஆ என்கிறார்
ஆகாகா .. என்கிறார்கள்
ஏவலனின் பேய்கள் போல
ஏனையா கவி செய்கின்றீர்"

பெண்களை பற்றி பிழையான எண்ணத்தோடும் கவர்ச்சியாகவும் எழுதும் கவிஞர்களை சாடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுகை மோனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தும் சில இடங்களில் சொல்ல வந்த விடயங்களை வலிந்து சொல்லக் கூடாது என்ற எண்ணத்தில் எதுகை மோனைகளை தவிர்த்தும் தான் சொல்ல வந்த விடயத்தினை எந்தவித கட்டுப்பாடும் இடையூறும் இன்றி சுதந்திரமாக சொல்லுவது போன்றே இவரது கவிதைகள் அமைந்துள்ளன.

சிறு வசனங்கள் மூலமாக செய்திகளை சொல்கின்ற பாங்கு, நையாண்டியாக எடுத்துரைக்கும் முறை, இலகு தமிழ் கையாளுகை, உதாரணங்கள், ஒப்பிட்டு நோக்கும் தன்மையென இன்னோரன்ன விடயங்களை அண்ணாதாசன் கையாண்டு கவிதைகள் எழுதியுள்ளார்.

அரசியல், சமூகம், கலை, பண்பாடு, பெண்ணியம், சுகாதாரம், பொருளாதாரம் என பல்வேறு துறைகளை மையப்படுத்திய இவருடைய கவிதைகள் அநேகமானவற்றில் "மொழியுணர்ச்சி" மேலோங்கி காணப்படுவது மறுப்பதற்கில்லை. இவ் மொழியுணர்ச்சிக்கான காரணம் ஏலவே கூறியது போல அண்ணாதாசனின் கவிதை எழுதிய காலத்தின் சூழல், பிறந்து வளர்ந்த பிரதேசம், பின்பற்றியிருக்கும் அரசியல் பின்னணி, அவரது கவிதை வளர்ச்சியில் பங்கெடுத்த "சுதந்திரன்" பத்திரிகை என்பவற்றோடு "அறிஞர் அண்ணாவின்" அடிமை எனும் பொருள்பட தான் புனைந்திருக்கும் "அண்ணாதாசன்" எனும் புனைப்பெயர் இவை அனைத்தும் இணைந்தே இவரை மொழியுணர்ச்சிக் கவிஞர் என்ற பிரிவுக்குள் உள்ளடக்கியிருக்கக்கூடும் எனக் கருத முடிகிறது.

சிற்சில இடங்களில் மொழியுணர்ச்சிக்கு சில விதிமுறைகளை அல்லது வரம்புகளை கவிஞர் வைத்துள்ளமையினையும் அவதானிக்க முடிகிறது. குறிப்பிட்டு சொல்லக்கூடிய ஓரிரு நூல்களில் அல்லது இதழ்களில், பத்திரிகைகளில் மாத்திரம் கவிதை எழுதி ஏனைய கவிதைகளை கையெழுத்தாகவே வைத்துள்ள அண்ணாதாசனின் கவிதைகள் நூலுருப் பெறும் போதுதான் வாசகர் மத்தியில் அவை முழுமையாக சென்றடைந்து ஆய்வுக்கு துணை புரியும் என்பதில் அசையாத நம்பிக்கை எனக்குண்டு.

ஈழத்து நவீன கவிதை முன்னோடிகள் மத்தியில் இருந்து அண்ணாதாசனை வேறுபடுத்தி விஷேட தனித்துவத்தினை வெளிப்படுத்தி வெளிக்காட்ட முடியவில்லை. ஆனால் தமிழ்த் தேசிய உணர்வோடு கவிதைகள் எழுதிய கவிஞர்கள் மத்தியில் தனக்கென தனி இடத்தினையும் இவர் தக்க வைத்துள்ளார் என்பதற்கு இவரின் கவிதைகள் சாட்சியாகும்.

**முற்றும்**

**நாட்டார் கலை கற்றல்**
**திறந்த மட்டம்**
**முதலாமிடம்**

**திரு.த. இன்பராசா**
புதுக்குடியிருப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் ரஸ உணர்ச்சியில் நயம் மிகுநாட்டார்பாடல்

நாட்டார் பாடல் என்று வர்ணிக்கப்படும் கிராமிய இலக்கியம் கிராமப்புற மக்களின் வாழ்வியல் அம்சங்கள், பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகள் தொழில் முயற்சிகள் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்களது உள்ளத்தில் இருந்து இயல்பாகவே ஊற்றெடுக்கும் பாடல்கள் ஆகும். இப்பாடல்கள் கற்றோர் கல்லாதோர் என்ற வேறு பாடின்றி நாட்டுப்புற மக்களால் இயல்பாகவே பாடப்படுபவையாகும். இவற்றை நாடோடிப் பாடல், வாய்மொழி இலக்கியம், நாட்டார் பாடல்கள், கிராமியக் கவிதைகள் என பல பெயர் கொண்டு அழைப்பர்.

நாட்டார் பாடல்கள் ஏட்டில் எழுதப்படாமல் எழுதாக்கிளவியாக இருந்தாலும் ஆண்டாண்டு காலமாக அழிந்து சிதைந்து, மறைந்து விடாமல் சாகாவரம் பெற்று வாய் வழி இலக்கியமாக இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. உள்ளத்தில் உதிப்பனவற்றை எவ்வித கட்டுப்பாடுமின்றி உள்ளதை உள்ளவாறே கூறும் உண்மைத் தன்மையானது. ஏட்டு இலக்கியத்திலும் பார்க்க வாய்மொழி இலக்கியத்திலேயே பெரிதும் காணப்படுகின்றது. இதனால் தான் நாட்டுப் பாடல்களை "உணர்ச்சிமிகு கலைப்படைப்புக்கள்" என அழைக்கின்றோம். பிறப்பு தொடக்கம் இறப்புவரை மனித வாழ்வில் இடம்பெறும் எல்லா நிகழ்வுகளும் நாட்டார் பாடல்களின் கருப்பொருட்களாக அமைவது பெருஞ் சிறப்பு என்று குறிப்பிடலாம். நாட்டார் பாடல்கள் பாடப்படும் சந்தர்ப்பங்களுக்கேற்ப வெளிப்படும் உணர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு பல வகையினதாய் பிரிக்கப்படுகின்றன.

அந்த வகையில் மீன்பிடிப்பாடல், தாலாட்டுப் பாடல், ஏர்ப்பாடல், அரிவிவெட்டும் பாடல், ஒப்பாரிப்பாடல், நலங்குப்பாடல், வயற்பாடல் என்பன மட்டுமன்றி காதலர்களின் கள்ளமில்லா உள்ளத்தில் எழும் உயரிய உணர்வுகள் வெளிப்படும் வகையில் பாடப்படும் காதல் பாடல் என்பனவும் நாட்டார் பாடல்களில் அடங்குகின்றது. நாட்டார் பாடல்களில் காதல் உணர்வு பொருந்தியகாதல் பாடல்கள் மிகச் சிறப்பாக கையாளப் பட்டிருக்கின்றது.

காதலின் போக்கில் பலநிலைகள் உள்ளன. அவை ஆண் பெண் சந்திப்பு நலம் பாராட்டல், ஊரார் காணல், தாய் தந்தை எதிர்ப்பு, காதலர் சந்திப்பதற்குத் தடை காதலை உறுதிப்படுத்தல் என்பன கிராம மக்களிடையே காணப்பட்டன. இவற்றை அடியொற்றியதாகவே தம் கற்பனையில் விபரித்து கவிஞர்கள் இலக்கியங்களை எழுதினர். ஆனால் காதலுக்கு கற்பனையில் வடிவம் கொடுப்பவையாக நாட்டார் பாடல்கள் அமையவில்லை. அந்த வகையில் தலைவனும், தலைவியும் நேரடியாகப் பேசிப்பழகி தம் காதலை தொடர்வதில் இருந்து இறுதியில் திருமணம் நிகழும் வரையான காலப்பகுதிக்குள் காதலர்களின் உள்ளத்தில் இயல்பாகவே தோன்றும் உணர்ச்சிகள் காதல் பாடலாக உருவெடுத்துள்ளது. கிராமங்களில் பெண்கள் தண்ணீர் எடுப்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளங்களை நாடிச் செல்பவர்கள் அங்கே ஆண்கள் அப்பெண்கள் மீது தமது கவனத்தை செலுத்துவது உண்டு. தான் விரும்பும் பெண் எந்தநேரம் வருவாள் என்பதை அறிந்து கொண்டகாதலன் தன் காதலி தண்ணீர் எடுத்துச் செல்லும் போது இவ்வாறு பாடுகின்றான்.

பூவலைக் கிண்டிப்
புதுக்குடத்தைக் கிட்டவைச்சி
ஆரம் விழுந்தகிளி
அள்ளுதுதாநல்லதண்ணி"

அது மட்டுமன்றி வயலிலே வேலை செய்யும் போது களைப்படைந்து பக்கத்தில் உள்ள நீரோடையில் நீர் அருந்த செல்லும் வேளையில் அந்த நேரம் பார்த்து அவனது மைத்துனி வருகிறாள். வாய்க்காலில் தண்ணீர் குடிக்கும் அத்தானைக் கண்டு விட்டாள் அந்த கள்ளமற்ற அன்புள்ளம் கவிதை வடிக்கின்றது.

வாய்க்காலில் ஓடும் தண்ணியிலே
வண்டுவிழும் தும்பிவிழும்
கூட வாமச்சான்
குளிர்ந்ததண்ணிநான் தாரன் "

மகாகவி பாரதியார் மனதிலும் கூட காதலின் உணர்வுகள் வெளிப்பட்டு நிற்கின்றது. அதாவது பாரதி மாலை நேரம் ஒன்றில் கடற்கரையில் வானத்தினதும் கடலினதும் அழகை ரசித்து தன்னை மறந்திருந்த நிலையில் காதலியாகிய கண்ணம்மாவை நினைத்து மனதில் எழுந்த பாடலாக இப்பாடல் அமைகின்றது.

மாலைப் பொழுதினிலேஒருமேடைமிசையே
வானையும் கடலையும் நோக்கியிருந்தேன்
மூலைக் கடலினையவ் வானவளையம்
முத்தமிட்டே தழுவி முகிழ்தல் கண்டேன் "

கிராமிய மக்களின் காதல் கடற்கரையிலும் கொட்ட கைகளிலும் கள்ளத் தனமாக ஏற்படுத்திக் கொள்ளும் காதல் அல்ல உள்ளத்தால் உறவில் ஒன்றுபட்ட உரிமைக் காதல். மனித உள்ளுறைவுகளை மறைக்காமல் வெளிப்படுத்தும் பாமர மக்களின் பண்பட்ட மனநிலையினையும் அவர்களது ஆற்றலையும் வெளிப்படுத்தும் சிறந்த காதலாக அமைகின்றது. காலை வேளையில் வயல்களில் பெண்கள் வேலை செய்யவரும் போது ஒரு பெண் மட்டும் சுணங்குகிறாள் இதனை கண்ணுற்ற ஆடவன் ஒருவன் இவ்வாறு பாடுகிறான்.

கண்ணாடி வளையல் போட்டு
களையெடுக்க வந்த புள்ள
கண்ணாடி மின்னலிலே - உன்
களையெடுப்பு பிந்துதடி! "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டார் பாடல்களில் 'கைக்கிளை" பாடல்களையும் காணலாம். அதாவது கைக்கிளை என்பது ஒரு தலைக்காதல் ஆகும். தலைவனுக்கு ஏற்பட்ட காதலில் தலைவியின் அழகில் மயங்கி இவ்வாறு பாடுகின்றான்.

மாலைப்பதினி தாரேன்
மனசுக்கேத்த ரவிக்கை தாரேன்
முலாங்கிழங்கு தாரேன் - என்னை
புருசன் என்று கூப்பிடு"

காதலர்கள் தனது காதலை வீட்டாரும் சம்மதிக்க மறுத்த வேளையில் ஊரை விட்டு ஓடிவரும் போது களைப்பு ஏற்பட காதலன் காதலியைப் பார்த்து இவ்வாறு பாடுகின்றான்.

கையோடு கை கோர்த்து
காணல் வழி நடக்கையிலே
மெய் சோர்ந்துவிழுந்ததென்ன
பெண் குயிலேகண்ணாட்டி"

காதலரின் கனவு நிலை நிறைவேறாக் காதலில் உண்டாகும் ஏக்கம் முதலாகிய உணர்வுகளுக்கும் நாட்டார் பாடல் செல்வாக்கு செலுத்துகின்றது.

கைவிடுவேன் என்று எண்ணிக்
கவலைப்படாதே கண்ணார்
கடவுள் மேல் ஆணை உன்னை
அடையாட்டி காட்டுப்பள்ளி"

என்ற பாடல் அடிகளில் 'காதல் போயின் சாதல்" என்ற தத்துவம் எவ்வளவு அழகாக உணர்ச்சியோடு வெளிப்படுகின்றது.

இவ்வாறான நாட்டார் பாடல்களை அடியொற்றிய பாடல் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் மெல்லிசைப் பாடல்களாக நிகழ்ச்சியில் ஒளிபரப்பாவதைக் காணலாம். நாட்டார் பாடல்களில் காதல் பாடல்கள் இன்ப துன்பங்களும் ஏக்க உணர்வுகள் நிறைந்ததாக காணப்படும். இங்கு சொற்களை விடவும் உணர்வுகளே மேலோங்கி காணப்படுகின்றது. ஆகவே நயம்மிகு நாட்டார் பாடல்களில் காதலின் சிறப்பு உணர்வுகளின் மூலம் எழுப்பப்படும் பாடல்கள் மூலமே வெளிப்படுகின்றன என்பதை எம்மால் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

செல்வி.ம.மைதிலி
மட்/கிரான்குளம் விநாயகர் ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் இலக்கியம்

தமிழில் தற்போது நவீன சிறுவர் இலக்கியங்கள் படைக்கப்படுகின்ற போதிலும், அவற்றின் தரம் குறைவு காரணமாக, அவற்றின் பெரும்பாலானவை புற்றீசல்களாக தோன்றி விட்டில் பூச்சிகளாய் மறைந்து விடுகின்றன. சிறுவர் இலக்கியமும் நவீன இலக்கியங்களுள் ஒன்றாகும். சிறுவர் இலக்கியத்தை எழுதுகின்ற பலரும் உளவியல் அறிவின்றி, சிறுவர்களாக மாறாமல் பெரியவர்களாக நின்றே எழுதுகின்றார்கள்.

நான் இலக்கிய விபரண விமர்சனத்துக்காக "சிறுவர் பாடல்கள்", ஆசிரியர் க.முரளிதரன் (வில்லூரான்) அவர்கள் உளவியல் உண்மை உணர்ந்து எழுதியுள்ளமையாலே இந்த நூலை தெரிவு செய்துள்ளேன். சிறுவர் இலக்கியங்களுள் ஒரு வகையான சிறுவர் பாடல்கள் சார்ந்தது இந்நூல். சிறுவர் பாடல்கள் சிறுவர்களுக்கு பிடித்தமான பொருள்கள் சார்ந்ததாகவும், அவர்களது அனுபவ வட்டத்துள் சேர்ந்தனவாகவும் இருக்க வேண்டும். சிறுவர்களின் மொழிவளம், கற்பனைத்திறன், கிரகிக்கும் திறன், அலசி ஆராயும் திறன், மதிப்பிடும் திறன் என்பன சிறுவர் இலக்கியம் மூலம் வளர வேண்டும். சிறுவர் பாடல்களுக்கு சந்தம் முக்கியம், அவற்றோடு எளிய சொற்கள், தெளிவான பொருள், நல்ல கற்பனை, இனிய சந்தம், சிறந்த உணர்ச்சி கொண்ட பாடல்களே சிறந்த சிறுவர் பாடல்கள் என்று சொல்லி விடலாம். இவ்வடிப்படையில் இந்நூலிலும் சிறுவர்களுக்கு பிடித்தமான பறவைகள், மிருகங்கள், உயிரினங்களைப் பொறுத்தவரை எறும்பு, நரி, அணில், கிளி, யானை, கோழி, ஆடு, முயல், காகம், பச்சோந்தி, பூக்கள். இயற்கைக் காட்சிகள் பற்றிய பாடல்கள் உள்ளன. இவற்றுள் சில அவற்றின் அழகையும் பண்பையும் விபரிப்பனவாகவும், மேலும் சில சிறுவர்களுக்கு நன்நெறிகளையும், நற்பழக்க வழக்கங்களையும் எடுத்தியம்புகின்றன. சில விடயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பாடல்களும் காணப்படுகின்றன.

இந்நூலில் காணப்படும் மொத்தம் அறுபது பாடல்களில் சிலவற்றில் அறிவியல் நோக்கும் வெளிப்படுவது கவிஞரின் ஆளுமை, அனுபவத்தை காட்டி நிற்கின்றன. "நுளம்பு" பற்றிய முதல் பாடலே, உயிரைக் கொல்லும் நுளம்பினை அழிக்க வேண்டுமானால் சிறுவர் முதல் பெரியோர் வரை சூழலை சுத்தமாகப் பேண வேண்டும் என்ற கருத்தினை அழுத்தமாகக் கூறுவது சிறந்த உதாரணமாகும்.

"ஊர்ந்து சின்ன எறும்புகள்
ஊர்வலமாய்ப் போகுது
தூர்ந்த நிலத்தைத் துளைத்துமே
தூக்கும் உணவைத் தேக்குது
..................................................
சின்னஞ் சிறுவர் நாமுமே
சிற்றெறும்பைப் போலவே
சேர்ந்து சுறுசுறுப்புடன்
சேமிக்கவே பழகுவோம்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சின்னச் சின்ன எறும்புகள்", என்னும் பாடல் ஆரம்பத்தில் அவற்றின் பண்பை விளக்கி, இறுதியில் அவற்றைப் போலவே சுறுசுறுப்புடன் சேமிப்புப் பழக்கத்துடனும் வாழ வேண்டும் என வலியுறுத்துவது வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல, சிறுவர்கள் உள்ளங்களில் எளிமையான முறையில், சுறுசுறுப்பு, சேமிப்பு பழக்கங்களையும் பாடல் மூலம் பதிப்பது பாராட்டத்தக்கதாக உள்ளது.

"வாழைமரம்" பாடலில் மருத்துவ பயன்கள் பல சொல்லப்படுகின்றன. "பச்சோந்தி" என்னும் பாடல் சிறுவர்களின் பொழுது போக்கான விளையாட்டைச் சுட்டிக்காட்டி, பச்சோந்தியை வதைப்பது, பாவம் செய்யக்கூடாது என அறிவுறுத்துகின்றது. "நீராவி", என்ற பாடல் இத்தியாதி விடயங்களை எளிமையாக எடுத்துக்காட்டுவதற்கு சிறந்த உதாரணமாகும்.

'வீட்டுத்தோட்டம்", என்னும் பாடலில்,

"அம்மா நட்ட கத்தரியோ
அழகாய் காய்த்து நிற்கிறது
அப்பா நட்ட அவரையோ
அழகாய் பூத்துக் குலுங்குகிறது
தங்கை நட்ட தக்காளியோ
தரையில் நாய்ந்து கிடக்கிறது
அக்கா நட்ட வெண்டியும்

ஆகா ஓகோ காய்க்கிறது", அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, தம்பி, தங்கை, பாட்டன், பாட்டி என வீட்டிலுள்ள உறவுகளையும் கூறி, வீட்டிலுள்ள அங்கத்தவர்கள் அனைவரும் வீட்டுத் தோட்ட உருவாக்கத்தில் ஒற்றுமையாய் உழைக்கும் சேதியையும், வீட்டுத் தோட்டத்தின் முக்கியத்துவத்தையும், வீட்டில் சேரும் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தல், உடலுழைப்பு, பயனுள்ள வகையில் பொழுதைக் கழித்தல், வீட்டுத் தேவையை பூர்த்தி செய்வதுடன் காலம் முழுதும் கையில் காசு சேர்தல் ஆகிய விடயங்களையும் பாடலாசிரியர் "பசுமரத்தாணியாக", இனிய சந்தம், எளிமையான சொற் சேர்க்கையால் எடுத்துக்கூறி, இப்பாடலைப் படிப்பவர்கள் அனைவரினதும் பாராட்டை பெறுவார் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

அதிகமான சிறுவர் பாடலாசிரியர்கள் கவனியாத சில விடயங்களையும் இப்பாடலாசிரியரான கவிஞர் வில்லூரானின் கவனத்தை ஈர்த்துள்ளன. "மீனவர் வாழ்வு", "ஊனமுற்றோர்", "படைப்பின் வியப்பு", "உழவு போற்றுவோம்" பற்றியவை. விஞ்ஞானக் கண்டுபிடிப்பு பற்றியும் சில பாடல்கள் இடம் பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது. இவற்றுள் ஒரு பாடலான "கணனி" பாடல் குறிப்பிட்டதொரு விடயத்திற்கு மட்டும் அழுத்தம் கொடுத்து, "கர்சிதமாக" அமைந்துள்ளது.

எடுத்துக்காட்டாக,

"மொனிட்டர்" என்ற திரையும்
உழுது எதுவும் பார்க்கவே
உரிய "மவுசிச்" சுட்டியும்
எழுதி அதில் சேர்க்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்ற "விசைப்பலகை"யும்
முழுதும் நினைவில் வைத்திட
"மூளை" என்ற பெட்டியும்
கொண்ட தந்தக் கணனிக்குள்
அண்டமேதான் அடக்கமே
விண்டு வியந்து சொல்லினும்
விரல்கள் இன்றி இயங்குமோ'.

கதைப் பாடல்கள் அமைப்பிலும் சில பாடல்கள் இத்தொகுப்பில் உள்ளன. "புதிய நரியும் புரிந்துணர்வுள்ள காக்கையும்", "முல்லைக்குத் தேர் கொடுத்த மன்னன்", "புத்திமான் பலவான்" ஆகிய கதைப்பாடல்கள் பல எழுதப்படுவதும் அவை புதியனவாகவோ புதிய பார்வை கொண்டனவாகவோ அமைவதே விரும்பத்தக்கது.

தமிழ் இரட்டைக் கிளவி பற்றிச் சிறப்பானதொரு பாடலை இயற்றித் தந்துள்ளார் கவிஞர் வில்லூரான்.

வள வளவென - நீ
கதைக்கும் போது
கல கலவெனப் - பிள்ளை
சிரிக்குமே பாரு
சல சலவென - நீர்
ஓடிடும் போது
மள மளவென - மரம்
துளிர்க்குது பாரு
பொல பொலவென - மழை
பொழிந்திடும் போது
சிலு சிலுவென - உடல்
சிலிர்க்குது பாரு

இசை லயத்துடன் பல பாடல்கள் அமைந்துள்ளன. அவற்றுள் "குப்பை மேட்டில் கோழி என்ன தேடுது", என்ற பாடல் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

குப்பை மேட்டைக் கிளறியே
கோழி என்ன தேடுது
கொத்திச் சொண்டால் எடுத்துமே
குஞ்சிக் கிரைதான் போடுது
"சிறகு எமக்கு இல்லையே",
என்னும் பாடலிலும் இப்பண்பைக் காணலாம்.

பட்டு மேகம் பட்டு மேகம்
பயணம் எங்கே போகுது
முட்டி மோதி முட்டி மோதி
முழு மதியை சூடுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனனம் செய்வதற்கேற்ற இசை லயத்துடன் இப்பாடல்கள் அமைந்துள்ளமை கவிஞரின் ஆற்றலுக்கு அணி சேர்க்கின்றது.

சூழலியல் தொடர்பான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பல பாடல்கள் இடம் பிடித்துள்ளமையும் பாராட்டுக்குரியது. குறிப்பிட்டதொரு சமூகத்தின் வாழ்க்கை முறைமை பற்றிச் சிறுவர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு "மீனவர் வாழ்க்கை பாரம்மா", என்னும் பாடல் அமைகின்றது. "பந்தின் விந்தை" விஞ்ஞான விளக்கத்துடனான அணுகுமுறை பயன்படுத்தப்பட்டிருப்பதையும் காணலாம்.

இன்னோசை உடையனவாகவும் சிறுவர் பாடல்கள் அமைய வேண்டும். இத்தொகுதியிலுள்ள பல பாடல்களை அவ்வாறு கவிஞர் அமைத்துள்ளது அவரின் இசை ஞானத்தை எடுத்தியம்புகின்றது.

அறுவதாவது பாடலாகிய "பிறர் போற்ற வாழனும் தம்பி", என்ற பாடல் எதுகை, மோனை, தாள லயத்தோடு அமைக்கப்பட்டள்ளதோடு சிறுவர்களுக்கு இப்படி இப்படி நடந்தால் எப்படி எப்படி நன்மைகள் சேரும் எனப் புத்தி புகட்டுவதாக அமைந்துள்ளது.

இத்தொகுதிப் பாடல்களில் மேற் கூறிய சிறப்பம்சங்கள் காணப்பட்டாலும், சில தவிர்ப்புக்களும் சில சேர்ப்புக்களும் இடம் பெற்றிருக்குமாயின் பூரணமான சிறப்பினை இந்நூல் பெற்றிருக்கும். சிறுவர்களுக்கு விருப்பமான பொருட்களுள் புதியவை அதிக இடம் பெற்றிருக்கவில்லை. ஆங்காங்கே கடினமான சொற்கள் தலை நீட்டுவதனால் ஓசை முறிவுகள் காணப்படுவதும் கவனித்தற்பாலானது. இருப்பினும் இந்நூல் சிறுவர் இலக்கியத் துறைக்கு வளம் சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது ஆறுதலை தரும் என்பது எனது திண்ணமான எண்ணம்.

**இலக்கிய விவரணம்**
**திறந்த மட்டம்** — திரு.மூ.அருளம்பலம்
**முதலாமிடம்** — ஆரையம்பதி

## கனிஷ்ட பிரிவு கவிதை பாடல் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம்

1ம் இடம் - செல்வி.லோ.டனிஷா
மட்/ஆரையம்பதி இராமகிருஸ்ணமிஸன் மகா வித்தியாலயம்

2ம் இடம் - செல்வி.இ.இந்துஜா
மட்/மாவிலங்கத்துறை விக்னேஸ்வரா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் பாடல்கள்

**சமூக வாழ்வியல் நாட்டாரியல்.....**

காலம் சுழன்றோடி அளப்பரிய மாற்றங்கள் கண்டுள்ள தற்கால யுகத்திலே மாற்றம் ஒன்றே மாறாத ஒன்றாக காணப்படுகிறது. இவ்வரிசையில் மனித நாகரிகமும் குறிப்பிடத்தக்கதொன்றாகும். மனித நாகரிகமானது மாற்றம் பெற ஆரம்பித்ததில் இருந்து கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம் ஆகிய அனைத்தும் மருவி வரும் சூழலே நிலவி வருகிறது. அந்த வகையில் நாட்டுப்புற பாடல்களும் இவற்றுள் உள்ளடக்கப்பட வேண்டியதொன்றாகும்.

நாட்டுப்புறப் பாடல்கள் முன்னைப் பழமைக்கு பழமையாகவும், பின்னைப் புதுமைக்கும் புதுமையாகவும் விளங்குபவையாகும். இப்பாடல்கள் இனிமையானவை, எளியவை, வாயில் பிறந்து செவிகளில் நிறைந்து பதிவு பெறுபவை. இப்பாடல்கள் எப்போது பிறந்தவை எவரால் பாடப்பட்டவை என உறுதியாக அறுதியிட்டுச் சொல்ல முடியாத பெருமையினை கொண்டவை.

நாட்டுப்புறங்களில் வாழும் மக்கள் தங்கள் அன்றாட வாழ்வியலும் தொழிற் களங்களிலும் பணி நேரங்களிலும் களைப்பைக் குறைக்கும் வகையிலும், விழாக்கள், பண்டிகைகள், விளையாட்டுக்கள் என்பவற்றின் போது மகிழ்ச்சியை குறித்துப் பாடும் பாடல்கள் நாட்டார் பாடல்கள் எனக் கூற முடியும். நாட்டார் பாடல்கள் பெரும்பாலும் அந்தந்த கால கட்டத்தில் ஏற்படும் நிகழ்ச்சிகள் மீதான நாட்டார் கருத்தை எதிரொலிக்கும்.

நாட்டார் பாடலை நாட்டுப்புறப்பாடல், கிராமியப்பாடல், பாமர ஜனகானம், பொது ஜனகானம், தெம்மாங்கு எனப் பலவாறு அழைப்பார். நாட்டுப்புறப் பாடல்களின் கவர்ச்சியான இசை, மற்றும் பயிற்சி பெறாதவர்களாலும் பாடக்கூடிய எளிமையான இஸ்தாயி எல்லையும், மெட்டும், சாதாரண நடையிலும் கதை சொல்லும் நடையிலும் அமைந்தமையே அவற்றின் சிறப்பிற்கு காரணமாகும். நாட்டுப்புறப் பாடல்கள் அவை பாடப்படும் சூழல் நிகழ்வு தன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பலவாறு வகைப்படுத்தப்படுகின்றன. அவற்றுள் சில

தொழில் முறைசார் நாட்டார் பாடல்கள்
பாரம்பரிய விளையாட்டுப் பாடல்கள்
தாலாட்டுப் பாடல்கள்
ஒப்பாரிப் பாடல்கள்
பண்டிகைப்பாடல்கள்

என்பனவையாகும். நாட்டுப்புறப் பாடல்களிலே தொழிற்பாடல் எனப்படுபவை மனிதர்கள் கூடித் தொழில் செய்யும் போது அக்கூட்டுறவில் பிறப்பவை ஆகும். தொழிற்பாடல்கள் என வரையறுக்கும் போது மீனவப்பாடல்கள், விவசாயப் பாடல்கள் என்பனவை குறிப்பிடத்தக்கவை ஆகும். தொழிற் பாடல்களிலே அன்பு மலர்வதையும் பாசம் பொங்குவதையும் உழைப்பில் ஆர்வத்தையும் நன்மையில் ஈடுபாட்டையும் தீமையில் வெறுப்பையும் காணக் கூடியதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பாடல்கள் தொழிலாளர்களது இன்ப, துன்பங்களையும், விருப்பு வெறுப்புகளையும், ஆசாபாசங்களையும், நெஞ்சுக்குமுறல்களையும் வெளியிடுபவையாக அமைகின்றன. தொழிற்பாடல்களை ஏலோலங்கிடி பாட்டு, தில்லாலங்கடிபாட்டு, தெம்மாங்குபாட்டு. ஏற்றப் பாட்டு, வண்டிக்காரன் பாட்டு என்றெல்லாம் வழங்குவர். தொழிற் பாடல்களுக்கு உதாரணமாக

ஏலேலோ ஐலசா
வானமுட்ட ஏலேலோ இழுக்குறானே ஐலசா
விளையரிசி தினையரிசி வேலம்ப நாட்டில்
வேலம்ப நாட்டிலொரு வெள்ளாட்டுக்குட்டி
உண்ண உணவு தந்திடும்
உழவர் வாழ்க வாழ்கவே
மண்ணை உழுது விதைத்திடும்
உழவர் வாழ்க வாழ்கவே
கரையோரம் ஆலமரம் கரைக்கு கீழவேலமரம்
ஊறோரர் தென்னைமரம் அருவி வெட்டும் செக்கோடமா

எனும் பாடல்களை எடுத்துக்காட்ட முடியும். அத்தோடு சிறுவர்கள் விளையாடும் போது பாடப்படும் பாடல்கள் விளையாட்டுப் பாடல்கள் எனப்படும். பாட்டும், விளையாட்டும் ஒன்றிணைந்து இருக்கும் இப்பாடல்கள் நாட்டார் பாடல் வகைகளினுள் உள்ளடங்கும். விளையாட்டுப் பாடல்களுக்கு உதாரணங்களாக

கிட்டிப்புள்ளு ஆலையிலே சோலையிலே ஆலங்காடிச் சந்தையிலே
கிள்ளுப்பிராண்டி - கிள்ளி கிள்ளிபிராண்டி, கீயாமீயா பிராண்டி
கேள்விவிடை - என்ன அன்னம் - சோத்தன்னம் என்ன சோறு - பழஞ்சோறு

போன்றவற்றை எடுத்து நோக்க முடியும்.

நாட்டுப்புறப் பாடல் வகைகளில் தாலாட்டும் ஒன்றாகும். வாய்மொழியாக பாடப்பட்டு வந்த தாலாட்டுக்கள் தற்போது பல்வேறுபட்டவர்களால் சேகரிக்கப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன. குழந்தையின் அழுகையை நிறுத்தவும் தூங்க வைக்கவும் பாடப்படும் பாட்டே தாலாட்டு ஆகும். தாலாட்டுப்பாடல்கள் கிராமிய மக்களின் வாழ்க்கையோடு உணர்வுகளோடு பின்னிப்பிணைந்த நாட்டுபாடல் வகைகளில் ஒன்றாகும்.

தாலாட்டுப் பாடல்கள் இனிமையான இசையை உடையவை அவ்விசையில் மயங்கி குழந்தை மெய்மறந்து தூங்குகின்றது. தால் என்பது நாவைக் குறிக்கும். நாவினால் ஓசை எழுப்பி குழந்தையை உறங்க வைப்பதே தாலாட்டுதல் எனவும் கூறுவர். தாய் தன் குழந்தையை மடியிலோ, தோளிலோ, கைகளிலோ, தொட்டிலிலோ வைத்து ஆட்டிய வண்ணம் தாலாட்டுவதே வழக்கம். ஆராரோ ஆரிரரோ என்ற சந்தம் மூலம் ஓசை எழுப்புவதால் இது ஆராட்டுதல் என்று கூறப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலாட்டின் தொடக்கத்திலும் முடிவிலும் இடையிலும் ராராரோ, ஆராரோ, ஆரிரரோ என்ற பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. நீலாம்பரி எனப்படும் இன்ப மூட்டும் இராகத்திலேயே தாலாட்டுப்பாடல்கள் பெரும்பாலும் பாடப்படுகிறது. தாலாட்டுப் பாடல்களில் குழந்தையின் அருமை அதன் விளையாட்டுப் பொருள்கள், மாமன் பெருமை, குலப்பெருமை போன்றன கூறப்படுகின்றன. அத்தோடு இத்தாலாட்டுப் பாடல்கள் தத்ரூபமான உவமை, உருவக அணிகள் கையாளப்பட்டு பாடப்பட்டுள்ளன.

கொவ்வை இதழ் மகளே - என்
குவிந்த நவரத்தினமே
கட்டிப் பசும் பொன்னே - என்
கண்மணியே கண் வளராய்
என்ற தாலாட்டுப் பாடலிலே குழந்தையானது நவரத்தினமாகவும் கட்டிப் பசும் பொன்னாகவும் கண்மணியாகவும் உருவகித்துப் பாடப்பட்டுள்ளமை எடுத்துக்காட்டத் தக்கது ஆகும். தாலாட்டுப் பாடல்களுக்கான உதாரணங்களாக

பச்சை இலுப்பை வெட்டி
பவளக்கால் தொட்டிலிட்டு
பவளங்காள் தொட்டிலிலே
பாலகனே நீயுறங்கு

பால் குடிக்கக் கின்னி
பழம் திங்கச் சேனாடு

கைவீசம்மா கை வீசு
கடைக்குப் போகலாம் கை வீசு

நிலா நிலா ஓடிவா
நில்லாமல் ஓடிவா

வரம் கோடிவாங்கி வந்த அரும்பே
எங்கள் குலம் காக்ககையில் வந்த கரும்பே
என்பவற்றைக் குறிப்பிடமுடியும்.

இவ்வாறாக ஏனைய நாட்டுப் புறப் பாடல்களும் பாடல்களுக்கான கருத்தை முன்னிறுத்தி பாடப் பெற்றவையாகவே அமைந்துள்ளன. அத்தோடு பிற்காலங்களில் நாட்டுப்புறப்பாடல்கள் இலக்கியங்களிலும் இடம் பெறலாயின. இப்பாடல்கள் வாய்மொழி மூலமாக ஆரம்பித்து இலக்கியவடிவம் பெற்றுள்ளபோதும் இவை மருவிவரும் சூழ்நிலையே நிலவிவருகிறது. மண்வாசனை கமழும் எமது கிராமிய இசைப்பாடல்களாகிய நாட்டார் பாடல்களை எமது எதிர்கால சந்ததிக்காய் நாம் பாதுகாக்க என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**செல்வி.து.இலக்கியா**
**மட்/தாழங்குடா விநாயகர்**
**வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் மரணிக்கவில்லை

மகள் நபீஸா வாப்பாவ இன்னும் காணல்ல சரியான கவலையாக் கிடக்கு நாடு இருக்குற நிலையுல கொஞ்சம் கோல் பண்ணிப் பாருங்க என வினயமாகக் கேட்டாள் தாய் பாத்திமா.

ஆம் காதர் சந்தையில் மரக்கறி விற்பனை செய்யும் ஒரு வியாபாரி ஆவார் அவரின் வருமானத்தை நம்பி வீட்டில் ஆறு உறுப்பினர்கள் உள்ளனர். காதர் காலை 6 மணிக்கு சந்தைக்குச் சென்றால் பின்னேரம் 4 மணிக்கு வீட்டுக்கு வந்து விடுவார். ஆனால் அன்று மாலை 6 மணியாகியும் காதர் வீட்டுக்கு வரவில்லை. நபீஸா வாபாவுக்கு கோல் பண்ணினாள். கோல் போய்க் கொண்டிருந்தது. பதில் இல்லை காதரின் நெருங்கிய நண்பரான வஸீருக்கு கோல் எடுத்தால் நபீஸா!!

அப்போது பதற்றத்துடன் ஓடி வந்தார் குமார். மகள் நபீஸா வாப்பாவ போலீஸ் பிடிச்சுக் கொண்டு போயிட்டதாமே என்ற செய்தி அறிந்து ஓடி வாறன் என்று பதற்றத்துடன் கூறினார். குமார் கூறியதை கேட்ட நபீஸாவும் பாத்திமாவும் செய்வது அறியாது அப்படியே சிலையாக நின்று விட்டார்கள். குமாரும் காதரும் சிறு வயது முதலே பால்ய நண்பர்கள். குமாரின் நன்மை தீமையில் காதரும் காதரின் நன்மை தீமையில் குமாரும் பங்கு கொள்ளும் அளவு உத்தம நண்பர்களாக உலா வந்தார்கள். குமார் தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமையாளராக கடமையாற்றினார். அவர் பதவிக்கேற்ப பந்தா இல்லாமல் பழகக் கூடியவர். அவரின் மனைவி சாந்தாவும் பெயருக்கேற்ப சாந்தமானவள். அவளும் காதரின் குடும்பத்துடன் நல்ல ஒட்டுறவாக இருந்தாள். அவர்களுக்கு இரு பிள்ளைகள். இருவரும் கொழும்பில் பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வந்தனர். விடுமுறைக்கு பிள்ளைகளை கூட்டி வருவதற்கு குமாரின் குடும்பம் செல்லும் போது காதரின் குடும்பத்தினரையும் கூட்டிச் செல்வார்கள் பார்ப்பவர்கள் வியக்கும் வண்ணம் இரு குடும்பம் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர்.

சிறிது நேரத்தில் சுய நினைவுக்கு வந்த பாத்திமா என்ன அண்ணா! சொல்கிறீர்கள். என்ன நடந்தது என்று விளக்கமாக சொல்லுங்கள் என்றாள்.

அது வந்து ஏப்ரல் 21ஆந் திகதி உயிர்த்த ஞாயிறு அன்று தீவிரவாதிகளால் நடாத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் காதருக்கும் சம்பந்தம் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பிடித்துக் கொண்டு போனார்களாம். இதைக் கேட்டதும் பாத்திமா "ஒரு பிராணிக்கும் தீங்கு செய்யாத மனுசன் அவரா அவ்வளவு உயிரும் அழியக் காரணமாக இருக்கப்போறார். இது யாரோ எங்கள் குடும்பத்தின் மீது சுமத்திய வீண் அபாண்டம் யா அல்லாஹ்! இந்த நோன்பு நாளையில அவரு இல்லாம நாங்க என்ன கஷ்டப்படப் போறோமோ! பாவிகள் அநியாயமாக உயிர்களைக் கொன்று எல்லா முஸ்லிம்களையும் ஏனையவர்கள் சந்தேகப்படும் படியும் நிம்மதி இல்லாமலும் செய்து விட்டானுகளே இவனுகளுக்கு நரகம் தான் கிடைக்கும்" என ஒப்பாரி வைத்துப் புலம்பினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் கேட்டதும் குமார் சரி சரி நீங்க எழும்புங்க தங்கச்சி நடந்தத நினைச்சிப் பிரியோசனமில்லை இனி நடக்கப்போறத பார்ப்பம். நான் முதல்ல பொலீஸ் நிலையத்துக்கு போய் என்ன நடந்தது என்று விசாரிச்சுட்டு வாறன் என குமார் கிளம்பினார்.

நீண்ட நேரத்தின் பின் நினைவு வந்த நபீஸாவும் வாப்பாவுக்கு நேர்ந்த அவலத்தைக் கேட்டுக் கண் கலங்கினாள்.

பொலீஸ் நிலையத்திற்கு சென்ற குமார் தனக்குத்தெரிந்த பொலீஸ் அதிகாரி ஒருவரிடம் காதரின் விபரத்தைக் கூறி விளக்கம் கேட்டார். காதரை சந்தேகத்தின் பெயரில் கைது செய்துள்ளோம் இப்போது அவரைப் பார்க்க முடியாது, விசாரணை நடைபெற்று வருகின்றது விசாரணை முடிந்த பின்னரே காதரை விடுவிக்க முடியும் எனவும் அதிகாரி பதிலளித்தார்.

கவலை தோய்ந்த முகத்துடன் வீட்டுக்கு வந்த குமார் துக்கம் தாளாமல் கதிரையில் அமர்ந்தார். அவரின் நினைவுகள் பின்னோக்கி நகர்ந்தன. குமார் அவசர வேலை ஒன்றின் காரணமாக மோட்டார் சைக்கிளில் விரைந்து கொண்டிருந்தார் முன்னால் வேகமாக வந்த லொரி ஒன்று தன் கட்டுப்பாட்டை இழந்து குமாரின் மோட்டார் சைக்கிளுடன் மோதியது. எதிர்பாராவிதமாக தூக்கி வீசப்பட்ட குமார் பின் தலை அடிபட்டு இரத்த வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தார். செய்தி சாந்தாவுக்கு அறிவிக்கப்பட்டது விரைந்து வந்த சாந்தா தலையிலடித்துக் கொண்டு அலறினாள். அடக் கடவுளே! இவருக்கு இப்படி ஆகி விட்டதே! சுகதேகியாக வந்தவர் குற்றுயிரும் கொலையுயிருமாக் கிடக்காரே எனத் தேம்பித் தேம்பியழுதாள்.

அருகில் நின்றவர்களின் உதவியுடன் குமாரை மருத்துவமனைக்குக் கொண்டு சேர்த்தாள், குமார் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவரைப் பரிசோதித்த டாக்டர் அவருக்கு அதிக இரத்தம் வெளியேறி விட்டதாகவும் உடனடியாக "0"குறுப் இரத்தம் பாய்ச்சவேண்டும் எனவும் கூறினார். சாந்தா செய்வதறியாது திகைத்து நின்ற வேளையில் ஆபத்தறிந்தவனாக அங்கு வந்து சேர்ந்தார் காதர். என்ன தங்கச்சி நடந்த செய்தி கேட்டு ஓடிவாறன். அண்ணா அவருக்கு 0 குரூப் ரத்தம் உடனடியாக வேணுமாம் எனக்கு கையும் ஓடல காலும் ஓடல இப்ப நான் என்ன செய்ய எனப் புலம்பினாள்.

கவலைப்படாதீங்க தங்கச்சி எனது இரத்தமும் 0 குரூப் தான். நான் குமாருக்கு இரத்தம் குடுக்கிறன். டொக்டரிட்ட உடனடியாக அதற்குரிய ஏற்பாட்டைச் செய்யச் சொல்லுங்க என்றார் காதர். நன்றிப் பெருக்குடன் காதரை நோக்கினாள் சாந்தா.

காதரின் இரத்தம் கொடுக்கப்பட்டு புனர் ஜென்மம் பெற்று மீண்டெழுந்தார் குமார். குணமாகி எழுந்ததும் காதர் நீசெய்த உதவிய நான் என் உயிர் உள்ள வரை மறக்க மாட்டன் என்று அவரின் கையைப் பிடித்துக் கொண்டு நாதழுதழுக்கக் கூறினார் குமார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை விடு குமார் நீ உயிர் பிழைச்சு வந்ததே பெரிய விசயம் இதற்கு இறைவனுக்குத் தான் நன்றி சொல்ல வேணும் என்றார் காதர்.

பழைய நினைவுகளில் இருந்து மீண்ட குமார் தன் மனைவியிடம் விபரத்தைக் கூறினார். சாந்தாவும் கவலைப் பட்டார்." காதர் இல்லாம பாத்திமா ரொம்ப கஸ்டப்படுவா. அவகுட நோன்பு காலம் வேற நான் சந்தைக்குப் போய் ஒரு மாதத்திற்குத் தேவையான வீட்டுச் சாமான்களை வாங்கிவாறன் 2பேரும் கொண்டுபோய் கொடுப்பம் என்றார் குமார். சாந்தாவும் சரி என தலையாட்டினாள்.

வாங்கிய பொருட்களுடன் குமாரும் சாந்தாவும் காதரின் வீட்டுக்கு சென்றனர். குமாரைக் கண்ட பாத்திமா "என்ன அண்ணா பொலிசுக்குப் போய் விசாரிச்சீங்களா? ஏதாவது தகவல் தெரிந்ததா?" என கவலையுடன் கேட்டாள். "சந்தேகத்தின் பேரில் கூட்டிப்போயுள்ளார்கள் விரைவில் வந்துவிடுவார் என குமார் பதிலளித்தார்.

பொருட்களைக் கொடுத்த சாந்தாவிடம் "எங்களால உங்களுக்கும் கஸ்டம் தான். என் தலைவிதி இந்த சங்கையான நோன்பைக் கூட நிம்மதியா நோற்க விடாமச் செய்திட்டானுகள்" என கண் கலங்கினாள் பாத்திமா ஆறுதல் கூறி விடை பெற்றனர் குமார் தம்பதியினர்.

அவர்கள் சென்றதும் பாத்திமா நபீஸாவிடம் "பார்த்தீங்களா மகள் வேறு மதத்தவர்களாக இருந்தாலும் குமார் மாமா குடும்பத்தினருக்கு நம்மீது எவ்வளவு அக்கறை நமது கஸ்டத்தில் கைகொடுக்கின்றனர். இந்த நோன்புல செய்ற உதவிக்கு அல்லாஹ் அவர்களுக்கு நீண்ட ஆயுளை கொடுக்க வேண்டும் என இறைவனை மனமுருக வேண்டினாள். நம்மால் இத மட்டும்தான் செய்யமுடியும்.

குமார் பொலிசுக்கும் காதரின் வீட்டுக்கும் அலைவதுமாக நாட்கள் நகர்ந்தன. உம்மா எனக்கு பெருநாளைக்கு மொடன் சல்வார் எடுத்து தர வேணும் என அடம்பிடித்தாள் இளையமகள் நப்றா. " ஒ இப்பநான் இருக்குற நிலமையில உனக்கு அது ஒண்ணுதான் குறைச்சல். அங்க வாப்பா கிடந்து கஸ்டப்படுறாரு உனக்கு சல்வார் கேட்குதா என மகளை கடிந்துரைத்தாள் பாத்திமா.

காதர் மரக்கறி வியாபாரம் பண்ணினாலும் பிள்ளைகளை கஸ்டம் தெரியாமத்தான் வளர்த்திருந்தார். பாத்திமா நபீஸாவிடம் "நம்மட கஸ்டம் சின்னப் பிள்ளைகளுக்கு விளங்கவா போகுது. மத்தப்பிள்ளைகள் எல்லாம் புத்தாடை உடுக்கும் போது நம்முட பிள்ளைகள் பழைய உடை உடுத்தினால் அதுகள்ற மனம் என்னபாடுபடும். 4பேருக்கு உடுப்பு எடுப்பது என்றாலும் குறைந்தது 10,000/= வேணும். இதற்கு நான் எங்கே போவேன். எல்லாத்துக்கும் அந்த அல்லாஹ்தான் இருக்கான்" என்று தனது மனக் கிலேசத்தை மகளிடம் வெளிப்படுத்தினாள். கடைக்குட்டி நபீல் ஓடி வந்து உம்மா வாப்பா வரமாட்டாரா? நான் அவருடன் பெருநாள் தொழப்போகமாட்டேனா? என ஆதங்கத்துடன் கேட்டான். இல்லடா மகன் அவர் வந்துடுவார். எனமகனை ஆறுதல் படுத்தினாள் பாத்திமா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோன்பு 20ம் நாள் குமார் ஒரு பார்சலுடன் வந்தார். தங்கச்சி இதுல பிள்ளைகளுக்கும் உங்களுக்கும் உடுப்புகள் இருக்கு. வாப்பா இல்லையே என்று குறை பிள்ளைகளுக்கு வரக்கூடாது. இதற்காகத்தான் நான் பாடுபடுறன் என்று பார்சலைக் கொடுத்தார். நோன்பு 28ல் காதர் குற்றமற்றவர் என நிரூபிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார் குமார் தான் காதரைக் கூட்டி வந்தார். கணவரைக் கண்டதும் பாத்திமா கண்ணீர் விட்டு அழுதார். இது ஆனந்தக் கண்ணீர்தான் எனினும் குமாரின் உதவிக்கான காணிக்கையாகவும் இது அமைந்திருந்தது.

காதரின் குடும்பம் ஈகைத் திருநாளாம் நோன்புப் பெருநாளை மகிழ்ச்சியோடு கொண்டாடியது. அன்று பகல் காதரின் வீட்டில் குமார் தம்பதியினருக்கு உணவு ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் குமாரும் மகிழ்ச்சியோடு கலந்து கொண்டார்.
பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா?

**சிறுகதைப்போட்டி**
**திறந்த மட்டம்**
**முதலாமிடம்**

**திருமதி.சல்மாநாச்சி முஹம்மட் இப்ராஹிம்**
காங்கேயனோடை

**பாலர் பிரிவு கையெழுத்துப் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம்**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | - | **செல்வி.ரு.ஸதுர்நாத்**<br>**மட்/நவரத்தினராசா வித்தியாலயம்** |
| 2ம் இடம் | - | **செல்வி.பி.கே.இதுஷாஆஞ்சலி**<br>**மட்/நவரத்தினராசா வித்தியாலயம்** |
| 3ம் இடம் | - | **செல்வி.சு.லத்திக்கா**<br>**மட்/சிவமணி வித்தியாலயம்** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலாட்டுப் பாடல்கள்

நாட்டுப் புறப்பாடல்கள் என்பது நம் முன்னோர்கள் நமக்கு அளித்த அருஞ் செல்வங்கள் எனலாம். இயற்கை அறிவும் கலை உணர்வும் கொண்ட நாட்டுப்புற மக்களின் உள்ளத்திலே எழும் உணர்ச்சிப் பெருக்கினால் உருவானவையே இந் நாட்டார் பாடல்களாகும். நாட்டார் பாடல்கள் ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதப்பட்டவை அல்ல. பரம்பரை பரம்பரையாக செவிவழியாகக் கேட்கப்பட்டு வருவனவாகும். இவை பாமர மக்களின் உள்ளத்து உணர்ச்சிகளை உயிராகக் கொண்டவைகளாகும். சுருங்கக் கூறின் இவை சாதாரண மக்களின் பாடல்களாகும்.

இத்தகைய நாட்டார் பாடலானது நாட்டுப்புற அதாவது கிராமப்புற மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருக்கின்றது. எவ்வாறெனில் வயலில் வேலை செய்பவர்களும் மீன்பிடிக்கப் போகும் தாய்மாரும் என கிராமிய மக்களே தாம் வேலைகளில் ஈடுபடும் போது பாடுகின்றனர். இவர்கள் தமது வேலையின் கடினத்தை மறைக்கவும் தம் பிள்ளைகளை தூங்க வைக்கவும் இவ்வகை நாட்டார் பாடல்களினை பாடுகின்றனர். எழுத்தறிவில்லாத தொழில் மாந்தரின் இதயத்தில் எழுகின்ற உணர்ச்சியே பாடலாகிறது.

அத்தகைய பாட்டில் ஓசை நயமும் ஓசை இன்பமும் இருக்கும். அத்துடன் தாளக்கட்டும் சொல் அழகு, தொடை அழகு என்பனவும் இருக்கும். எனினும் இலக்கண வரம்பிற்கு உட்படாமலும் இருக்கும் என நம்நாட்டு அறிஞரான சதாசிவ ஐயர் கூறுகின்றார். ஒரு நாட்டின் கலாசார பாரம்பரியத்தினை பிரதிபலிப்பன நாட்டுப் பாடல்கள்" எனவும் "இலட்ச கணக்கான கிராமிய இசையோடு இது எனவும் இசைப் பேராசிரியர் பி.சாம்பமூர்த்தி நாட்டார் பாடல் பற்றி விளக்கமளிக்கின்றார். அத்துடன் நாட்டுமக்கள் பாடி மகிழும் பாடல்களே நாட்டார் பாடல்களாகும். நாட்டுப் பாடல்கள் வழங்காத ஊர்களே இல்லை.

உலகெங்கிலும் அவை வழங்குகின்றன. இப் பாடல்கள் ஊருக்கு ஊர் மாற்றமுடையன. ஏனெனில் இவை ஏட்டில் எழுதாதவை. இலக்கணத்தைப் பாராதவை. இதயத்துடிப்பில் எழுந்தவை. ஆகவே உள்ளங்களை கவர்ந்தவை. காலவெள்ளத்துக்கு இரையாகவில்லை" என்றெல்லாம் நாட்டுப்புற பாடலுக்கான விளக்கம் பலரால் தரப்பட்டுள்ளன.

நாட்டார் பாடலானது நாட்டுப்புற பாடல், கிராமியப் பாடல், வாய்மொழிப் பாடல் என பலப் பெயர்களால் கூறப்படுகின்றது. இவ்வாறான நாட்டார் பாடாலானது தாய்மார் அருமருந்தான தமது பச்சிளங் குழந்தைகளைக் கண்வளரச் செய்வதற்காக மெல்லிசையோடு பாடும் பாராட்டுப் பாடல்கள், காதற் சுவையும் நகைச்சுவையும் உயிரோட்டமாக மிளிர நெஞ்சையள்ளும் திறன் கொண்டவையான காதல் பாடல்கள், பொழுது போக்கிற்காகவும், தெய்வ வழிபாட்டிற்காகவும் பாடுகின்ற விளையாட்டுப் பாடல்கள் பக்திப் பாடல்கள் மற்றும் இடையர், உழவர், மீனவர், குறவர், வண்டிக்காரர் முதலியோர் பாடுகின்ற தொழிற்பாடல் என பல வகைப்படுகின்றது. இப் பலவகையிலும் தாலாட்டுப் பாடலானது மிக முக்கிய இடத்தை பெறுகின்றது. மனித வாழ்க்கைக்கு அன்றாடம் பயன்படக்கூடிய ஒன்றாகவே நாட்டார் பாடல்கள் அமைகின்றன. அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையிலே தாலாட்டுப் பாடலும் தாயானவள் தன் குழந்தையை தூங்க வைப்பதற்காக பயன்படுகின்றது. தாலாட்டுப் பாடல்களைப் பாடுகின்ற போது குழந்தைகளிடத்தில் இன்பம் ஏற்படுகின்றது.

தாலாட்டுப் பாடல்களில் பசுமையான நினைவுகளும் பக்குவமான கற்பனைகளும் இளவேனிற் கால இன்ப அழகும் தனித்துவம் பெற்று மிளிர்வதைக் காணலாம். இதனால் குழந்தையின் அழுகை நின்று விடுவதுடன் குழந்தையின் மனதில் புத்துணர்ச்சியும் ஏற்படும். குழந்தை பிறந்த நாட் தொட்டு அவன் மனிதனாகி மரணமாகும் வரை நிகழ்வன யாவும் சுவை தரும் சம்பவங்களாக நாட்டார் பாடல்களில் இடம்பெறுகின்றன. அழுது அடம்பிடிக்கும் குழந்தைகளை அடக்கும் ஆயுதமாக அன்னையரிடம் தாலாட்டு அமைந்திருக்கின்றது எனலாம். இதனை தாலாட்டுப் பாடலின் சிறப்பாகவும் கூறலாம்.

ஆராரோஆரிரரோ
ஆரடித்து நீயழுதாய்
கண்மணியே கண்ணுறங்காய்

அத்தை அடித்தாளோ அமுதூட்டும் கையாலே
மாமன் அடித்தானோ மகிழ்தெடுக்கும் கையாலே
அண்ணனடித்தானோஅணைத்தெடுக்கும் கையாலே
அடித்தாரை சொல்லியழு
ஆக்கினைகள் பண்ணி வைப்போம்"

என அழுகின்ற பிள்ளைக்கு தாயொருத்தி பாடுகின்றாள். இதனை கேட்ட குழந்தையானது ஆறுதலடைந்து தூங்குகின்றது. தாலாட்டு பாடலானது பாமர மக்களால் பாடப்பட்டாலும் ஓசை நயமிக்கதாக காணப்படுகின்றது. விழித்துக் கொண்டிருக்கும் குழந்தைக்கு வேடிக்கை காட்டும் தாய் குழந்தை விழிகளை மூடித் துயில் கொள்ள வேண்டும் என்று எண்ணும் போது பாடலிசைக்கிறாள். இதையே நாம் தாலாட்டு என்கின்றோம். அத்துடன் தாயொருத்தி தன்னை ஊரார் மலடி என ஏசாமல் இருக்க வந்து உதித்த தன் மகனை பின்வருமாறு தாலாட்டுகிறாள்.

மலடி மலடியென்று மாநிலத்தோர் ஏசாமல்
மலடிக்கொரு குழந்தை மாயவனார் தந்த பிச்சை
இருளி இருளியென்று இரு நிலத்தோர் ஏசாமல்
இருளிக்கொரு குழந்தை ஈஸ்வரனார் தந்தபிச்சை"

முற்காலத்தில் மிகவும் சிறப்புப்பெற்றிருந்த இந் நாட்டார் பாடல்களானது இன்றைய காலகட்டத்தில் பெருமளவில் பாடப்படுவதில்லை. ஆனால் பாமரமக்கள் சமூகம் இன்றும் பேணி வருகிறது. ஆனாலும் நாட்டார் பாடல்களினை அழிவடைந்து செல்லவிடாது. எமது சமூகத்துடன் இணைத்து எதிர்கால சமூகத்திடம் ஒப்படைக்க வேண்டிய கடமைக்கும் பொறுப்புக்கும் நாமே உடையவர்களாகின்றோம்.

**செல்வி.கோ.சஜிந்தாஜினி**
மட்/கிரான்குளம் விநாயகர் ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்வினை தன்னைச் சுடும்

சுந்தரும், குமாரும் ஏழாம் தரம் படித்து வந்தார்கள். குமார் படிப்பில் கெட்டிக்காரன். ஓர் நாள் சுந்தர் குமார் மீதுள்ள பொறாமையினால் ரூபனின் பாடசாலை பையினுள் இருந்த புத்தகம் ஒன்றை எடுத்து குமாரின் பாடசாலை பையினுள் வைத்து விட்டான்.

ரூபன் " புத்தகத்தை காணவில்லை சேர்" ஆசிரியரிடம் முறையிட்டான்.
அவ்வேளை எல்லோருடைய பாடசாலை பைகளும் சோதனை செய்யப்பட்டது.
சுந்தரின் பாடசாலை பையில் இருந்தே புத்தகம் எடுக்கப்பட்டது.
திகைத்தான் சுந்தர் சிந்தித்தான்.

"குமாரின் பாடசாலை பைக்குள் நான் வைத்த புத்தகம் எனது பாடசாலை பைக்குள் எப்படி வந்தது."

கடந்த வருடம் வெள்ள அனர்த்தம் இடம் பெயர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஒரே மாதிரியான பாடசாலை பை.

எல்லாம் ஒரேமாதிரியான பாடசாலை பை. தனது பாடசாலை பையில் திருடிய புத்தகத்தை வைத்த அவமானத்தால் தலை குனிந்தான் சுந்தர்.

**சிறுவர் கதை ஆக்கம்**
**திறந்தமட்டம்**
**முதலாமிடம்**

திரு.த.இன்பராசா
புதுக்குடியிருப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

மண்முனைப்பற்று பிரதேச செயலகமும் கலாசார அதிகாரசபையும் இணைந்து நடாத்தும் பிரதேச இலக்கிய விழாவினை முன்னிட்டு வெளிவரும் "புதிய மழை தூறல் III" இம்முறை வெற்றி பெற்ற ஆக்கங்களுடன் சமூகவியலில் நாட்டாரியல் எனும் தொனிப்பொருளிலமைந்த ஆக்கங்களையும் தாங்கி வருகின்றது.

இந்நூலிற்கான வாழ்த்துச் செய்தியை வழங்கியவர்களுக்கு முதற்கண் நன்றியை தெரிவிப்பதுடன் இந்நூலுக்கான ஆக்கங்களை வழங்கிய மாணவர்களுக்கும் கலைஞர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் இந்நூல் சிறப்புற வெளிவர சகல விதத்திலும் உதவிய பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் ஆக்கங்களை கணனிப் பதிவு செய்த பட்டதாரி பயிலுனர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் இந்நூலுக்கான பகுதி அனுசரனை வழங்கிய அல் ஷுப்பான் நலன்புரிச்சங்கத்துக்கும், அட்டைப் படத்தை வடிவமைத்து தந்துதவியவர்களுக்கும் சிறந்த முறையில் நூலை அச்சிட்டு தந்த அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பிரதேச கலாசார அதிகார சபை**
**மண்முனைப்பற்று.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனுசரணை :

கலாசார அலுவல்கள் திணைக்களம்

அஷ்ஷுஃப்பான் நலன்புரிச் சங்கம்
பீ.ஜே.எம். வீதி,
காத்தான்குடி - 06

ஜெஸ்லியா அச்சகம், ஆரையம்பதி 065 2051283

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org